# வா...
# பொன்மயிலே...

அகிலா கோவிந்த்



வா... பொன்மயிலே...

AKI

வா...
பொன்மயிலே...

அகிலா கோவிந்த்

## உள்ளே...

1. வா... பொன்மயிலே... 5

2. நந்து செல்லம் 138

# வா... பொன்மயிலே...

## 1



மதுமதிக்கு அந்த நிமிடம் ஒரே பரபரப்பாக இருந்தது. அப்படியொரு வினோத அனுபவம் ஏற்பட்டது அதிசயமும் கூட. தானுண்டு தன் வேலையுண்டு என இருப்பவள் இப்படி ஒரு வம்பில் மாட்டிக்கொள்வது அவள் கற்பனையிலும் எதிர்பாராதது.

அவளுக்குப் பிடித்தமான தோழி சங்கீதாவுடன் 'கோல்டன் டிவி நெட்வொர்க்' அலுவலகம் சென்ற போது அந்த 'வம்பு' ஏற்பட்டது.

தோழி சங்கீதாவுக்கு அந்த பிரபல கோல்டன் டிவி நிறுவனத்தில் தொகுப்பாளினியாக பணிபுரிய கொள்ளை ஆசை. தினம் தினம் தன் மூஞ்சியை தொலைக்காட்சிப் பெட்டியில் பார்த்து கிறுகிறுத்துப் போகும் அப்படி ஒரு கிறுக்குத்தனம்!

அதனாலேயே சந்தடி சாக்கில் அந்நிறுவனத்திற்குச் சென்று ஒரு அப்ளிகேஷன் கொடுத்து வைக்க நினைத்தாள். நினைத்தவளுக்கு தனியே போகிற அளவுக்கு 'தில்' இல்லாமல் போக, ''ப்ளீஸ்.. நீயும் வாயேன்... எனக்காக..'' என மறுக்க முடியாதளவுக்கு மதுமதியிடம் கெஞ்சி துணைக்கு அவளையும் கூட்டிக் கொண்டு நுழைந்தாள்.

எதிர்பட்ட கட்டை குட்டை மனிதர்களின் வினோத பார்வைகளைத் தாண்டி இருவரும் கோல்டன் டிவியின் நிர்வாக அறையை நெருங்கினார்கள்.

அனுமதி பெற்று கண்ணாடிக் கதவுகளைத் திறந்து நுழைந்ததும் குஷன் சேரில் அலட்சியமாய் அமர்ந்திருந்த ஒருவன் திரும்பினான்.

'என்ன விஷயம்?' பார்வையாலே புருவம் உயர கேட்டவனை இருவரும் உற்றுப் பார்த்தனர்.

நெடு நெடு உயரம், சுருளான முடி, தவழும் பரந்த நெற்றி, கூரான மூக்கு, முறுக்கி விடப்பட்டிருக்கும் அடர் மீசை, கொஞ்சமும் சிரிக்க மாட்டேன் என்று அடம் பிடிக்கும் இறுக்கமான உதடுகள்.

அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அந்த இறுக்கமான உதடுகள் கோபமாய் அசைந்தன.



''என்ன விஷயம்? ம்ம்...?''

அந்த அதட்டலில் சங்கீதா திகைக்க மதுமதி சுதாரித்தவளாய், ''காம்ப்பியரிங் வேலைக்கு அப்ளிகேஷன்... கொடுக்க வேண்டும். கொஞ்சம் விபரம் சொல்ல முடியுமா?'' என்றாள் பவ்யக் குரலில்.

அவன் லேசாக கண்களை உருட்டி மதுமதியை பார்த்தான்.

''யாருக்கு வேலை இருவருக்குமா?''

''இல்லை.. இவளுக்கு மட்டும்தான்...''

''அப்படியானால்.. நீ...?''

''நான்.. சும்மா.. துணைக்கு வந்தவள்...''

மதுமதி கொஞ்சமும் பயமற்றவளாய் நன்றாக நிமிர்ந்து நேருக்கு நேராய் அவன் கண்களைப் பார்த்துச் சொல்ல.. அவன் இமைகளை நன்கு விரித்து அவளைப் பார்த்தான்.

சங்கீதாவைப் போல் செயற்கையாய் இல்லாமல் இயற்கை அழகுடன் ரதியாய் பளீரிடும் அவளது தங்க நிற அழகையும், நீளமான கூந்தலுடன் கூடிய நளினமான உடலமைப்பையும் வியந்து ரசித்துப் பார்த்தவன் உதடுகளை மறுபடியும் அசைத்தான்.

''பெயரென்ன...''

''இவள் பெயர் சங்கீதா. படிப்பு.. எம்.ஏ. இன்னும்... இவள்...''

மதுமதி முடிப்பதற்குள், ''உன் பெயரைக் கேட்டேன்.. சொல்...'' என்றான் அவன் குரலை உயர்த்தியவாறு.

மதுமதி ஒருகணம் திடுக்கிட்டவள், சுதாரித்தவாறு, ''என் பெயரா..? மதுமதி. ஆனால் நான் வேலை தேடி வரவில்லை. இவளுக்காகத்தான்..!'' மீண்டும் அவன் குறுக்கிட்டான்.

''அவள் இருக்கட்டும்.. உன்னைப் பற்றி பேசு. உனக்கு காம்ப்பியரிங்கில் விருப்பமிருக்கிறதா?''

''விருப்பமில்லை..! நீங்கள் கேள்விகள் கேட்க வேண்டியது என்னிடமல்ல. இவளிடம்...!'' கைகளை சங்கீதாவை நோக்கி சுட்டிக்காட்டி மதுமதி தெளிவான குரலில் பேச... அவன் முதல் முறையாய் இறுக்கம் தளர்ந்து கடகடவென சிரித்தான்.

இந்த மூஞ்சு சிரிக்கக்கூட செய்யுமா... என வியந்து அவனையே பார்த்தாள் மதுமதி.

''அவளை விடு. உனக்கு இஷ்டமா? காம்ப்பியரிங்கில் உனக்கு விருப்பமிருக்கிறதா...? உடனே சொல். உனக்கு வேலை ரெடி..!''

அவன் கண்களை உருட்டி அதே படபடப்புடன் பேச மதுமதியும் பரபரத்தாள்.

''என்னை விடுங்கள். அவளுக்கு.. அவளுக்கு வே லை இருக்கிறதா? அதைச் சொல்லுங்கள்..!''

''இல்லை மிஸ். மதுமதி. உனக்கு, உன் அழகுக்கு மட்டும் வேலை தயாராய் காத்திருக்கிறது. அதுவும் அருமையாய் கொழுத்த சம்பளத்துடன்.. என்ன வேலைக்கு சேர்கிறாயா?'' - அவன் சர்வசாதாரணமாய் கேட்க.

மதுமதி கோபத்துடன் விழிகள் முழுவதையும் விரித்தாள்.



''என்ன விழிக்கிறாய்?

சம்பளம்.. ஒன்று... இரண்டல்ல.. மாதம் ஐம்பதாயிரம் ரூபாய்! காலையில் ஒரு மணி நேரம் மாலை ஒரு மணி நேரம் ஸ்டூடியோவில் உன் உடம்பை நீ மினுக்கிக் கொண்டு வந்து காட்டினால் போதும்... மற்றவற்றை காமிரா பார்த்துக் கொள்ளும்.. புரிகிறதா? என்ன சொல்கிறாய்?'' - அவன் பாட்டுக்கு சொல்லிக் கொண்டே போக புயலாய் வெடித்தாள் மதுமதி.

''ஹலோ.. மிஸ்டர்.. ஸ்டாப் தட்.. ப்ளடி...! நான் வேலை அவளுக்கென்று சொல்லுகிறேன். திரும்பத் திரும்ப என்னைப் பற்றியே பேசுகிறாய்? உனக்கு அறிவே இல்லையா?''

மதுமதி கோபமாய் ஒருமையில் விளித்தும் அவன் கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாதவனாய் அவளைப் பார்த்தான்.

''ம்ஹூம்... இந்தத் துள்ளல் ஜாஸ்திதான்...! எத்தனை பெண்களிடம் பார்த்திருக்கிறேன். ரொம்பவும் அலட்டாதே. நீ கண்டிப்பாய் இந்த காம்ப்பியரிங் வேலைக்கு வரத்தான் போகிறாய். அரைகுறை ஆடையுடன் அசிங்கமாய் என் முன் நடமாடத்தான் போகிறாய். நான் பார்க்கத்தான் போகிறேன்...!'' - அவன் பெருங்குரலில் சொல்லி ஹாஸ்யத்துடன் சிரிக்க ஆரம்பிக்க.. அதற்கு மேல் அவனையே முறைத்துக் கொண்டிருந்த மதுமதியை தள்ளாத குறையாய் இழுத்துக் கொண்டு வந்தாள் தோழி சங்கீதா.

''விடு.. மதுமதி.. எனக்கு வேலை இல்லையென்று ஆயிற்று. இனி இங்கு நிற்பது... பேசுவது எல்லாம் வேஸ்ட்.. பேசாமல் போவோம்...''

எங்கே.. மதுமதி மனம் மாறி வேலைக்கு சம்மதித்து விடக் கூடாது.. என்ற பயம் அவளுக்கு!

விடுவிடுவென டிவி அலுவலகத்தை விட்டு இருவரும் வெளிவந்தனர்.

'அந்தத் திமிர்க்காரனை சும்மா விடக்கூடாது...' வெளி வந்தும் கோபம் அடங்காதவளாய் முத்துப்பற்களை வேகமாய் கடித்தாள் மதுமதி.

## 2



வீட்டிற்கு வந்தும் கொதிப்பு அடங்கியபாடில்லை. ரூமில் குறுக்கும் நெடுக்கும் வேகமாய் நடந்தாள், மதுமதி.

எவ்வளவு ஈஸியாக கேட்டுவிட்டான்? என்ன ஒரு திமிரான ஆணவம் அவனுக்கு? மாட்டேன்.. விருப்பமில்லை என்று சொன்னால்.. நீ கண்டிப்பாய் வருவாய் என உறுதி அல்லவா சொல்கிறான்?

அண்ணனிடம் சொல்லலாமா என்று நினைத்தாள். பொதுவாக நடக்கும் எந்த விஷயத்தையும் அவள் மறைத்ததில்லை. இரவு உணவு உண்ணும்போது அலுவலகத்தில் நடந்த அத்தனையையும் இருவரிடமும் கொட்டித் தீர்த்து விடுவாள்.



இப்போதும் அதே எண்ணத்தில் இரவு டைனிங் டேபிளில் அமர்ந்தபோது அண்ணனிடமும் அண்ணியிடமும் சொல்ல ஆரம்பித்து விட்டாள். தோழி சங்கீதாவுடன் அந்த டிவி தொடர் கம்பெனிக்கு சென்றது முதல் அந்த திமிர்க்காரன் கேட்டது வரை ஒன்றுவிடாமல் சொன்னாள்.

அண்ணன் ரகுராமன் புருவம் உயர கேட்டவன், ''அப்படியா சொன்னான்?'' என்றான் வியப்பாய். அண்ணியோ, ''மதும்மா, ஐம்பதாயிரம் பணம் தருவதாகச் சொன்னார்களா?'' என்றாள் வாய் பிளந்தவளாய்.

அண்ணி கேட்டதும், மறுபடியும் அவன் மேல் ஆத்திரம் கொண்டவளாய் பற்களைக் கடித்தவள், ''பணம்.. என்ன அண்ணி பணம்...? அதைவிட அந்த திமிர்க்காரன் பேசியதை நினைத்தால் எவ்வளவு எரிச்சலாய் வருகிறது தெரியுமா? பெண்கள் என்றாலே கேவலமாய் பணத்துக்காக எதையும் செய்வார்கள் போல அவன் பேச்சு இருந்தது. யாரிடமாவது நன்றாக அடி வாங்கப் போகிறான். அப்போதுதான் அவனுக்கு புத்தி வரும்...!'' என்றாள் மூச்சு வாங்க.

அத்தோடு அந்த பேச்சு முற்றுப் பெற்றுவிட்டது. மதுமதியும் அதை மறந்துவிட்டாள். இரண்டுநாள் கழித்து அண்ணன், ''மது, உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும்...'' என்றபோதுதான் விஷயம் வேறுவிதமாய் வருகிறது என்பது அவளுக்குப் புரிந்தது.

எதிர் சேரில் அவளை உட்காரச் சொல்லிவிட்டு மெல்ல பேச்சை ஆரம்பித்தான் ரகுராமன்.

''மது, இன்று.. அந்த டிவி தொடர் கம்பெனிக்குச் சென்றிருந்தேன்..'' என்றதும், ''என்ன டிவி கம்பெனிக்கு

சென்றாயா...? எதற்கு..? எதற்கு நீங்கள் சென்றீர்கள்...?'' என்றாள் படபடப்பும் கோபமுமாய்.

''பொறு.. பொறு மது.. அவசரப்படாதே... முதலில் நான் சொல்வதை முழுமையாகக் கேள்....'' என்றபடி ரகுராமன் ஆரம்பித்ததும் சிறுபிள்ளையாய் உதட்டைச் சுழித்து வேண்டாவெறுப்பாய் கேட்க ஆரம்பித்தாள்.

''மதும்மா, நீ சென்ற 'கோல்டன் டெலி பிலிம்ஸ்' மிகப்பெரிய டிவி கம்பெனி. பல மாநிலங்களில் பல மொழி தொடர்களை பெரிய டிவி நிறுவனங்களிடம் ஸ்லாட் வாங்கி தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தயாரிக்கும் டிவி தொடர்கள் எல்லாம் டி.ஆர்.பி. ரேட்டிங்கில் முதலிடம் வகித்து நிறைய டிவி ரசிகர்களை சம்பாதித்து கொடுத்திருக்கிறது...'' - சொல்லிய ரகுராமன் நிறுத்த, ''அதனால் என்ன?'' என்றாள் அவள் கோபம் குறையாதவளாய்.

''அப்படிப்பட்ட பெரிய கம்பெனி 'காம்ப்பியரிங்' செய்ய உன்னை அழைக்கிறது என்றால்... கொஞ்சம் யோசித்துப் பார் மது, இது ஒரு நல்ல வாய்ப்பு என்றே எனக்குப் படுகிறது..''

''என்ன.. என்ன சொல்கிறாய்...? என்னை காம்ப்பியரிங் பண்ணப் போகச் சொல்கிறாயா? என்னாயிற்று உனக்கு? அந்த திமிர்க்காரன் டிவி கம்பெனியில்...'' என்று அவள் ஆவேசமாய் குரலை உயர்த்தியதும் அவசரமாய் கைகளை அசைத்து அவள் பேச்சை நிறுத்திய ரகுராமன்,

''பார்த்தாயா முக்கியமான ஒன்றை சொல்ல மறந்து விட்டேன்.. அன்று நீ பார்த்தாயே.. அவன், அதான் நீ சொல்கிற திமிர்க்காரன்.. அவன் ஒன்றும் முதலாளி



இல்லை. சாதாரண புரொடக்ஷன் உதவியாளர்தான். அதுவும் யாரோ லீவில் இருப்பதால் தற்காலிக வேலை தானாம். நீ காம்ப்பியரிங் சென்றாலும், அவன் உன் கீழ் தான்.. உன் சொல்படி கேட்டு வேலை பார்க்கும் ஊழிய னாய்த்தான் இருப்பான் என்பதையும் தெரிந்து கொண் டேன். அதனால் அந்த திமிர்க்காரனால் உனக்கு எந்த பிரச்சினையும் வராது. உனக்கு விருப்பமிருந்தால் தாராளமாக நீ காம்ப்பியரிங் பண்ணலாம். என்ன சொல் கிறாய்?'' என்றான் ரகுராமன்.

மதுமதிக்கு அண்ணன் சொல்லியதில் 'அவன் முத லாளி இல்லை.. தற்காலிக வேலைக்காரன்...' என்பது மட்டுமே காதில் விழுந்தது. அது அவளது கோபத்தை இன்னும் அதிகப்படுத்தியது.

ஆப்டர் ஆல் ஒரு வேலை பார்ப்பவனுக்கு இவ்வளவு திமிரா? அவளை எவ்வளவு மட்டம் தட்டி பேசிவிட்டான். மறுபடியும் அதே இடத்திற்குச் சென்று அவனை வாங்கு வாங்கென்று வாங்க வேண்டும் போலிருந்தது.

அதற்காக.. அவளுக்குப் பிடித்தமில்லாத 'காம்ப் பியரிங்' வேலையைச் செய்ய அவளுக்கு இஷ்டமில்லை தான்!

''என்ன.. மது என்ன சொல்கிறாய்?'' என்று அண்ணன் மறுபடியும் கேட்டபோது உடனடியாக அவனிடம் மறுக்க மனமில்லாமல், ''யோசிக்க வேண்டும்..'' என்றபடி தலையில் கை வைத்துக் கொண்டாள்.

ரகுராமனும், ''உன் இஷ்டம். நான் வற்புறுத்தப் போவதில்லை...'' என முடித்துக் கொண்டான்.

ரகுராமன் அப்படிச் சொன்னாலும் உள்ளுக்குள் மதுமதி சம்மதிக்காதது அவனுக்கு ஏமாற்றமாகவே இருந்தது. மாலை மொட்டை மாடியில் அவள் காற்று வாங்கிக் கொண்டிருந்தபோது அவள் காதுபடவே கீழே ரகுராமன் அண்ணியிடம் பேசுவது கேட்டது.

''பார் சுமி, இந்த மதுக்குட்டிக்குப் புரியவில்லை. ஐம்பதினாயிரம் எவ்வளவு பெரிய தொகை? ஒரு மாத சம்பளமாய் அல்லவா தருவதாக சொல்கிறார்கள்... அதுவும் வெறும் காம்ப்பியரிங்குக்கு..! இவள் காம்ப்பியரிங் என்றால் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாள்...? தினம் காலையும் மாலையும் ஒரு மணி நேரம் கேமிரா முன் நின்று சிரித்தபடி பேசினால் போதும். அவ்வளவுதான்...! இந்த வாய்ப்பு எல்லோருக்கும் கிடைக்குமா? இதை நம் மதுக்குட்டி புரிந்து கொள்ள மறுக்கிறாள்...''

அண்ணன் சொல்லிக் கொண்டே போக மதுமதிக்கு திக்கென்றிருந்தது. அண்ணன் அந்த பேச்சை அத்தோடு விட்டுவிடுவார் என்று பார்த்தால் மறுபடி ஆரம்பித்து விட்டாரே.. என ஒருகணம் நினைத்தவள் மறுகணம் அண்ணன் சொல்வது சரிதானா? நாம்தான் டிவி, காம்ப்பியரிங் பற்றியெல்லாம் தவறான எண்ணம் கொண்டிருக்கிறோமா? என்றும் நினைக்க ஆரம்பித்தாள்.

அது போதாதென்று இரவில் அண்ணி சுமித்ரா அவள் ரூமிற்கே தேடி வந்து விட்டாள். ''யோசித்தாயா.. மதும்மா.. அந்த டிவி காம்ப்பியரிங் பற்றி என்ன நினைக்கிறாய்?'' என்றதும் அண்ணியின் முகத்தையே விசித்திரமாய்ப் பார்த்தாள்.



இவ்வளவு நாள் வெகுளி என்று நினைத்துக் கொண்டிருந்த அண்ணிக்கு பணத்தாசையும் உண்டா என அதிசயித்தாள். அவள் நினைப்பை புரிந்து கொண்டவள் போல் அவளும், ''நீயே சொல் மதும்மா, எவ்வளவு நாளுக்குத்தான் இந்த ஒட்டு வீட்டில் உட்கார்ந்து கொண்டு கார்ப்பரேஷன் குழாயில் தண்ணீர் பிடித்துக்கொண்டு வாழ்க்கையை ஓட்டுவது? நாமும்... கார் பங்களா என ஒரு வசதியான வாழ்க்கை வாழ்ந்தால் எப்படி இருக்கும்? உன் அண்ணன் வாங்கும் சம்பளத்தில் இனி எத்தனை குட்டிக்கரணம் போட்டாலும் இது போன்ற வசதியான வாழ்க்கையை நினைத்துக் கூட பார்க்க முடியாது. கடவுள் அருளால் உனக்கு அப்படி ஒரு வாய்ப்பு வந்திருக்கிறது. கொஞ்சம் யோசித்துப் பாரேன் மதும்மா...!'' என்று கெஞ்சாத குறையாய் அண்ணி கெஞ்சியபோது மதுமதிக்கு சிரிப்பே வந்துவிட்டது.

''என்ன சிரிக்கிறாய்?'' என்றாள் சுமித்ரா புரியாமல்.

''சுமி அண்ணி, கார், பங்களா என்றால் உங்களுக்கு அவ்வளவு ஆசையா?'' என்றாள் கேலிப் பார்வையுடன்.

ஆனால் சுமித்ரா சீரியஸாகவே அவளைப் பார்த்தவள், ''இருக்கக்கூடாதா மதும்மா..? நாம் வாழ்வது ஒரு முறை. அதை நல்லபடியாய் வாழ்ந்துவிட்டுப் போவோமே...!'' என விளக்கமும் கொடுத்தாள்.

''தத்துவம் பிரமாதம்...!'' என கைகளைத் தட்டி மதுமதி சிரித்தவள் செல்லமாய் அண்ணியின் கன்னத்தைப் பிடித்து கிள்ளினாள்.

சுமித்ரா பதிலுக்கு சிரித்து விட்டு விடாமல், ''சொல் மது, உன் முடிவுதான் என்ன? உன் அண்ணனும்

ஆவலாய் இருக்கிறார்... அவருக்கும் நீ கைநிறைய சம்பாதிக்க வேண்டும்... என்ற.. ஆசைதான்..!'' என்றதும் மதுமதி ஒருகணம் சீரியஸாகி நிஜமாகவே யோசித்தாள். மறுகணமே முகம் மலர்ந்தாள்.

''பாருங்கள் அண்ணி, நீங்களும் அண்ணனும் ஆசைப் பட்டால் நான் குறுக்கே நிற்பேனா? உங்கள் ஆசைதான் என் ஆசையும்..!'' என்றாள்.

மதுமதி சொல்ல சுமித்ரா முகம் பிரகாசமானது.

''மது, அப்போ.. நீ சம்மதம் என்கிறாயா? நிஜம்தானே... நிஜமாகத்தானே சொல்கிறாய்?'' என்றாள் ஆவல் பொங்க. வரப்போகும் பெரும் ஆபத்தை உணராமல் முத்துப்பல் சிரிப்புடன் தலையை வேகமாய் அசைத்தாள் மதுமதி.

# 3



மதுமதியின் சம்மதம் கிடைத்ததும் எல்லா விஷயங் களும் வேகமாய் துரிதகதியில் நடக்க ஆரம்பித்தது. அண்ணன் ரகுராமன் இரண்டு நாள் அலுவலகத்திற்கு லீவு போட்டுவிட்டு அவள் கூடவே வந்தான்.

மதுமதி தான் வேலைபார்த்த கம்ப்யூட்டர் கம்பெனி யில் ரிசைனிங் லெட்டர் கொடுத்து ரிலீவ் ஆனதும்



அவனே கோல்டன் டெலி பிலிம்ஸுக்கு அழைத்துச் சென்றான். குளிரூட்டப்பட்ட விசாலமான அறையில் கம்பெனியின் எக்ஸிகியூட்டிவ் மேனேஜர் முன் காண்டிராக்ட் ஒப்பந்தம் தயாரானது.

மதுமதி அது முழுவதையும் படித்துப் பார்த்து கையெழுத் திட்டாள்.

அவளுக்கு ஏற்கனவே சொல்லியது போல் காலை ஒரு மணி நேரம் மாலை ஒரு மணி நேரம் வந்து அவர்கள் சொல்கிற டிவி நிகழ்ச்சிக்கு தொகுப்பாளினியாய் பணி யாற்ற வேண்டும்.

சம்பளம் ஐம்பதாயிரம் என்று உறுதி செய்யப்பட் டிருந்தது. இந்த இரண்டு மணி நேர வேலைக்கு மாதம் ஐம்பதாயிரம் அதிகப்படிதான் என்று நினைத்தவள் எப்படி கம்பெனியால் கொடுக்க முடிகிறது என வியந்து அதி சயித்தாள்.

அந்த வியப்புடனே வெளிவந்தபோது அந்த டிவியில் பணியாற்றும் இரண்டு மூன்று தொகுப்பாளர்கள் பேசிக் கொண்டிருந்தவர்கள், அவள் புதியதாய் சேர்ந்திருப்பதை உணர்ந்து புன்னகையுடன் அவளை நோக்கி வந்தார்கள்.

கைகுலுக்கியபடி தங்களை பரஸ்பர அறிமுகம் செய்து கொள்ள மதுமதியும் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள். அவர்களை உற்றுக் கவனித்தாள். நான்கு பேருமே உடை விஷயத்தில் சிக்கனமாய் இருந்தது அவளை உறுத்தியது.

இரண்டு பேர் சின்ன ஸ்கார்ட்டும் பனியனும் போட் டிருக்க மூன்றாமவள் பளபள கால்கள் தெரியும்படி ஜீன்ஸ் டிராயர் ஒன்றை போட்டிருந்தாள். அதில் இரண்டு பேர்

கல்லூரி மாணவிகளாம். பார்ட் டைம்மாக காம்ப்பியரிங் செய்கிறார்களாம்.

டிவியில் பேசுவது போலவே நுனி நாக்கு ஆங்கிலத்தில் பேசி அடிக்கொருமுறை சிரித்து அவளுக்கு வாழ்த்துச் சொல்லி அகன்றனர்.

அவர்கள் சென்றதும் மதுமதி அண்ணனைப் பார்த்தவள், ''அண்ணா, அவர்கள் உடைகளை கவனித் தீர்களா...? இது போல்தான் என்னையும் அணியச் சொல் வார்களா?'' என்றாள் சிறு பயம் தோன்ற.

ரகுராமன் படபடவென சிரித்தான். ''ஐயோ.. மது, உனக்கு விஷயமே புரியவில்லையே...! அந்தப் பெண்களின் மூஞ்சியைப் பார். ஒரு முகமாவது நன்றாக இயற்கையான அழகோடு பார்க்கும்படி இருக்கிறதா? எல்லாமே பவுடர் க்ரீம், லிப்ஸ்டிக் என செயற்கைச் சமாச்சாரங்கள்! பிறகு எப்படி உடை விஷயத்தில் மட்டும் கட்டுப்பெட்டியாய் இருக்க முடியும்.. அவர்களை விடு. உன் அழகு மீது உனக்கு நம்பிக்கை இல்லையா...? நீ ஒரு புடவை கட்டிக்கொண்டு நளினமாய் நின்றாலே போதும்... அத்தனை பேரும் அப்படியே கைகூப்பி வணங்கும் அந்த அழகைக் கண்டு அதுவே போதும் என மெய்சிலிர்த்து விடுவார்கள்.. தெரியுமா?'' - ரகுராமன் வெகு சீரியஸான முகத்துடன் சொல்லிக் கொண்டு போக தன் அழகு மீது அண்ணன் வைத்திருக்கும் நினைப்பில் ஒருகணம் வியந்தவள் மறுகணம் வெட்கம் பொங்கியவளாய், ''ஆமாம்.. ஆமாம்... மெய்சிலிர்க்கத்தான் செய்வார்கள்.. போங்களண்ணா...'' என்றபடி நடந்தாள்.

அன்று மாலையே நகரின் பிரபல ஜவுளிக்கடைக்கு அண்ணியுடன் சென்று நாலைந்து புடவைகள் எடுத்தாள்.



இந்த மஞ்சள் பூ நன்றாய் இருக்கும்... இந்த ஜரிகை பார்டர் எடுப்பாய் இருக்கும்.. என சுமித்ரா ஒவ்வொன்றாய் பார்த்துப் பார்த்து அவள் தேர்ந்தெடுக்க உதவினாள்.

ஆயிற்று. மறுநாள் விடிந்ததும் குளித்து முடித்து தன் இஷ்டமான தெருக்கோடி செல்வ விநாயகரை வணங்கி விட்டு கிளம்ப ஆரம்பித்தாள். பருத்தி சிவப்பு பட்டுச் சேலை உடம்பை நளினமாய் தழுவியிருக்க.. மைவிழிக் கண்களும், நெற்றியில் சின்னத் திலகமுமாய் அவள் கிளம்பியபோது சுமித்ரா தன் கண்ணே பட்டு விடும் போல் அவளுக்கு அழகு நெட்டி முறித்தாள்.

ரகுராமன் ஸ்கூட்டரை தயார் செய்து கிளப்பினான். ''வேண்டாம் அண்ணா.. நான் பஸ்ஸில் போய்க் கொள்கிறேன்...'' என்றவளை மறுத்து, ''இனி பஸ் சகவாசமே வேண்டாம். தினமும் நான்தான் உன்னை கொண்டுபோய் விடுவேன் மதுக்குட்டி...'' என ஸ்கூட்டரில் விடாப் பிடியாய் கூட்டிச் சென்றான். கோல்டன் டெலிபிலிம்ஸ் அலுவலகத்தை அடைந்தார்கள்.

மதுமதி இறங்கிக் கொண்டாள். ''முதல்நாள். நானும் வருகிறேன்...'' என்றபடி ரகுராமன் அவளுடன் அலுவலகத்தின் உள்ளும் வந்து பார்த்தான். சீனியர் மேனேஜர் அறிவுறுத்தலின் படி தயாரிப்பு நிர்வாகி ஒருவர் செய்தி அறைக்கு அவளை அழைத்துச் சென்றார்.

அங்கு அவளைப் போல் நிறைய தொகுப்பாளிகளும் நிகழ்ச்சி தயாரிப்பு குழுவினரும் இருந்தனர். அண்ணனைச் செல்லுமாறு விடைகொடுத்து விட்டு ரூமினுள் நுழைந்தாள். அன்றைய வேலையும் அவளுக்கு இலகுவாகவே இருந்தது.

'மழலை உலகம்' என்ற சிறிய நேர குழந்தைகள் நிகழ்ச்சிக்கு அவளை சில வரிகள் பேசச் சொல்லி காமிராவில் பதிவு செய்தார்கள். அடுத்து வந்த சில நாட்களும் அதுபோலவே கேமிரா முன் கொஞ்ச நேரமே பேச வேண்டியிருந்தது.

மதுமதி தன் வேலை முடிந்தாலும் நிகழ்ச்சி தயாரிப்பு முறை, அதை எடுக்கும் விதம், கேமிரா ஆங்கிள், எடிட்டிங், என ஒவ்வொன்றிலும் தானே வலிய கவனம் செலுத்தி விஷயங்களை கற்றுக் கொள்ள ஆரம்பித்தாள்.

நான்காவது நாள்தான் அவளுக்கு பிரச்சனை உடை உருவத்தில் வந்தது. வழக்கம் போல் நிகழ்ச்சி தயாரிப்பு அறைக்குப் போனவளை நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு டெய்ஸி அழைத்து, ''மது, இன்று உனக்கு நேயர்களுடன் டெலிபோனில் உரையாடும் நிகழ்ச்சி. அரை மணி நேர ப்ரோக்ராம். செய்து விடலாம்தானே?'' என்றதும் உற்சாகமாய் தலையாட்டினாள் மதுமதி.

டெய்ஸி அவளுக்கு அக்கறையாய் நிகழ்ச்சியில் பேசும் விதம், அமர்த்தலாய் புன்னகை செய்யும் விதம் என ஒவ்வொன்றாய் சொல்லிக் கொடுத்து ஒத்திகையும் பார்த்தாள். டெய்ஸி சொல்வதை சட்சட்டென புரிந்து கொண்டு மதுமதி அவ்விதமே சிறப்பாக அழகுடன் செய்ய டெய்ஸியே ஒருகணம் பிரமித்தாள்.

'வெரி இன்டெலிஜெண்ட் கேர்ள்...' என மனதார பாராட்டியவள் அடுத்து சொன்னதுதான் மதுமதியை திகைத்த வைத்தது. ''மது, இந்த ப்ரோக்ராமிற்கு நீ உடைகள் மாற்ற வேண்டியிருக்கும். அதோ.. அது தான் நீ போட வேண்டிய காஸ்ட்யூம்..'' என்றபடி முட்டு வரைக்குமான குட்டைப் பாவாடை டிரஸ் ஒன்றை சர்வசாதாரணமாய் காட்டிச் சொல்ல மதுமதி அதிர்ந்து போனாள்.



''டெய்ஸி, இந்த உடையையா சொல்றீங்க?'' என்றாள் வியப்பு பொங்க.

''ஆமாம். அவைகள்தான்... மது...'' என்றாள் டெய்ஸி தலையசைப்புடன்.

''நோ.. என்னால முடியாது..''

''முடியாதா.. என்ன சொல்றீங்க?'' என்றாள் டெய்ஸியும் அதிர்ந்தவாறு.

''என்னால இந்த அரைகுறை டிரஸ்ஸை எல்லாம் போட முடியாது...''

மதுமதி தீர்க்கமான குரலில் சொன்னவுடன் டெய்ஸி எழுந்து அவள் பக்கமே வந்து விட்டாள். அவள் தோள்களில் மெல்ல கைவைத்தாள்.

''என்ன.. மது.. இன்னும் நீங்க மீடியாவை புரிஞ்சுக்கலையா? இதுஅரைகுறை டிரஸ் இல்ல. நாகரீக ஃபேஷன். இப்படி உடை அணிஞ்சிட்டு புரோகிராம் செஞ்சாத்தான் நிகழ்ச்சி சுவாஸ்யமா இருக்கும்...''

''ஆனா... என்னோட அபிப்ராயம் வேற..டெய்ஸி..''

''சொல்லுங்க..''

''சொன்னா நீங்க தப்பா நினைக்கக் கூடாது...''

''மாட்டேன்...''

''இந்த நாகரீகம்ங்கிற பெயரில் இப்படி அரைகுறை ட்ரஸ் போடுவதற்கு பதிலா நளினமா புடவை கட்டிட்டுச் செஞ்சா நல்லாத்தானே இருக்கும்...?''

''நல்லாத்தான் இருக்கும். ஆனா...''

''சொல்லுங்க...''

''தயாரிப்பு நிர்வாகிங்க ஒத்துக்க மாட்டாங்க. நிகழ்ச்சியில சுவாரஸ்யம் இல்லேன்னு சொல்லிடுவாங்க...''

''அவங்க சொன்னா என்ன? நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் நீங்கதானே... நீங்க முடிவு செஞ்சா போதாது...?''

மதுமதி சொல்ல.. அவளை அப்பாவியாய் பார்த்தவாறு டெய்ஸி சிரித்தாள்.

''என்ன சிரிக்கறீங்க...?''

''மது, நீங்க புதுசுங்கிறதால டிவி மீடியாவைப் பத்தி நிறைய விஷயங்கள் உங்களுக்குப் புரியல. எந்த நிகழ்ச்சியையும் நிர்வாகிகள் பார்த்து ஓ.கே. பண்ணிய பிறகுதான் ஒளிபரப்ப முடியும். அவங்க மறுத்திட்டா... நிகழ்ச்சியை ஸ்டாப் பண்ணிருவாங்க... பொருளாதார நஷ்டமும் ஏற்பட்டுடும்...''

''பொருளாதார நஷ்டமா?''

''ஆமா.. இப்போ இந்த நேயர் புரோகிராமுக்கு ஒரு லட்ச ரூபாய் பணம் கட்டி ஸ்லாட் வாங்கிருக்கேன். அவங்களுக்கு நிகழ்ச்சி பிடிக்கலைன்னா என்னோட புரோகிராமும் ஸ்டாப் ஆயிடும். ரூபாயும் திரும்பக் கிடைக்காது...''

''சரி.. அப்போ வேற.. யாராவது காம்ப்பியரை வைச்சுப் பண்ணுங்க...''

''அது முடியாது.. நீங்கதான் பண்ணனும். நீங்க பண்ணினாத்தான் நிகழ்ச்சி நல்லாயிருக்கும்...''



''ஆனா.. இதை மாதிரியான்னா டிரஸ்ஸைப் போடக் கூடாதுன்னு நான் ஒரு கொள்கை வைச்சிருக்கேன் டெய்ஸி..'' கைகளைக் கட்டிக் கொண்டு திரும்பவும் உறுதியான குரலில் மதுமதி சொல்ல.. டெய்ஸி தோள்களைப் பிடித்திருந்தவள் இப்போது கைகளையும் பிடித்துக் கொண்டாள். ''மது.. ப்ளீஸ்.. மறுத்துராதீங்க.. இது என் வாழ்க்கைப் பிரச்சனை..'' என கெஞ்சவும் ஆரம்பிக்க மதுமதி திடுக்கிட்டாள்.

''வாழ்க்கைப் பிரச்சனையா... என்ன சொல்றீங்க?''

''ஆமாம் மது.. ரொம்ப நாளா காம்ப்பியரிங் பண்ணிட்டு இப்பதான் நிகழ்ச்சித் தயாரிப்பாளரா ரொம்பக் கஷ்டப்பட்டு வாய்ப்பு வாங்கியிருக்கேன். இதை சரியா செய்யாமப் போனா பின் எந்த வாய்ப்பும் எனக்கும் கிடைக்காம என்னோட எதிர்காலமே.. வீணாப்போயிடும்.. கொஞ்சம் யோசிங்க...!''

''ஐயோ.. டெய்ஸி.. எதுக்கு.. என்னென்னமோ சொல்றீங்க? என்னை விட்டுட்டு.. வேறு யாராவது..''

மேலும் அவளை பேச விடாது கைகளை அழுத்தினாள் டெய்ஸி.

''ப்ளீஸ்.. மது, உங்களைக் கெஞ்சி கேட்டுக்கிறேன். ஜஸ்ட் அரைமணிநேர புரோகிராம்தான். எனக்காக இந்த ஒரு தடவை மட்டும் பண்ணுங்க. இனி எந்த புரோகிராமிலும் உங்களை வற்புறுத்த மாட்டேன்.. ப்ளீஸ்...''

காலில் விழாத குறையாய் கெஞ்சினாள் டெய்ஸி. மதுமதிக்கு வேறு வழி தெரியவில்லை.. யோசித்தாள்.

டெய்ஸியின் கெஞ்சலுக்காக கடைசியில் கனத்த மனதுடன் அரைகுறையாய் சம்மதித்தாள். கொஞ்ச

நேரத்தில் மதுமதி வேறு வழியில்லாமல் உடைமாற்று ரூமிற்குச் சென்று அந்த உடைகளை அணிந்தாள். நிமிர்ந்து கண்ணாடியில் தன்னைப் பார்த்த போது அவளுக்கே கூச்சமாயிருந்தது. முட்டு வரையான குட்டைப் பாவாடையுடன் கால்கள் தெரிய அவள்... அவளா இப்படி...?

இந்த ஒன்றுதான்! இந்த ஒரே நிகழ்ச்சிதான்! டெய்ஸியின் கெஞ்சலுக்காக இதை மட்டும் செய்துவிட்டு பிடிவாதமாய் மறுத்துவிட வேண்டும். அதனால் இந்த வேலையே கூட போனாலும் பரவாயில்லை...

மதுமதி முடிவெடுத்தவளாய் வெளி வந்து ஒளிப்பதிவு அறைக்குள் நுழைந்தாள். அங்கு டெய்ஸி தன் இரண்டு உதவியாளிகளுடன் தயாராய் இருந்தாள். மதுமதி நுழைந்ததும் ஏற்கனவே தயாராய் ஒலிப்பதிவு செய்யப் பட்ட நேயர்களின் கேள்விகளும் அதற்கான பதில்களும் அவளுக்கு கொடுக்கப்பட்டது.

மதுமதி அதை ஓரிருமுறை வாசித்து மனப்பாடமாய் ஞாபகம் வைத்துக் கொண்டு தயாராகிவிட்டாள். ஒளிப்பதிவாளர் கேமிராவை இயக்க அத்தனையையும் ஒரே ஷாட்டில் படமாக்கப்பட்டது. டெய்ஸி எதிர்பார்த்த மாதிரி மதுமதி அமர்த்தலான புன்னகையுடன் நிதானமாய் ஒவ்வொரு வார்த்தைகளையும் உச்சரித்து இனிமையான குரலில் பேசினாள்.

டெய்ஸி ரொம்பவும் திருப்தியடைந்து அவளைப் பாராட்டியவள் அப்படியே கட்டிப்பிடித்துக் கொண்டாள். ஒளிப்பதிவு முடிந்ததும் ஸ்டூடியோ ரூமை விட்டு வேக வேகமாய் வெளிவந்தாள். உடனடியாய் இந்த உடையை



கழற்றித் தூர எறிய வேண்டும். அப்போதுதான் நிம்மதி! அவமானம் பிடுங்கியவளாய் வேகவேகமாய் நடந்தவள் திடீரென கணைப்பு குரலும் சிரிப்பும் கேட்க திடுக்கிட்டு நின்றாள்.

திரும்பிப் பார்த்தாள்.

கைகளைத் தட்டியபடி அவன்...! அவனேதான்...!

அதே திமிர்க்காரன்..! முதன் முதலில் இந்த கோல்டன் டிவி கம்பெனியில் அவளைக் கேவலமாய் பேசி எள்ளி நகையாடியவன். அவளை டிவிக்கு வருகிறாயா என அலட்சியமாய் கேட்டவன். அவன் எப்படி இங்கு...? என ஒரு கணம் நினைத்தவள் மறுகணம் டீ ஷர்ட்டும் குட்டைப்பாவாடையுமாய் தான் அவன் முன் நிற்கும் நிலை கண்டு பெரும் அவமானம் கொண்டவளாய் பல்லைக் கடித்தபடி தலையைக் குனிந்தாள்.

அவன் நிதானமாய் அவள் பக்கம் வந்து மேலிருந்து கீழ் வரை அதே நிதானத்துடன் ஊடுருவினான். அவனது பார்வையில் அவளது உடம்பே கூசியது.

டிவி காம்ப்பியரிங்கிற்கு வரவே மாட்டேன் என்று அன்று வீராப்பாய் பேசிவிட்டு இன்று இப்படி அரை டிரஸ்ஸுடன் அவன் முன் நிற்கிறோமே என துடித்து சிந்தித்தவள் மறுவினாடியே நாம் ஏன் நிற்கவேண்டும் என்ற நினைப்புடன் விறுவிறுவென அகலப் போனாள்.

தன் கைகளை நீட்டி அவள் போவதை அப்படியே தடுத்தான் அவன்.

''ஹலோ.. குட்டைப் பாவாடை.. நில்லுங்க...''

அவள் நின்றாள். நின்றபடியே கண்களை அகல விரித்து அவனை முறைத்தாள். என்ன சொன்னான்... குட்டைப்பாவாடையா? அவளையா?

பதிலுக்கு அவனும் கண்களை விரித்து அவளை விழுங்குவது போல் பார்த்தான். உதடுகளை ஈரப்படுத்தியபடி அவன் சுவாரஸ்யமானான்.

''உங்க ட்ரஸ்... பிரமாதம்..! கீழே.. பாருங்க.. உங்க கால்கள் எவ்வளவு வளவளப்பா... பிஞ்சு மாதிரி தெரியுது...'' - அவன் வெகுவாய் ரசித்து பார்த்தபடி வர்ணனை செய்வது கண்டு வெகுண்டு போனவள், ''மிஸ்டர்...'' என குரலை உயர்த்தினாள் கோபம் பொங்க.

''சொல்லுங்க.. என்னமோ சொல்ல வர்றீங்க போல...'' அவன் போலியாய் பவ்யம் காட்டினான்.

''முன்ன பின்ன தெரியாதவங்ககிட்ட எப்படிப் பேசணும்ன்னு மொதல்ல கத்துக்கோங்க... மிஸ்டர்...''

''கத்துக்கறேன். ஆனா...''

அவன் நிறுத்தியபடி மறுபடியும் ஒரு ஊடுருவும் பார்வை பார்த்தவன், ''நீங்க ஒண்ணும் தெரியாதவங்க இல்ல. தெரிஞ்சவங்கதானே...'' என்றான் சாதாரணமாய்.

''தெரிஞ்சவங்களா...?''

''ஆமா..! ரூபா நிறைய கொடுத்தா கணுக்காலில இருந்து கொஞ்சம் கொஞ்சமா ட்ரஸ்ஸை மேல உயர்த்தணும்கிற விபரம் தெரிஞ்சவங்கதானே...? சொல்லுங்க...!'' அவன் சொல்லச் சொல்ல மதுமதிக்கு அப்படியே முகம் சிவந்து உதடு துடித்தது.

''ஹேய்.. மிஸ்டர்...''



அவளது ஆத்திரமான கத்தலை கொஞ்சமும் சட்டை செய்யாமல் தோள்களை குலுக்கினான் அவன்.

''ஹலோ.. ரொம்ப அலட்டிக்காதீங்க... ஐம்பதாயிரம் சம்பளமா கொடுத்ததும் முட்டு வரைக்கும் உயர்த்தி குட்டைப் பாவாடையை போட்டுக்கிட்டீங்க.. இன்னும் கொஞ்சம் உயர்த்தி ஒரு லட்சமா கொடுத்தா ட்ரஸ்ஸே இல்லாம நிற்கத்தானே செய்வீங்க...? ஹூம்.. ப்ளடி.. லேடீஸ்.. உங்களை திருத்தவே முடியாது...!''

சொல்லியபடி அவன் பதிலுக்கு காத்திராமல் விறுவிறுவென அகன்றான் அவன்.

## 4



மதுமதிக்கு ஒருகணம் ஒன்றும் ஓடவில்லை. அவன் பாட்டுக்கு திடும்மென எதிரே வந்தான். அவளைப் பார்த்ததும் ஏதோ உரிமை உள்ளவன் போல் கண்டபடி விமர்சித்து, கண்டபடி ஏசிவிட்டுப் போகிறான்? யாரிவன்? நாம் எப்படி நடந்தால் இவனுக்கென்ன? இவனுக்கு அந்த உரிமையை யார் கொடுத்தது?

சினமாய் வெகுண்டு போய் நினைத்தவள் சற்றுத் தள்ளி நின்றுகொண்டிருந்த அலுவலகப் பணிப்பெண்

ணிடம் அலட்சியமாய் தூரத்தில் நடந்து செல்லும் அவனைக் காட்டி விசாரித்தாள்.

''அவரா.. உங்களுக்குத் தெரியாதா..? நரேந்திரன்...!'' என்றாள்.

''நரேந்திரனா... யார் அது?'' மதுமதி வியப்புடன் நெற்றியைச் சுருக்கினாள்.

''என்ன இப்படிக் கேட்டு விட்டீர்கள்...? நகரின் பிரபல 'வி.ஆர்.ஜுவல்லரி' நகைக்கடையின் முதலாளி அவர்... பெரிய கோடீஸ்வரர்...''

''சரி.. அவருக்கு இங்கு என்ன வேலை...? ஏன் நம் அலுவலகத்தையே சுற்றி வர வேண்டும்?''

''விளம்பரம்மா...! நம் டிவி நிகழ்ச்சிகளின் முக்கிய ஸ்பான்ஸரே அவர்தான்! அவரது நகைக்கடை விளம்பரம்தான் நம் டிவியில் அடிக்கடி வந்து கொண்டிருக்கும். மேலும் நம் கம்பெனி முதலாளிக்கு நெருங்கிய நண்பராம்.. அதனால் அவருக்கு இங்கு செல்வாக்கு ஜாஸ்தி...!''

''ஒஹோ... அப்படியா விஷயம்...? டிவி ஓனருக்கு இவன் தெரிந்தவன் என்பதால் இந்த ஆட்டம் போடுகிறானா? என் கொதிப்பாய் நினைத்தவள் சட்டென அன்று அண்ணன் சொன்னதையும் நினைத்துப் பார்த்தாள்.

அன்று அண்ணன் ஏதோ தற்காலிக வேலையிலிருக்கும் உதவியாளர் என்றுதானே சொன்னார்? ஏன் அப்படிச் சொல்ல வேண்டும்?

அதே சிந்தனையுடன் படபடவென உடைகளை மாற்றி வீட்டுக்குக் கிளம்பினாள்.



வீட்டிற்கு வந்ததும் முதல் வேலையாய் அண்ணனைத் தேடினாள். அண்ணி தயாராய் வைத்திருந்த குளிர்ந்த ஆரஞ்சு பழச்சாறை நீட்டி, ''களைப்பாய் வந்திருக்கிறாய் முதலில் இதைக் குடிம்மா...'' என்றாள் பரிவு பொங்க. அவள் அண்ணனைத் தேடுவதை உணர்ந்து, ''அலுவலக நண்பர் ஒருவர் கூப்பிட்டதால் வெளியே சென்றிருக்கிறார். வந்து விடுவார்...'' என்றாள்.

மதுமதி அண்ணியிடம் நடந்ததைச் சொல்லலாமா என்று நினைத்தவள் மறுகணமே, வேண்டாம் வீணாய் அண்ணியை கலவரப்படுத்த வேண்டாம் என முடிவும் செய்தாள்.

இருந்தாலும் நடந்ததை அவ்வளவு எளிதாய் மறக்கவோ, ஜீரணிக்கவோ அவளால் முடியவில்லை. டெய்ஸியிடம் மறுத்தது, பிரியமில்லாமல் அந்த குட்டைப் பாவாடை உடைகளை அணிந்தது, அந்த திமிர்க்காரனிடம் தேவையில்லாமல் அவமானப்பட்டது என ஒவ்வொன்றாய் நினைவில் தோன்றி அவளை இம்சித்தது.

டெய்சியிடம் ஒரேயடியாய், பிடிவாதமாய் மறுத்திருக்கலாமோ... என்று கூட நினைத்தாள். அப்படி மறுத்திருந்தால் இந்த அவமானம் எல்லாம் ஏற்பட்டிருக்காதே என்று அவளுக்குத் தோன்றியது.

அதைவிட.. அவன் ஊசி குத்தலாய் சொன்ன வார்த்தைகள்...? பணம் கொடுக்க.. கொடுக்க... கணுக்காலில் இருந்து ட்ரஸ்ஸைக் குறைத்து... கடைசியில் அவிழ்த்துப் போட்டு நின்று விடுவது போல் அல்லவா எள்ளி நகையாடினான்... என்ன ஒரு ஆணவம் அவனுக்கு..?

அவள் பற்களை கடித்தபடி யோசிக்க, அதற்குள் வெளியே சென்றிருந்த ரகுராமன் வந்துவிட்டான். ''மதுக்குட்டி என்னம்மா..?'' என்றவனிடம் மூச்சுவாங்க விஷயத்தை சொல்ல ஆரம்பித்து விட்டாள்.

ரகுராமன் கேட்டவன் அவனும் திகைப்பானான். ''என்ன.. அவன் நகைக் கடை முதலாளியா..? கோடீஸ்வரனா...? அன்று டிவி நிலைய ஊழியன் என்றல்லவா சொன்னார்கள்...?'' என்றபடி திடுக்கிட்டு யோசித்தவன் மறுகணம் ஏதோ பிடிபட்டது போல், ''மதும்மா, அன்று நான் விசாரிக்கும்போது அவன் பக்கத்தில் இன்னொரு நபர் நின்று கொண்டிருந்தார்.. ஒரு வேளை தவறுதலாக நான் அவரைப் பற்றி விசாரிப்பதாக சொல்லிவிட்டார்களோ... என்னவோ...'' என்றதும், ''அப்படித்தான் இருக்கும் நீ தான் ஏமாந்துவிட்டாய் அண்ணா...'' என பலத்த தலையாட்டலுடன் ஆமோதித்தாள் மதுமதி.

ரகுராமன் நெற்றியில் கைவைத்துக் கொண்டான்.

''இப்போது என்னம்மா செய்ய...? அவன் ரொம்ப வாலாட்டுகிறானா? உனக்கு இடைஞ்சல் கொடுக்கிறானா?'' என்றான்.

''இடைஞ்சல்.. இல்லை.. ஆணவம்.. அண்ணா...! அவன் உடம்பு முழுவதும் அந்த திமிர் இருக்கிறது. பெண் என்றாலே கேவலமாய் நினைத்து வாய்க்கு வந்தபடி பேசுகிறான். அவனை என்ன செய்வது...?''

இருவரும் கொஞ்சநேரம் பேசாமல் யோசித்தார்கள். ரகுராமன் நிமிர்ந்தான்.

''ஆனால்... ஒன்று.. மது..''



''என்ன அண்ணா?''

''நீ மட்டும் அந்தக் குட்டைப் பாவாடை டிரஸ்ஸுடன் அவன் முன் தோன்றியிருக்காவிட்டால் அவன் அப்படிச் சொல்லியிருக்க மாட்டான்தானே..?''

ரகுராமன் சொல்ல அவனைத் திகைப்பாய் பார்த்தாள் மதுமதி.

''என்ன அண்ணா இப்படிச் சொல்கிறீர்கள்? அவன் சொல்வது நியாயம் என்கிறீர்களா?''

''அப்படி.. இல்லை.. மதும்மா... அந்த விதத்திலும் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கலாமே... என்கிறேன்...''

அண்ணன் சொல்ல மதுமதியும் ஒருகணம் தலை சாய்த்து சிந்தித்தாள். அண்ணன் சொல்வது போல் அந்த குட்டைப்பாவாடை டிரஸ்ஸில் அவன் முன் நிற்காமல் இருந்தால்; புடவைகட்டி நின்றிருந்தால் அப்படி அவனால் சொல்லியிருக்க முடியுமா...? முடியாதுதானே...?என நினைத்தாள்.

ஆயினும் அதற்காக அவளை அவ்வளவு மட்டம்தட்டி பேச அவனுக்கு என்ன உரிமை இருக்கிறது...?என்ற சினமும் அவளுள் எழுந்தது. அவன் சொன்ன விஷயம் நியாயமாக இருந்தாலும் அதற்காக அவனை மன்னித்து விடக் கூடாது என்பதில் பிடிவாதமாய் இருந்தாள்.

''என்னம்மா.. யோசித்து விட்டாயா?'' என்று அண்ணன் கேட்டதும் பட்டென்று, ''அவன் பேசியது தவறுதான்... அவனை எப்படி மன்னிப்பதண்ணா?'' என்றாள் கோபம் குறையாமல்.

ரகுராமனும் விடவில்லை.

''மன்னிக்க வேண்டாம் மது... மறந்து விடு...! நீ மட்டும் அந்த குட்டைப் பாவாடை ட்ரஸ்ஸை அணிய மறுத்திருந்தால்.. அப்படி ஒரு விவாதமே நடந்திருக்காது.. என நினைத்து மறந்து விடு..'' என்றான்.

மதுமதியும் அத்தோடு 'அவள்' பற்றிய பேச்சை முடிக்கும் எண்ணத்தில்,

''சரியண்ணா; ஆனால்.. எல்லாம் அந்த டெய்ஸியால் வந்த வினைதான்! பணம் நஷ்டம்.. எதிர்கால வாழ்க்கை என்றெல்லாம் சொல்லி எதேதோ கெஞ்சி என்னை சம்மதிக்க வைத்து விட்டாள்... அவளைச் சொல்ல வேண்டும்..!'' என்றாள் டெய்ஸி ஞாபகம் வந்தவளாய்.

''ஆனால்.. மது.. ஒரு விஷயம்.. அந்த டெய்ஸியையும் கூட நம்பாதே. உன்னை சம்மதிக்க வைக்கக் கூட டெய்ஸி அப்படியெல்லாம் சொல்லியிருக்கலாம்...''

ரகுராமன் சொல்ல முதல் முறையாய் மதுமதி திகைப்பானாள்.

''நிஜமாகவா...? நீ சொல்வது போல் கூட நடக்குமா?

அந்த டெய்சி ரொம்பவும் பிடிவாதம் பிடித்தாளே..?''

மதுமதி திரும்பவும் யோசனையில் ஆழ்ந்து போக ரகுராமன் அவள் தோள்களைத் தட்டியவன், ''ரொம்பவும் குழம்பாதே மதும்மா. உன்னை எப்போதும் விழிப்பாய் இருக்கத்தான் இதையெல்லாம் சொல்கிறேன்..'' எனவும் மதுமதியும் தெளிவு பெற்றவளாய் தலையாட்டினாள்.

அத்தோடு அந்த பேச்சும் முடிவு பெற்றது. மதுமதியும் நடந்தவைகளை மறந்தவளாய் வேலைகளில் ஆழ்ந்தாள். ஆனால், மனதுள் எடுத்த முடிவுப்படி மறுநாள் அலு



வலகம் சென்றவள் முதல் வேலையாய் சீனியர் மேனே ஜரை சந்தித்தாள்.

உடை விஷயத்தில், நாகரீகம் என்ற பெயரில் அரை குறையான உடைகளை அணிய தனக்கு விருப்பமில்லை என்பதை தெளிவாய் உணர்த்தினாள். சீனியர் மேனே ஜரும் சிரித்தபடியே, ''யாரையும் உடை விஷயத்தில் நிர்வாகிகள் வற்புறுத்த மாட்டார்கள்..'' என உறுதியளிக்க பெரும் நிம்மதியடைந்தவளாய் அங்கிருந்து அகன்றாள்.

இரண்டு மூன்று நாட்கள் எவ்வித பிரச்சினையு மில்லாமல் வேலை நடந்தது. அவள் விருப்பப்படும் நிகழ்ச்சியை தொகுத்தளிக்கவும் விருப்பப்படும் உடையை அணியவும் சுதந்திரம் கிடைத்தது.

அன்று எல்லாவற்றையும் மறந்து மாலையில் ஷாப் பிங் போனாள். நகரின் பெரிய ஷாப்பிங் காம்ப்ளெக் ஸினுள் நுழைந்து நவீன அழகுச் சாதன பொருட்களை உடைய 'லவ் காஸ்மெட்டிக்ஸ்' கடையினுள் நுழைந்தாள். பர்ஃப்யூம், க்ரீம், ஜிகினாச் சமாச்சாரங்கள் என வேண் டியவைகளை தேடிப் பிடித்து அழகு பார்த்து வாங்கினாள்.

காது தொங்கட்டான்களுக்காக கூட அவள் விதம் விதமாய் தேடுவதில் அரை மணி நேரம் செலவழிக்க வேண்டியதாயிற்று. நீளம், வட்டம், ஆட்டின் என வெவ்வேறு வடிவங்களில் தேர்ந்தெடுத்து திருப்தி யடைந்தாள்.

பர்ச்சேஸ் எல்லாம் முடிந்துவிட்டது என பணியாளிடம் பில் போடச் சொல்லிவிட்டு திரும்பப் போனவளை பின்னால் கணீர் எனக் கேட்ட குரல் நிறுத்தியது.

''காஸ்மெட்டிக்ஸ் எல்லாம் வாங்கியாயிற்று. இன்னும் முக்கியமான ஒன்று வாங்க வேண்டியிருக்கிறதே?'' கிண்டலாய் குரல் ஒலித்தது கண்டு திரும்பிய மதுமதியின் முகம் நின்றவனைப் பார்த்ததும் சிவக்க ஆரம்பித்தது.

அங்கு கைகளைக் கட்டியபடி நரேந்திரன்! இந்த திமிர்க்காரன் இங்கு எப்படி?

அவள் திகைத்துக் கொண்டிருக்கும்போதே அடுத்த கேள்வியை வீசினான்.

''என்ன திகைத்துக் கொண்டிருக்கிறாய்? நீ வாங்க வேண்டிய பொருள் ஒன்று அதோ.. அந்த எதிர் கடையில் இருக்கிறது பார்!'' சீரியஸாய் அவன் கை காட்டிச் சொல்ல மதுமதி புரியாமலே திரும்பிப் பார்த்தாள்.

அவன் காட்டிய இடத்தில் ரெடிமேடு விற்பனையகம் ஒன்று தெரிந்தது.

என்ன சொல்கிறான் இவன்..? என்று அவள் நினைக்கும்போதே,

''அந்த கடையில், 'டூ பீஸ்..' என்று சொல்வார்களே... பிகினி உடை அதை விற்பனை செய்கிறார்கள். போய் வாங்கிக் கொள். உன் அடுத்த நிகழ்ச்சிக்கு தேவைப்படும்...'' அவன் அமர்த்தலாக சொல்லிவிட்டுப் பார்க்க அவளுக்கு உடம்பே எரிந்தது.

வெகுண்டு மூச்சு வாங்கியவள், அவன் வேண்டுமென்றே வம்பிழுக்கிறான் என்பது புரிந்து, இவனிடம் என்ன வெட்டிப் பேச்சு போய் விடலாமா? என்று நினைத்தாள். மறுகணமே பொது இடத்தில் தன்னை சீண்டும்



இவனைச் சும்மா விடுவதாவது? என்ற சினம் தாக்க அவன் பக்கத்தில் விடுவிடுவென போனாள்.

''ஹலோ... என்ன.. செருப்படி வாங்கும் உத்தேசமா?'' என்றபடி அவனை முறைத்தாள்.

''செருப்படியா.. நானா?'' அவன் ரொம்பவும் ரசித்துச் சிரித்துவிட்டு மேலும் கீழும் அவளை நன்றாக உற்றுப் பார்த்தான்.

''பார்... கச்சிதமும்.. நளினமும் பொருந்தி எவ்வளவு அழகு பட இருக்கிறாய். உனக்கு ஏன் இந்த டி.வி. மோகம்? வேண்டாம்.. விட்டு விடு.. வேறு வேலையைத் தேடிக் கொள்...!'' பரந்த நெற்றி விரிய சீரியஸான முகத்துடன் அவன் சொல்ல அவள் திடுக்கிட்டாள்.

ஏதையோ பேச வருகிறான் என நினைத்தால்.. வேறு என்னவோ சொல்கிறானே என அவள் திகைப்பு அதிகமாகியது.

''உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும். அந்த இருக்கையில் உட்கார்ந்து பேசுவோமா?'' என்றபடி பக்கத்தில் கிடந்த பாலிமர் இருக்கைகளைக் காட்டியபடி உட்கார்ந்தான்.

மதுமதி குழப்பம் விலகாமல் தலையசைத்தவள் அவனை நன்கு உற்றுப் பார்த்தாள். பார்ப்பதற்கு சாதாரணமாகத் தோன்றினாலும் நெடு நெடுவென ஆறடி உயரத்துடன், முறுக்கிய மீசையும் திடமான உடற்கட்டுடன், பளபளப்பான முகத்தில் வேல் குத்தும் விழிகள் போல் சடார் சடாரென மாற்றித் துளைக்கும் கூர்மையான பார்வையுடன் அவளை வசீகரிக்கத்தான் செய்தான்.

அவனும் அவளை ஓரிரு கணம் உற்றுப் பார்த்தவன் சீரியஸாகவே ஆரம்பித்தான். ''நான் உடை விஷயத்தில் வேண்டுமென்றே உன்னைக் கிண்டலடித்துப் பேசுகிறேனே... எதற்கென்று உனக்குப் புரிந்ததா?''

''எதற்கு..?'' என்றாள் அவள்.

அவனும் நீளமான மூச்செடுத்து அசராமல் தோள்களைக் குலுக்கியவன், ''உனக்கு விட்டில் பூச்சி.. கதை தெரியுமா?'' என்றான்.

மதுமதிக்கு எரிச்சல்தான் வந்தது. தன்னை உட்கார வைத்து கதையா அளக்கிறான் என அசூயை கொண்டவள்,

''நீங்களே சொல்லுங்கள்..'' என்றாள் சுவாரஸ்யமில்லாமல்.

''இந்த விட்டில் பூச்சி இருக்கிறதே அது பளீரிடும் மின் விளக்கை என்னவோ ஒரு பொருள் என முதலில் ஆசைப்படும். பின் அதையே முட்டி முட்டி மோதும். கடைசியில் பலனில்லாமல் தன் நேரம் முழுவதையும் அதில் முட்டி முட்டி அப்படியே தன் வாழ்க்கையை முடித்துக் கொள்ளும்!'' சொல்லியபடி அவன் நிறுத்தவும் அவள் தன்னை அழகாய் வெட்டியபடி 'அதற்கென்ன...?' என்பது போல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''அது போல்தான் நீயும்...!'' என அவன் முடிக்கவும் அவளுக்கு சுரீரென்றது.

''என்ன சொல்கிறீர்கள்?'' என்றாள் வெடுக்கென நிமிர்ந்து.

''புரியவில்லை...? விட்டில் பூச்சி... லைட் வெளிச்சத்தில் ஈர்க்கப்படுவது போல்.. நீ டி.வி. மோகத்தில் ஈர்க்கப்பட்டு உள்ளே நுழைந்து விட்டாய். இனி அந்த மோகத்தில், அது தரும் பணத்தில் உன் உடைகள் ஒவ்வொன்றாய் குறைப்பாய். உன் பளீர் அழகு, சிவப்பழகு எல்லோரையும் உறுத்த ஆரம்பிக்கும். உன் உடம்புக்கு எல்லோரும் விலை பேச ஆரம்பிப்பார்கள்.. கடைசியில் நீ ஒரு வேசி போல்...''



''மிஸ்டர் நிறுத்துங்கள் உங்கள் பேச்சை. ''

அதற்கு மேல் அவன் பேச முடியாதபடி ஓங்கி கத்தினாள் அவள்.

என்ன ஒரு திமிர்...! கடைசியில் அவளைப் பார்த்து கேவலமான அந்த வார்த்தையையும் உபயோகித்து விட்டானே. இவனை இனி சும்மா விடுவதாவது?

சினம் தலைக்கேற வெகுண்டு சீறியவள் அப்படியே எழுந்து விட்டாள். சுற்றும் முற்றும் பார்த்தாள். சற்றுத் தள்ளி செக்யூரிட்டி ஒருவன் நிற்பது தெரிந்தது. கைகளை அசைத்து அவனைப் பக்கத்தில் வரும்படி அவசரமாய் அழைத்தாள்.

செக்கியூரிட்டியும் விறுவிறுவென அவள் பக்கத்தில் வந்தான்.

மதுமதி மூச்சிரைத்தவள் கொண்டிருந்த படபடப்பு குறையாமல், நரேந்திரனை கைகாட்டியவள்,

''பாருங்கள் இந்த நபர் பெண் என்றும் பாராமல் ரொம்பவும் அசிங்கமாகப் பேசி அநாகரீகமாக நடந்து கொள்கிறார். இவரைப் போன்ற ஆட்களை உங்கள் காம்ப்ளெக்ஸில் விடுவதே தவறு. இவரை உடனே இங்கிருந்து வெளியேற்றுங்கள்...'' - கைகளை அசைத்த

வாறு துடிக்கும் உதடுகளுடன் ஆவேசமாய் அவள் சொல்லி முடித்து செக்யூரிட்டியைப் பார்க்க.. அவன் இருவரையும் திரும்பத் திரும்ப பார்த்து விட்டு கற்சிலை போல நின்றான்.

''ஹலோ.. செக்யூரிட்டி..? ஸார்..? உங்களைத்தான்... முதலில் அந்த ஆளை வெளியேற்றுங்கள்...''

மறுபடியும் அவள் கத்தியபடி ஆவேசமாக, செக்யூரிட்டிக்குப் பதில் நரேந்திரனிடமிருந்து பதில் இடி போல் வந்தது.

''முட்டாள் பெண்ணே; ரொம்பவும் கத்தாதே.. அவன் என்னிடம் சம்பளம் வாங்குகிறவன்...!''

மதுமதிக்கு தன் காதுகளை ஒரு கணம் நம்ப முடியவில்லை. 'என்ன சம்பளம் வாங்குகிறவனா? அப்படியானால்...?' காது மடல்கள் அதிர நரேந்திரனை நோக்கித் திரும்பியவள், ''அப்படியானால் இந்த காம்ப்ளெக்ஸ்...?'' என்றபடி அவனை வினோத பார்வை பார்க்க, ''உன் மரமண்டைக்கு இப்போதாவது புரிகிறதா? இந்த காம்ப்ளெக்ஸ் முழுவதும் என்னுடையது. வெளியேற வேண்டியது... நீதான்.. ம்ம்... கிளம்புகிறாயா?'' என்றான் அதிகாரமாய்.

'காம்ப்ளெக்ஸ் என்னுடையது நீ வெளியே போ..' என அவன் கோபமாய் சீற அவளும் கொஞ்சமும் அசரவில்லை. பதிலுக்கு வெடித்தாள்.

''ஹலோ... மிஸ்டர்.. நீ பெரிய பணக்காரனாய்.. கோடீஸ்வரனாய் இருக்கலாம். அதற்காக... நீ சந்திக்கும் பெண்களை எல்லாம் கேவலமாக நினைத்து கண்டபடி



பேச உனக்கு உரிமையில்லை. நாவடக்கம் வேண்டும். புரிகிறதா?'' என்றாள் கையொன்றை இடுப்பில் வைத்து அவனை அலட்சியப் பார்வை பார்த்தவாறு.

அவனும் அசராமல் நிதானத்தோடு எழுந்தாள்.

ஓரிரு கணம் அவளையே உறுத்த பார்வை பார்த்து விட்டு,

''நான் சொல்ல வந்தது கடைசி வரை உனக்குப் புரியவே இல்லை. நீ புரிந்து கொள்ளவும் போவதில்லை...'' என்றான் எரிச்சல் ததும்பும் குரலில்.

அவளுக்கும் எரிச்சல்தான்! ''அப்படி என்னதான் நீ சொல்ல வந்தாய்?'' என்றாள் கோபமாக.

அப்போதுதான் தன்னை அவள் ஒருமையில் விளிப்பதை அவன் உணர்ந்தான். சினம் எகிறியவனாய் முறைத்தான்.

அவன் முறைப்பதன் அர்த்தம் புரிந்து கொண்டவள், ''என்னை எவ்வளவு கேவலமாக நினைக்க முடியுமா.. அத்தனை கேவலமாக நினைக்கிறாய்.. உனக்கு மரியாதை வேறு தேவையா?'' என்றாள் மேலும் அலட்சியம் பொங்க.

அவன் உதடுகளை அசூயையாய் சுழித்தபடி அவள் பக்கம் வந்தான்.

''நீ என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள். நான் சொல்ல வந்ததை சொல்லி விடுகிறேன். நீ இந்த 'டி.வி.' கம்பெனியில் வேலை பார்ப்பதை நிறுத்தி விடு. இல்லையெனில் உனக்கு பெரும் ஆபத்து வந்து விடும்...''

''ஆபத்தா... எனக்கா..?''

''உனக்குத்தான்...! உனக்கு என்றால்.. உன் அபரீத மான அழகிற்கு... உன் நளினமான உடம்பிற்கு..!''

அவள் தோள்களை குலுக்கினாள். ''ஹூம்..! இது என்ன உளறல்? அப்படி யார் எனக்கு ஆபத்தை உண்டு பண்ணப் போவது?''

''நான்தான்...!'' என்றான் அவன் சலனமற்ற குரலில்.

# 5



மதுமதி ஒரு கணம் அசரத்தான். செய்தாள். 'நான் தான்...' என்று சர்வ சாதாரணமாய் சொன்னது அவளை திகைப்பான குழப்பத்தில் ஆழ்த்தியது.

பக்கத்தில் வந்து அவளையே உற்றுப் பார்த்தான் அவன்.

மதுமதியும் நேருக்கு நேராய் அவன் கண்களை, அந்த விழிகளைப் பார்த்தாள். அப்பா! ஊசி துளைப்பது போல் என்ன ஒரு பார்வை! இதுவரை அவள் யாரிடமும் பார்த்திராத விழிகள் அல்லவா இது?

அந்த விழிகளில் சிறிதும் கருணையோ, சாந்தமோ இல்லாமல் கடித்துக் குதறும் புலியின் வெறித்தனம் தெரிந்தது கண்டு மதுமதி மிரண்டாள்.



அவன் நரேந்திரன் அலட்சியமாய் பைகளை துழாவி சிகரெட் ஒன்றை பற்ற வைத்துக் கொண்டான். புகை விட்டவாறு யோசிப்பது போல் நெற்றியைப் பிடித்தவன், ''உன் பெயர் கூட... ரிக்கார்டில் பார்த்தேனே. ஏதோ.. மதி என்று? ஆங்.. மதுமதி! இதோ பார் மதுமதி, நீ நல்ல பிள்ளையாய் இந்த வேலையை விட்டு விட்டு வேறு வேலை தேடிக்கொள். அதுதான் உனக்கு நல்லது. எனக்கு நிறைய வேலை இருக்கிறது. நான் கிளம்புகிறேன்...''

அவன் சொல்லியபடி திரும்பப் போனான்.

''மிஸ்டர்... நரேந்திரன்..'' என்றாள் அவள் அழுத்தந் திருத்தமாக.

அவன் திரும்பி, ''பரவாயில்லை.. என் பெயர் கூட தெரிந்து வைத்திருக்கிறாயே...?'' என்றான் வியப்பாய்.

''மிஸ்டர் நரேந்திரன், நீங்கள் சொல்ல வந்ததைச் சொல்லுங்கள்...'' என்றாள் திரும்பவும் குரல் உயர. அவன் தோள்களைக் குலுக்கியபடி, ''புரிகிறது. நீ சரியான டியூப் லைட் தான். உனக்கு எல்லாவற்றையும் விவரமாகச் சொல்ல வேண்டும். சரி சொல்கிறேன். ஆனால் அதற்கு முன் ஒன்று. நான் சொல்வதைக் கேட்டு தாம் தீம்மென்று சற்று முன்பு குதித்தது போல் குதிக்காதே. பொறுமையாகக் கேள். கேட்டு விட்டு நீயே உன் தலை விதிப்படி முடிவெடுத்துக் கொள்.. புரிகிறதா?''

அவன் சொல்லிவிட்டு நிறுத்த அவள் வேகம் சற்றும் குறையாதவளாய், ''ம்ம்... சொல்லுங்கள்...'' என்றாள் அதிகாரமாய்.

''இதோ பார் நீ நுழைந்திருக்கும் இந்த டி.வி உலகம் வெளியே பார்ப்பதற்குத்தான் பகட்டாய் இருக்கும்.

உள்ளே நுழைந்தால்.. மிகவும் மோசமானதாக ஆபத்து அதிகமானதாக இருக்கும். ஆபத்து என்று நான் சொல்வது உன் போன்ற பெண்களின் வாளிப்பான நளினமான உடல் அழகைத்தான். அந்த அழகிற்கு கோடீஸ்வர பண முதலைகள் வலை விரிக்கும். தூண்டில் மீனாய் உன் போன்ற பெண்கள் அந்த மாயவலையில் சிக்கிக் கொண்டால் அவ்வளவுதான். உன் வாழ்க்கையே சின்னா பின்னமாகி விடும். அதனால்தான் உன்னை எச்சரிக் கிறேன். இந்த வேலை உனக்கு வேண்டாம். வேறு வேலையைத் தேடிக் கொள்.''

அவன் பேசி முடித்ததும் பதிலுக்கு நிதானமாய் அவனைப் பார்த்தாள்.

''உங்கள் எச்சரிக்கைக்கு நன்றி..'' என்றாள் கேலியான தொனியில்.

''இன்னும் என் உரையை முடிக்கவில்லை...'' என்றான் அவன் குரலை உயர்த்தி.

''ம்ம்.. தொடருங்கள்.. நீங்கள் என்ன பேசினாலும் என் காதில் விழத்தான் செய்யும்...'' என்றாள் மேலும் அவனைச் சீண்டுபவளாய்.

நரேந்திரன் செருமிக் கொண்டு, இவள் சரியான திமிர்க்காரிதான்.. என்ற நினைப்புடன் பார்த்தவன், ''நான் சொன்ன பண முதலைகள் என்பது என்னையும் சேர்த்து தான்...'' என்று ஒரு கணம் நிறுத்தி அவளை பார்த்து விட்டு, ''நீ கேட்காமல் தொடர்ந்து வேலையில் இருந் தால்... இது போன்ற பேச்சுக்களைக் கூட என்னுடைய படுக்கையில் அமர்ந்துதான் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும்...'' என்று முடித்தான்.



அவள் பலமாய் அலறுவாள் கோபப்படுவாள் என்று எதிர்பார்த்தவனுக்கு அவள் அமைதியாய் இருந்தது ஆச்சரியமானது.

''என்ன உன் காதில் விழுந்ததா? இன்னும் உனக்குக் கோபம் வரவில்லை..?''

- பதிலுக்கு அவளைச் சீண்டியபடி அவன் கேட்ட தற்கு, அவள் ஓரிரு நிமிடங்கள் பதில் சொல்லாமல் முறைத்தாள்.

''எல்லா அசிங்கங்களையும் பேசி முடித்தாயிற்று. இனி நான் போகலாம் தானே?'' சொல்லியபடி அவன் சம் மதத்திற்கு காத்திராமல் விறுவிறுவென நடக்க ஆரம்பித் தாள் மதுமதி.

அவள் சிலிர்த்துப் போவதை வினோதச் சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் நரேந்திரன்.

* * *

மதுமதி அதே கோபமும் வேகமுமாய் வீட்டிற்கு வந்த வளுக்கு வீட்டில் மேலும் ஒரு ஆச்சரியம் காத்திருந் தது.

அண்ணி சுமித்ரா இவள் நுழைந்ததும், ''அடடா... ஒரு நிமிடம் முன்னதாக வந்திருக்கக் கூடாதா? அவர்கள் இவ்வளவு நேரம் காத்திருந்தார்களே...?'' என்றாள் ஆற் றாமை பொங்க.

''என்ன அண்ணி.. யார் வந்தார்கள்?'' என்றாள் மதுமதி புரியாமல்.

''அதான் மது, இந்த டி.வி.யில் வருகிறதே புன்னகை ஒலி தொடர்... அந்தத் தொடரின் தயாரிப்பாளரும் டைரக்டரும் உன்னைத் தேடி வந்திருந்தார்கள்.. உனக்காகக் காத்திருந்தார்கள்...''

''என்னையா.. எதற்கு?'' மேலும் குழப்பமான மதுமதி கண் இமைகள் இரண்டையும் அகல விரித்து அண்ணியைப் பார்த்தாள். அண்ணியின் முகமோ மேலும் மேலும் பரவசமாகிக் கொண்டிருந்தது.

''என்ன மது.. இன்னுமா உனக்குப் புரியவில்லை? அவர்கள் தயாரிக்கப் போகும் அடுத்த டி.வி. தொடருக்கு உன்னைத்தான் கதாநாயகியாக தேர்ந்தெடுத்திருக்கிறார்களாம். கதையும் கூட ஏதோ.. புரட்சி செய்யும் புதுமைப் பெண்.. காரெக்டராம்.. உனக்கு பிடிக்கும் தானே? சம்பளப் பணமாய் ரெண்டு லட்சம் தருவதாக சொன்னார்கள். அந்தத் தொகை மட்டும் கிடைத்தால் நமக்கு எப்படி இருக்கும்? நாம் என்னவெல்லாம் செய்யலாம்...?''

- சர்வ சாதாரணமாய் அண்ணி பேசிக் கொண்டு போவது கண்டு மதுமதி பயங்கரமாய் திடுக்கிடத்தான் செய்தாள்.

''என்ன அண்ணி சொல்கிறீர்கள்..? டி.வி. தொடரில் நான் நடிப்பதா? நான் நடிக்க விரும்புவதாக யாரிடமும் சொல்லவில்லையே.. எனக்கு அதில் இஷ்டமும் இல்லையே.. அண்ணி?''

கைகளை விரித்து மதுமதி சொன்னபோதுதான் சுமித்ராவிற்கு நிஜம் உரைத்தது. அடாடா.. இவள் சம்மதிக்க வேண்டுமே.. அதை விட்டு விட்டு நாம் பாட்டுக்கு



எதையோ பேசிக் கொண்டிருக்கிறோமே என உணர்ந்தவள் மதுமதியின் பக்கம் வந்தாள்.

''தப்புதான்.. மது.. நான் பாட்டுக்கு எதையோ பேசிக் கொண்டிருக்கிறேன்... உன் விருப்பம்தான் முக்கியம். உனக்கு இஷ்டமில்லை என்றால் நீ எதிலும் நடிக்க வேண்டாம் மது. சரிதானே? அவர்கள் சொன்னதை உன்னிடம் சொல்கிறேன்.. அவ்வளவுதான்..!''

சுமித்ராவுக்கு, மதுமதிக்கு இஷ்டமில்லை. தான் பேசினால் இவள் ஒத்துக் கொள்ள மாட்டாள் என்பது புரிந்ததோ என்னவோ அத்தோடு அந்தப் பேச்சை நிறுத்தி விட்டாள்.

வழக்கம் போல் அவளுக்கு குளிர்பான ஜூஸ் கொண்டு வந்து கொடுத்து வேறு பேச்சு பேச ஆரம்பித்து விட்டாள்.

மதுமதியின் மனநிலையோ முற்றிலும் வேறுவிதமாக இருந்தது. அவள் நரேந்திரனைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தாள்.

அவ்வளவு.. பெரிய பணக்காரன் கோடீஸ்வரன்..

ஏன்.. அவளையே சுற்றி வர வேண்டும்? அவளை ஏன் தேடிப் பிடித்து வம்பிழுக்க வேண்டும்?

அதில் வேறு.. மிரட்டல் போன்ற எச்சரிக்கை வேறு. டி.வி. கம்பெனி வேலையை விட்டுவிட வேண்டும். இல்லா விட்டால்.. பெரும் ஆபத்து.. என்றெல்லாம் வேறு பிதற்றுகிறான்..

யாரவன்? எதற்காக இப்படி நம் வழியில் குறுக்கிட வேண்டும்? என்றெல்லாம் நினைத்துப் பார்த்த மதுமதிக்கு குழப்பமே மிஞ்சியது.

# 6



மாலை அண்ணனைப் பார்த்ததும் மதுமதியின் திகைப்பு பன்மடங்காகியது.

காரணம் அண்ணன் ரகுராமன், அவள் முகம் கழுவி டி.வி.க்கு எதிரான சோபாவில் உட்கார்ந்தபோது டி.வி. தொடர் பற்றிய பேச்சை ஆரம்பித்ததுதான்.

''மதுக்குட்டி அண்ணி சொல்லிருப்பாளே, அது பற்றி யோசித்தாயா?'' என்றபோது தூக்கி வாரிப் போட்டவளாய் திரும்பினாள்.

''எது பற்றி அண்ணா?''

''அதான்... அந்த டி.வி. தொடரில் நடிப்பது பற்றி உன்னை கதாநாயகியாய் வேறு அறிமுகப்படுத்துவதாய் சொன்னார்களாமே..!''

கிடைத்தற்கரிய வாய்ப்பு கிடைத்தது போல் சந்தோஷமும் மகிழ்ச்சியும் பொங்க அண்ணன் சொல்லச் சொல்ல அதிர்ச்சியலைதான் அவளுள் கூடியது.

''அண்ணா... என்ன சொல்கிறீர்கள்? நடிப்பது எல்லாம் எனக்குப் பிடிக்காத விஷயம்! நான் எதற்காக நடிக்க வேண்டும்? டி.வி.யில் காம்ப்பியரிங் செய்வதுதான் என் வேலை. அது எனக்குப் பிடித்திருக்கிறது.. அது போதும்.. அதுவே.. போதும்.. என நினைக்கிறேன்..!''



அவள் சொன்னதைக் கேட்டதும் ரகுராமன் அடக்க முடியாமல் சிரிக்கத்தான் செய்தான்.

மதுமதி புதிராய் கண்களை அகல விரித்து அவனைப் பார்த்தாள்.

''என்ன அண்ணா சிரிக்கிறீர்கள்?''

''மதுக்குட்டி, உனக்கு நிறைய விஷயங்கள் புரிபடவே இல்லை. இன்னும் குழந்தையாகவே இருக்கிறாய்.. நீ..''

அண்ணன் சொன்னதற்கு பதில் சொல்லாமல் முறைத்துப் பார்த்தாள் மதுமதி.

''கோபப்படாதே. மதுக்குட்டி. நான் சொல்வதை கொஞ்சம் யோசித்துப் பார்.. டி.வி.யில் காம்ப்பியரிங் என்ற பெயரில் அவர்கள் சொல்லிக் கொடுக்கும் வசனத்தை அப்படியே கேமிரா முன் ஒப்புவிக்கிறாய். அதையேதான் டி.வி. தொடரிலும் கேமிரா முன் செய்யப் போகிறாய்.. என்ன காம்ப்பியரிங்கில் செய்தி சம்பந்தப்பட்ட விஷயமாய் வசனமாய் இருக்கும். தொடரில் கதை சம்பந்தப்பட்ட வசனமாய் இருக்கும். அவ்வளவுதான் விஷயம்.. இதில் எதற்கு நீ பயப்பட வேண்டும்..?''

ரகுராமன் சொல்ல, கேட்ட மதுமதிக்கு ஒரு கணம் திகைப்பாகவே இருந்தது. அண்ணன் சொல்வது போல் இரண்டிலும் கேமிரா முன் நின்று அவள் பேச வேண்டும். ஆனால் அதற்காக.. இரண்டும் ஒன்றா..? தொடரில் அவள் ஏதாவது ஒரு கதாபாத்திரத்தில் வெவ்வேறு நபர்களுடன் அல்லவா நடிக்க வேண்டி இருக்கும்..? அதிலும் சில தொடர்களில் எல்லை மீறி நெருக்கமான காதல் காட்சிகள் கூட இடம் பெறுகிறதே!

மதுமதியின் நினைப்பை டக்கென புரிந்து கொண்டான் ரகுராமன். ''மதுக்குட்டி, உன் பயம் புரிகிறது. நிறைய பேர்களுடன், ஆண்களுடன் எல்லாம் நடிக்க வேண்டியது இருக்கும் என்றுதானே அஞ்சுகிறாய். நீ பயம் கொள்ளவே தேவையில்லை. உடன் நடிப்பவர்களின் விரல் நுனி கூட உன் மேல் படாது. போதுமா?''

''அப்படி யார் வந்து சொன்னார்கள்?'' என்றாள் மதுமதி திரும்பவும் கோபமாய்.

''எல்லாம் அந்த டி.வி. தொடர் தயாரிப்பாளர்கள்தான்..! அவர்கள் உன் அண்ணனிடம் உறுதிபட கூறியிருக்கிறார்கள். அதற்கு முக்கிய காரணம் தொடரில் உனக்கு கொடுக்கப்படும் புரட்சிகரமான காரெக்டர்.. இதை விட முக்கியமான ஒன்றும் இருக்கிறதாம்.. மதுக்குட்டி..''

''அது.. என்ன அதையும் சொல்லி விடுங்கள்...'' என்றாள் இறுக்கமான முகத்துடன்.

ரகுராமன் தங்கையின் மனநிலையை கொஞ்சமும் உணராமல் அவன் பாட்டுக்கு சுவாரஸ்யமாகிக் கொண்டிருந்தான். ''மதுக்குட்டி, அந்தக் கதையின் நாயகி காரெக்டர் பெண்களுக்கு இழைக்கப்படும் தவறுகளை, அநீதிகளை தட்டிக் கேட்கும்படி அமைந்திருக்கிறதாம். இதன் மூலம் சமுதாயத்தில் பெண்கள் மத்தியில் நல்ல ஒரு விழிப்புணர்வு ஏற்படவும் வாய்ப்பு இருக்கிறதாம். அதனால் இது போன்ற காரெக்டரில் நீ நடிப்பது மூலம், நிறைய பெண்களுக்கு வழிகாட்டுவது போலவும் ஒரு பெரும் வாய்ப்பு உனக்கு கிடைக்கும்.''

ரகுராமன் முடிக்க சிறிதும் கோபம் குறையாதவளாய் ''அவ்வளவுதானா..? இன்னும் இருக்கிறதா?'' என்றாள் சினம் பொங்க.



ரகுராமன் அப்போதுதான் தங்கையின் கோபத்தை லேசாக உணர ஆரம்பித்தான். இவளுக்குப் பிடிக்கவில்லை என்பதை உணராமலே பேசிக் கொண்டிருக்கிறோமே என நினைத்தவன் மெல்ல குரலை தாழ்த்தி, ''மதுக்குட்டி இதெல்லாம் உனக்குப் பிடிக்கவில்லையா... உன் அபிப்ராயம்தான் என்ன?'' என்றான் பரிவாய்.

மதுமதி அப்பாடா.. இப்பவாவது அண்ணனுக்கு தன் நிலைமை புரிந்ததே என மூச்சை இழுத்து விட்டவள் அதே விரைப்புடன் அவனைப் பார்த்தாள்.

''இதோ பார் அண்ணா, என்னுடைய அபிப்ராயம் என்ன என்பதை தெளிவாக சொல்லட்டுமா?''

''தாராளமாகச் சொல் மதுக்குட்டி.''

''எனக்கென்னவோ.. நாம் பணம் அதிகமாய் கிடைக்கிறது என்பதற்காக நமக்குத் தெரியாத, அனுபவமில்லாத துறையில் மேலும் மேலும் இறங்கி ஆபத்தை விலைக்கு வாங்குகிறோமோ என்று தோன்றுகிறது. மேலும் எல்லோரும் சொல்வது போல் டி.வி. உலகமும் சினிமா உலகம் மாதிரி ஒரு மாயைதான்.. இங்கு எல்லாம் பகட்டாய் கவர்ச்சிகரமாய்த்தான் இருக்கும். ஆனால் ஒவ்வொன்றிலும் ஒரு ஆபத்து நம்மை ஏமாற்றக் காத்திருக்கும்.. என்று.. எனக்குத் தோணுகிறது...''

மதுமதி சொல்ல பலமாய்த் தலையாட்டி அதை ஆமோதித்தான் ரகுராமன்.

''நீ சொல்வது ரொம்பச் சரி..!'' என்றான்.

''பிறகு... என்னண்ணா.. இந்த டி.வி. தொடர், நடிப்பு எல்லாம் வேண்டாம்தானே..?'' அண்ணன் தெளிவாய்

தன் கருத்தைப் புரிந்து கொண்டான் என்ற பிரயாசையுடன் அவள் கேட்க, அதற்கு மறுப்பாய் தலையசைத்தான் ரகுராமன்.

''மதுக்குட்டி, நீ சொல்வது சரி. ஆனால் ஒன்றை யோசி. நாம் என்ன படித்தவர்கள்தானே? கண்ணைத் திறந்து வைத்துக் கொண்டு குழியில் விழும் அளவுக்கு முட்டாள்கள் அல்லவே..! நமக்குத் தெரியாமல் நம்மை மீறி எதுவும் நடந்து விடுமோ? அல்லது யாரும் அவ்வளவு எளிதாய் நம்மை ஏமாற்றத்தான் முடியுமா? நான் பணம் அபரீதமாய் கிடைக்கிறது என்பதற்காக இதைச் சொல்லவில்லை. எத்தனையோ லட்சத்தில்.. கோடியில் ஒருவருக்குக் கிடைக்கிற அரிய வாய்ப்பு உன்னைத் தேடி வந்திருக்கிறது. அதை நீ உன் வீண் பயத்தில் விட்டு விடக்கூடாதே என்பதற்காகத்தான் எடுத்துச் சொல்கிறேன்...''

அண்ணனின் பேச்சை கேட்டுக் கொண்டிருந்த மதுமதிக்கு, மத்தளத்திற்கு இருபுறமும் அடி விழுவது போல்தான் நிலை இருந்தது. ஒருபுறம் தன் கருத்து நியாயமாகத் தோன்றினாலும், அண்ணன் சொல்லும் விளக்கத்துடன் அவனது கருத்தைப் பார்க்கும்போது அதுவும் நியாயமாகவே தோன்றியது.

முடிவு எடுக்க முடியாமல் அவள் குழம்புவதைப் புரிந்து கொண்ட ரகுராமன், ''இதோ பார் மதுக்குட்டி, நீ ஒன்றும் குழம்ப வேண்டாம். நாளை அந்த டி.வி. தொடர் தயாரிப்பாளர்கள் திரும்ப வருவதாய் சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். நாளை அவர்கள் வந்ததும் நீ பேசிப்பார். தொடரின் கதை பற்றியும் உன் காரெக்டர் பற்றியும்



கேட்டுப் பார். உனக்குப் பிடித்திருந்தால், நிஜமான விருப்பமிருந்தால் நீ சம்மதம் கூறு. இல்லையென்றால் முடியாது என தெளிவாகச் சொல்லிவிடு. சரிதானே?'' என்றதும் இம்முறை மதுமதி பலமாய் தலையாட்டினாள்.

கூடவே அசரீரி போல் நரேந்திரனின் சொற்கள் அவள் காதில் ஒலித்தது. 'பணத்துக்காக உடைகளில் இருந்து ஒவ்வொன்றாய் குறைத்து நீ இழக்க வேண்டியிருக்கும். ஒரு கட்டத்தில் நீ வேசி போல... அதனாலே சொல்கிறேன் இந்த டி.வி. உலகம் உனக்கு வேண்டாம். போ.. போய் விடு! இதை விட்டு விலகி விடு. வேறு வேலை தேடிக் கொள்!'

- நரேந்திரன் சொன்னதில், 'போ.. போய் விடு.. விலகி விடு.!' வார்த்தைகள் திரும்பத் திரும்ப அவள் காதுகளில் ரீங்காரமிட்டு அவள் சினத்தை அதிகப்படுத்தியது.

இவன் யார்..? இவன்.. என்ன சொல்வது..? என்னமோ இவன் காதலிக்கிறவள், கட்டியவள் போல் அல்லவா உரிமையுடன் விரட்டுகிறான்? இவனுக்கு அந்த அதிகாரத்தை யார் கொடுத்தது..? இதில் அவனே வந்து அவளது வாழ்க்கையை சீரழித்து விடுவதாய் மிரட்டல் வேறு..!

நினைக்க நினைக்க மதுமதி கொதிப்பாய் உணர்ந்தாள். நரேந்திரன் தன்னை இவ்வளவு கேவலமாய் பேசி வாலாட்டியதற்காகவாவது அவனது மூக்கை உடைத்து சரியான பாடம் கற்பிக்க எண்ணினாள்.

அந்த கோபமான வீராப்பிலே மறுநாள் வந்த டி.வி. தொடர் தயாரிப்பாளர்களிடம் கதையைப் பற்றிக்கூட கேளாமல் தொடரில் நடிக்க சம்மதம் தெரிவித்தாள்.

அட்வான்ஸ் தொகையை வாங்கிக் கொண்டு அவர்கள் காட்டிய அக்ரீமெண்ட் பாண்டு பேப்பர்களில் எல்லாம் படித்துப் பார்க்காமல் கையெழுத்திட்டாள்.

தான் மிகப் பெரிய ஆபத்தொன்றில் சிக்கிக் கொள்ளப் போகிறோம் என்பதை அப்போது கொஞ்சமும் உணரவில்லை மதுமதி.

## 7



மதுமதி அக்ரீமெண்ட் பேப்பர்களில் கையெழுத்திட்டு ஒரு வாரம் ஓடிப் போனது. சரியாக பத்தாவது நாள் டி.வி. தொடர் தயாரிப்புக் கம்பெனியிடமிருந்து அவளுக்கு அழைப்பு வந்தது.

மறுவாரம் தொடரின் ஷூட்டிங் ஆரம்பிப்பதாகவும் அவள் தயாராக இருக்கும்படியும் கேட்டுக் கொண்டார்கள். அதே நேரம் அவளது 'காம்ப்பியரிங்' தொகுப்பாளினி பணியும் பாதிக்கப்படாமல்' தொடர் தயாரிப்பாளர்களே டி.வி. நிறுவனத்திடம் பேசி அவளுக்கு அனுமதி வாங்கிக் கொடுத்தனர்.

ஷூட்டிங் நாளும் வந்தது. முதல் நாள் ஷூட்டிங் 'அன்பு இல்லம்' எனப்படும் அனாதை ஆசிரமம் ஒன்றில்



ஒளிப்பதிவுடன் ஆரம்பித்தது. மதுமதி அந்த சின்னஞ் சிறு சிறுவர் சிறுமிகளுடன் பேசுவது சிரிப்பது போன்ற காட்சிகள் படமாக்கப்பட்டன.

நளினமான உடல் வாகுடன் பளீரிடும் தங்க நிற அழகில் மதுமதி ஜொலித்ததால், மேக்கப் சாயம் என அதீத செயற்கை விஷயங்கள் எதுவும் இல்லாமல் லேசான டச் அப்புடன் இயற்கையான அழகிலேயே மதுமதியை நடிக்கச் செய்தனர்.

மதுமதியும் நடிப்பு அது இதுவென ஒருவித நடுக்கத்துடன் முதலில் இருந்தது போகப் போக பழகி இயல்புக்கு வந்ததை உணர்ந்தாள்.

தன் உடன் நடித்தவர்களும் இனிமையாய், அன்பாய் மரியாதையோடு பழகுவதைக் கண்டு மதுமதிக்கு மகிழ்ச்சியும், இதற்குப் போய் இவ்வளவு பயந்தோமே..? என்ற எண்ணமும் ஏற்பட்டது.

அன்றைய ஷூட்டிங் அத்தோடு முடிந்து இரண்டு மூன்று நாள் கழித்து மறுபடி தொடர்ந்தது. மூன்றாம் நாள் ஒரு பெரிய பங்களாவில் ஷூட்டிங் தொடங்கியபோது மதுமதிக்கு அந்த பிரச்சினை ஏற்பட்டது.

வழக்கம் போல் அவளை வைத்து சிறு சிறு வசனங்களை பேசச் சொல்லி ஷாட் எடுத்தவர்கள், மதிய லஞ்ச் ஹவர் முடிந்து ஷூட்டிங் தொடர்ந்தபோது.. மதுமதியின் பக்கத்தில் தாடி இளைஞன் ஒருவன் வருவது போல் அவளிடம் பேசுவது போல் எல்லாம் காட்சிகளை எடுக்க ஆரம்பித்தனர். திகைத்த மதுமதியிடம், ''ஸ்நேகமாகப் பேசி அந்த இளைஞனுடன் நீங்கள் கைகுலுக்க வேண்டும். ஒரு புன்னகை புரிய வேண்டும். அவ்வளவுதான்!''

என சொல்லி வற்புறுத்த.. மதுமதி குழம்பத்தான் செய்தாள்.

அவள் பயப்படுவதை உணர்ந்ததும் யூனிட்டின் டைரக்டர் பக்கத்திலிருந்த துணை நடிகையிடம் சைகை காட்டினார். அந்த துணை நடிகை மதுமதியை தனியே அழைத்துச் சென்று, ''என்னம்மா இந்த பயம் பயப்படு கிறாய்? லேசாய் கை குலுக்குவது.. ஒரு ஆணோடு பேசுவது எல்லாம் அப்படி என்ன கெட்ட காரியமா? தினம்.. வீட்டை விட்டு வெளிவந்ததும் எத்தனை பேரை நாம் சந்திக்க வேண்டியிருக்கிறது. எத்தனை பேருடன் நாம் பேச வேண்டியிருக்கிறது..? அது போல்தானே.. இதுவும்..!'' என்று அவளை சமாதானப்படுத்த மதுமதி பதில் சொல்ல முடியாமல் திணறத்தான் செய்தாள்.

பின் அதே குழப்ப மனநிலையுடனே என்ன செய்வது என்று புரியாமல் அந்த தாடி இளைஞனுடன் பேசுவது போல், சிரிப்பது போல் எல்லாம் நடித்தாள். டயலாக் பேசுவதற்கு கூட, ''நீங்கள் சிரமப்பட வேண்டாம். லேசாக உதட்டசையுங்கள். எல்லாவற்றையும் டப்பிங்கில் சரி செய்து கொள்ளலாம்...'' என்று சொல்லிவிட தான் என்ன வசனத்தை பேசப் போகிறோம் என்று கூட மதுமதிக்கு அப்போது தெரியவில்லை.

அன்றைய ஷூட்டிங் முடிந்து மறுநாளும் அதே இடத்தில் ஷூட்டிங் தொடர்ந்தது. முன்பு போலவே அந்த தாடி இளைஞன் அவளிடம் வருவது போல் பதிலுக்கு மதுமதி கோபமாய் பேசுவது போல் எல்லாம் காட்சிகளை எடுத்தனர். மறுபடியும் அவன் மதுமதியின் கைகளைப் பிடித்துக் கொண்டு பேசுவது போல்... மெல்ல அவன்



பக்கத்தில் நெருங்கி மதுமதியின் தோளோடு தோளாய் நிற்பது போல் எல்லாம் காட்சிகளை எடுக்க.. மதுமதி நெளியத்தான் செய்தாள்.

பயங்கர எரிச்சலும் கோபமும் கொண்டவள்; அத்தனை பேர் முன்னிலும் எப்படி இதைச் சொல்லுவது? தன் மறுப்பை எப்படி வெளிப்படுத்துவது? என புரியாமல் திண்டாடத்தான் செய்தாள்.

அவளின் அந்தக் குழப்பமான திண்டாட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டதுபோல் படபடவென அன்றைய காட்சிகளை ஷூட் செய்தனர்.

அந்த தாடி இளைஞனுடன் சிரித்தபடி சேர்ந்து நடப்பது போல், கைகளை கோர்த்துக் கொண்டு ஓடுவது போல், அவன் அவள் தோளில் கை போட்டு உரிமையாய் பேசு வது போல் எல்லாம் காட்சிகளை மின்னல் வேகத்தில்.. எடுத்துவிட மதுமதி ஒரேயடியாய் திகைத்துதான் போனாள்.

நாமா.. இப்படி யாரோ.. ஒரு முன் பின் தெரியாத தாடி இளைஞனுடன் நடிப்புக்காக பேசுவது போல்.. சிரிப்பது போல்.. ஏன் ஒரு கட்டத்தில் உரிமையாய் அவளை தோளோடு சேர்த்து அவன் அணைக்கக் கூட செய் தானே..? என்னாயிற்று.. நமக்கு... எப்படி இதையெல்லாம் அனுமதித்தோம்? நினைத்து நினைத்து வெம்பிப் போனவளாய் ஒப்பனைகளைக் கலைத்தாள்.

இன்று அண்ணனிடம் சொல்லி இந்த விஷயத்திற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். இந்த நடிப்பு எல்லாம் நமக்கு ஒத்து வராது. முடியவே முடியாது.. என ஒரேயடியாய் மறுத்து விட வேண்டும் என்றெல்லாம் தீர்மானம் பண ணியவளாய் எழுந்து கொண்டாள்.

அவள் ஹேண்ட் பேக்குடன் வெளிவந்தபோது டி.வி. தயாரிப்பு நிர்வாகி ஒருவர் ஓடி வந்து அவள் கைகளில் அந்த செக்கை திணித்தார். "இன்றைய பேமண்ட் வாங்கிக் கொள்ளுங்கள்..." என்றபடி அவர் சென்றுவிட மதுமதி அந்த செக்கை விரித்துப் பார்த்தாள்.

செக்கில் அவளது அன்றைய சம்பளமாய் 'பத்தாயிரம்' ரூபாய் எழுதப் பட்டிருந்தது. மதுமதி திகைக்கவே செய்தாள். இன்றைய ஒரு நாள் நடிப்பிற்கு இவ்வளவு பெரிய தொகை சம்பளமா?

அவளுக்கு இப்போது ஓரளவு எல்லாம் புரிந்து விட்டது. பெண்கள் ஏன் விட்டில் பூச்சிகளாய் இந்த டி.வி... காம்ப்பியரிங் நடிப்பு.. என்றெல்லாம் வருவது.. இந்தப் பணத்தைக் கண்டு மயங்கித் தானே? என்பது விபரீதமாய் அவளுள் உரைத்தது.

தானும் அப்படி பணத்தைக் கண்டு ஒரு போதும் மயங்கிவிடக் கூடாது.. என உறுதியுடன் நினைத்தவள்.. அதே வேகத்துடன் விறுவிறுவென நடந்து ஷூட்டிங் செட்டை விட்டு வெளிவந்தாள்.

ஆட்டோ ஒன்றைப் பிடித்து வீட்டுக்குச் செல்லலாம். என்று நினைத்தபடி அவள் நிமிர்ந்தபோது.. எதிரே வாசலின் க்ரில் கேட் அருகே அவளுக்காக காத்திருப்பது போல் அவன் நின்று கொண்டிருந்தான்.

அந்த தாடி இளைஞன்! அன்றைய ஷூட்டிங்கில் அவளுடன் பேசி தொட்டு நடித்த அதே தாடி இளைஞன்!

அவனைப் பார்த்ததும் அவள் முகம் எள்ளும் கொள்ளும் வெடித்தது போல் பயங்கர எரிச்சலுக்குப் போனது.



இவனுடன் எல்லாம் சிரித்துப் பேசி நடித்து தொலைத்து விட்டோமே... என குமைந்தவளாய் அவனைப் பார்க்கப் பிடிக்காமல் குனிந்தபடி விறுவிறுவென நடக்க ஆரம்பித்தாள்.

ஆனால்.. அவன் அவளை விடுகிற மாதிரி இல்லை.

மதுமதி பக்கத்தில் நெருங்கியதும் கைகளை குறுக்காய் காட்டி, "ஹலோ... ஒன்மினிட்..." என்றபடி நிறுத்தினான்.

மதுமதி நிமிர்ந்து அதே எரிச்சலோடு முகத்தை சுழித்தபடியே அவனைப் பார்த்தாள். சொல்லப்போனால்... உடன் தன்னுடன் நடித்த போது கூட அவனை அவள் சரியாய் பார்க்கவில்லை. யாரோ ஒருவன்... டிவி ஆர்ட்டிஸ்ட் என்று விட்டு விட்டாள்.

இப்போது உற்றுப் பார்க்கும் போது கரடி போல் முகம் முழுக்க தாடியும் அடர்ந்த ஹிப்பி முடியும் வைத்துக் கொண்டு.. அவன் இருப்பது தெரிய.. இவ்வளவு அசிங்கமான மூஞ்சோடு போய் நடித்திருக்கிறோமே...? என அவள் நினைப்பு ஓடியது. அவன் தாடி ஆசாமி அவள் நினைவுகளை கலைப்பது போல் அவள் முகத்தருகே கண்களால் சொடுக்கிட்டான்.

"ஹலோ..." என்றான் மறுபடியும் குரலை உயர்த்தி.

"என்ன?" என்றாள் இவள் கோபமாக.

"என்னுடன் இவ்வளவு நேரம் நெருக்கமாக நடித்து விட்டு ஒரு புன்னகை கூட செய்யாமல் போனால், எப்படி?"

அவன் கேட்க மதுமதிக்கு வந்ததே கோபம்!

''ஹேய்.. மிஸ்டர், என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்? நீ யாரோ.. நான் யாரோ...! வழியை.. விடு...!'' - வெடுக்கென பேசியபடி மதுமதி அகலப்போக,

அவன் படபடவென அத்தனை பற்களையும் காட்டிச் சிரித்தவன், மறுபடியும் அவளைத் தடுத்தான்.

''யாரோவா? என்னம்மா... மறந்து விட்டாயா? கொஞ்ச நேரத்திற்கு முன் காதலர்களாய் கேமிரா முன் நடித்தோமே... அதற்குள் மறந்துவிட்டாயா...?'' - உற்சாகமான குரலில் அவன் கேட்க.. மதுமதி பயங்கரமாய் திடுக்கிட்டாள்.

'என்ன.. காதலர்களாவா...அந்த காட்சியில் நடித்திருக்கிறாள்...? அதுவும் இவனுடனா? என்ன ஒரு கண்றாவி... இது...! அதனால்.. தான்.. அந்த டைரக்டர் சொன்னால் இவள் மறுப்பாள் என நினைத்து வெறும் உதட்டசைப்பு போதும் டப்பிங்கில் பார்த்துக் கொள்ளலாம்... என்று சொன்னாரோ...?'

அவன் சொல்லச் சொல்ல அவள் ஒன்றும் ஓடாதவளாய் அப்படியே திகைத்துப் போய் நின்றாள். அவன் நிதானமாய் அவள் முன் வந்து கை கட்டிக் கொண்டு அவளையே உற்றுப் பார்த்தான்.

மறுபடியும் அவள் முகத்தருகே சொடுக்கிட்டவன், ''காட்சிதான்... என்னவென்று புரிந்து கொள்ளவில்லை. கூட நடித்த நானாவது யார் என்று தெரிகிறதா...? உற்றுப் பார் என்னை...!'' என குரல் மாறி கர்ஜித்த போது மதுமதி அரண்டு போய்த்தான் அவனைப் பார்த்தாள்.

அவள் பார்க்கப் பார்க்க.. அவன் நிதானமாய் தன் தலையில் வைத்திருந்த விக் முடியையும் பெரிய ஒட்டுத்தாடியையும் அகற்றினான்.



''முட்டாளே... இப்போதாவது என்னைத் தெரிகிறதா?'' அவளை மறுபடியும் முட்டாளாக்கியபடி அங்கு நரேந்திரன் நின்று கொண்டிருந்தான்!



# 8

நரேந்திரனை அந்த இடத்தில் மதுமதி சற்றும் எதிர்பார்க்கவில்லை.

என்ன அநியாயம்...! பெரிய ஹிப்பி போல் தலைக்கு விக்கும், அடர்ந்த கருகருதாடியும் வைத்து அவளுடன் நடித்த ஆசாமி.. இந்த கொழுப்பெடுத்த நரேந்திரன்தானா?

நம்ப முடியாமல் மறுபடியும் அவள் மை விழிகளை விரித்துப் பார்க்க.. கடகடவென அவன் சிரிக்க ஆரம்பித்தான்.

''அவ்வளவு பிரகாசமான லைட் வெளிச்சத்திலே என்னை அடையாளம் தெரியாமல், என்னுடன் காதல் சரஸமாடினாயே...? நல்ல... பெண்தான்.. நீ!'' அவன் எள்ளி நகையாட.. அவள் அவமானத்தில் துடித்தாள்.

அவன் சொல்வது உண்மைதானே? அவன் என்று உணராமல் அவனுடனே நடித்து.. 'கைகளைப் பிடித்து தோளோடு உரசி நின்று தொலைத்திருக்கிறாளே!

''இன்று இன்னொரு முக்கியமான விஷயத்தையும் தெரிந்து கொண்டேன்...'' அவன் பீடிகையாய் இழுத்தான்.

அவள் பேசாமல் அவன் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும் என பற்களால் உதடுகளை அழுந்த கடித்தபடி நிற்க.. அவன் தொடர்ந்தான்.

''காசு.. கொடுத்தால்... உன் உடைகளை குறைப்பது மட்டுமல்ல.. உன்னைத் தொடவும் அனுமதிப்பாய் என்ற ரகசியத்தையும் புரிந்து கொண்டேன்...''

அவள் பேசாமல் நின்றவள் கண்களையும் மூடிக் கொண்டாள்.

வேறுவழியில்லை. வசமாய் அகப்பட்டுக் கொண்டாயிற்று. இனி எந்த அவமானத்தையும் தாங்கித்தான் ஆக வேண்டும். அவன் இஷ்டத்திற்கு என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டும்...

அவனும் விடுவதாயில்லை.

''பரவாயில்லை.. மதுமதி.. நீயும் புத்திசாலிதான். ரதி போல் அழகான ஒரு உடம்பை வைத்துக் கொண்டு.. அதை வைத்து எப்படியெல்லாம் காசு பண்ணலாம் என்கிற வித்தையையும் தெரிந்து வைத்திருக்கிறாயே? படிப்படியாக அல்லவா சம்பாதிக்க ஆரம்பித்து விட்டாய்?'' சொல்லியபடி அவள் உடம்பை மேலும் கீழுமாய் ஒரு பார்வை பார்த்தபடி சுற்றி வந்தான்.

அவனது கண்ணில் அவளது ஹேண்ட்பேக் பட்டது. மறுபடி குறுகுறுப்பானான்.

''ஹேண்ட் பேக்கில்.. அந்த 'செக்'கை பத்திரமாய் வைத்திருப்பாயே...? எவ்வளவு தொகை? பத்தாயிரம் ரூபாயா...? நான் எதிர்பார்த்ததுதான்.. ஆனால் கேவலம் இந்த பத்தாயிரம் ரூபாய்க்காக என்னுடன் காதலி போல் பேசி சரஸமாட சம்மதித்து விட்டாயே...? ஹூம்...!''



அவன் தன்னால் முடிந்த அளவு கத்திய போதும் அவள் எதுவுமே தன் காதில் விழாதது போல கற்சிலையாய் நின்றாள்.

அது அவனுக்கு ஆத்திரத்தை கிளப்பியது.

முன்னால் வந்து அவள் தோள்களை அழுந்தப் பற்றியவன் அவள் மென்னி குலுங்குமளவுக்கு பிடித்து உலுக்கினான்.

''நான் ஒருவன் கேட்கிறேன் அல்லவா? பதில் சொல்...!'' என்றான்.

கோபமாய் அவன் கத்திய போதுதான் அவன் உரிமையாய் தன் தோளை பிடித்திருப்பதை பெரும் சினத்துடன் உணர்ந்தாள்.

''முதலில் கையை எடுங்கள்...'' என்றாள் அதே ஆவேசத்துடன்.

அவளது சினம் அவனுக்கு ஆத்திரத்தை மீண்டும் ஏற்படுத்தியது.

டக்கென அவள் தோள்களிலிருந்து கையை எடுத்தவன் அதே கைகளால் தனது பாண்ட் பாக்கெட்டில் கைவிட்டு பர்ஸை எடுத்தான்.

''ஓ.. மறந்தே விட்டேன்..! காசு.. பணம் கொடுத்தால்தானே உன்னைத் தொட்டுப் பேச அனுமதிப்பாய்? உன் தோள்களை தொட்டுப் பேசி விட்டேன். அப்படிப் பேச.. நான் எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும்?

இப்போதே.. சொல்... பைசல் பண்ணிவிடுகிறேன்... ம்ம்.. சொல்.. எவ்வளவு?''

அவனது இந்தக் குத்தலுக்கு பயங்கர எரிச்சலானவள் காதுகளைப் பொத்தியபடி ''நிறுத்துங்கள்...'' என்றாள் அலறும் குரலில்.

அவன் நிதானமாய் அவளைப்பார்த்தபடி மூச்சிழுக்க.. மதுமதியும் ஓரிரு நிமிடங்கள் அமைதி காத்து தன்னை ஆசுவாசப்படுத்தினாள்.

''இதோ.. பாருங்கள் மிஸ்டர் நரேந்திரன்...'' என்று அவள் ஆரம்பித்த போது, ''ம்ம்.. சொல்...'' என்றான் அவன் அலட்சியமாய்.

''நான் இன்று.. இப்படி.. நடித்தது தவறுதான்.. ஆனால் இது.. என்னை.. மீறி.. நான் புரிந்து கொள்ளாமலே நடந்து விட்ட.. தவறு..! இன்று இது இத்தோடு போயிற்று. நாளை இது போன்று தவறு எதுவும் நடக்காது. ஏனென்றால்...'' அவள் நிறுத்திவிட்டு நிமிர்ந்து அவனை உறுதியாய்ப் பார்த்தாள்.

''இன்றோடு... இந்த.. டிவி.. ஷோ.. நடிப்பு இதற்கெல்லாம் முழுக்கு போட்டு விட்டேன். இனி எக்காரணம் கொண்டும் கேமிரா முன் வர மாட்டேன். இது நான் எடுத்திருக்கும் தீர்மானமான முடிவு...''

அவள் பெரும் சபதம் எடுத்தது போல் சொல்ல.. அவனது பார்வையில் கேலி அதிகமாகியது.

''உன் முடிவை குப்பையில் கொண்டு போய் போடு...'' என்றான் சாதாரணமாய்.

''என்ன உளறுகிறீர்கள்?'' என்றாள் அவளும் கொதிப்பாய்.



''முட்டாளே...! காண்ட்ராக்ட்டில் கையெழுத்துப் போட்டிருக்கிறாய். மறந்து விட்டாயா?''

மறுபடியும் முட்டாள் என்கிறான்... என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான் இவன்...? ஆத்திரமாய் நினைத்தவள் அதே ஆத்திரத்துடன் கைகளைச் சொடுக்கினாள்.

''மிஸ்டர்... முதலில்.. இந்த முட்டாள் கிட்டாள் என்று பேசுவதை நிறுத்துங்கள். நான் ஒன்றும் முட்டாள் இல்லை...!'' என்றாள் மூச்சு வாங்க.

அவன் பதிலுக்கு கைகளைத் தட்டி சிரித்தான்.

''முட்டாள் இல்லையா...? நீ.. முட்டாள்தான்...! அதிலும் சரியான அடி முட்டாள்...! இல்லையென்றால் டிவி தயாரிப்பாளர்கள் நீட்டிய பாண்டு பேப்பர்களில் அப்படி படித்துக் கூட பார்க்காமல் நீ கையெழுத்திட்டிருப்பாயா...? அது ஒன்றே போதும்.. நீ முட்டாள் என்பதை ஊருக்கு பறை சாற்ற...!''

அவன் சொல்லச் சொல்ல அவளுக்கு உரைத்தது. பாண்டு பேப்பர்களில் என்ன எழுதி இருக்கிறது என்று படித்துப் பார்க்காமல் கையெழுத்திட்டிருக்கிறாளே...! அதில் அப்படி என்ன எழுதியிருப்பார்கள்? பயத்தோடு அவனைப் பார்க்க.. அவளது நினைப்பை எளிதில் படித்து விட்ட நரேந்திரன் தொடர்ந்தான்.

''அந்த பாண்டு பேப்பர்களில் மூன்று மாத காலத்திற்கு உன்னை காண்டிராக்ட் ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள். அந்த குறிப்பிட்ட மூன்று மாத காலத்திற்கு நீ எந்தவித மறுப்பும் சொல்லாமல் படப்பிடிப்பு நடக்கும் இடங்களுக்கெல்லாம் சென்று முழு ஒத்துழைப்புடன் அவர்களுக்கு நடித்துக் கொடுக்க வேண்டும். தெரியுமா?''

''மறுத்தால் என்ன செய்வார்கள்?''

''வேறென்ன...? ஐம்பது லட்சமோ... ஒரு கோடியோ கேட்டு உன் மீது நஷ்ட ஈடு வழக்கு தொடர்வார்கள். பின் போலீஸ், கோர்ட் என நீயும் உன் குடும்பமும் வாழ்நாள் முழுவதும் அலைய வேண்டியதுதான்! மேலும், அந்த தயாரிப்பு நிர்வாகிகளை சாதாரணமாய் நினைத்து விடாதே! நீ எதும் வம்பு செய்தால் உன்னை தொலைத்து விடுவார்கள் தொலைத்து...!'' அவன் மிரட்டலாய் சொல்ல.. அவளுக்கு அது சுரீரென உரைக்க நிமிர்ந்தாள்.

''ஆமாம்.. டிவி தயாரிப்பாளர்களுக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்? நீங்கள் எதற்கு இதில் தலையிட வேண்டும்... சொல்லுங்கள்?''

அவன் இதழ்களில் கேலிப் புன்னகை வழிந்தது.

''இன்னுமா புரியவில்லை? அவர்கள் உன்னை வைத்து எடுக்கும் காதல் தொடரில் உனக்கு காதலனாய் வரும் ஹீரோவே நான்தான்... புரிகிறதா?''

தலையில் கைவைத்துக் கொண்டு அவனைப் பார்த்தாள் மதுமதி.

''மிஸ்டர்.. உங்களுக்கு என்னைச் சீண்டுவதைத் தவிர வேறு வேலையே கிடையாதா? ஏன்.. இப்படி அடிக்கடி என் வழியில் குறுக்கிட்டு.. எனக்கு எரிச்சலை ஏற்படுத்துகிறீர்கள்?''

''அதற்கு ஒரே ஒரு காரணம்தான் மதுமதி...!'' என்றான் சிரிப்பு மாறாமல்.

''அது என்ன...?'' என்றாள் அவள் எரிச்சலோடு.



''அழகான புள்ளிமான் ஒன்று வழி தவறி, வரக்கூடாத ஒரு இடத்திற்கு வந்துவிட்டது. அதை முடிந்த வரைக்கும் எச்சரித்து பாதுகாக்க முயல்கிறேன்.. அவ்வளவுதான்..!''

''அந்தப் புள்ளிமான் நான்தானே?''

''ம்ம்.. நீயேதான்! இங்கு வேட்டைக்காரர்கள் ஜாஸ்தி. உன்னை யாரும் வேட்டையாடி விடக்கூடாது என்று பயப்படுகிறேன்...''

அவள் தோள்களை சிலுப்பினாள்.

''நல்ல கதைதான்! ஆடு நனைகிறது என ஒரு ஓநாய் நிஜமாகவே கவலைப்படுகிறதே!''

அவன் அவளது கேலியை பொருட்படுத்தாமல் பார்த்தான்.

''என் பயம் அதுவல்ல. என்னைத்தவிர வேறு யாரும் உன்னை வேட்டையாடி விடக் கூடாதே என்பதுதான்...!''

''அட... இது என்ன புதுக்கதை...?''

அவன் தலையை சிலுப்பினான்.

''புதுக்கதையில்லை... பழைய கதைதான்! ஆரம்பத்திலே உன்னை நான் எச்சரித்தேன். இந்த டிவி உலகம் உனக்கு வேண்டாம்... மோசமானது.. என்றெல்லாம் புத்தி சொல்லிப் பார்த்தேன். ஆனால் நீ கேட்கவில்லை தொடர்ந்து விடாமல் பிடிவாதம் பிடித்து நுழைந்து கொண்டிருக்கிறாய். காம்ப்பியரிங்கில் உடைகளைக் குறைத்தாய், சீரியல் தொடர்களில் தொட்டு நடிக்க அனுமதித்து விட்டாய்.. இது.. இப்படிச் செய்வது கடைசியில் உன்னை எங்கே கொண்டு போய் நிறுத்தி விடும் தெரியுமா?''

''எங்கே...?'' என்றாள் அவள் ஒன்றும் புரியாத அப்பாவிக் குரலில்.

அவன் ஒருகணம் பதில் பேசாமல் பக்கத்தில் வந்து அவளை மேலும் கீழும் உற்றுப் பார்த்தான்.

''அந்த வார்த்தையை திரும்பத் திரும்ப சொல்ல எனக்கே எரிச்சலாய்த்தான் இருக்கிறது. ஆனால் உனக்கு புத்தி வரவேண்டுமென்றால்.. வேறு வழியில்லை... சொல்லித்தான் ஆக வேண்டும்..'' என்றவன் குனிந்து அவளது காதுகளில் அந்த ஐந்தெழுத்து வார்த்தைகளைச் சொன்னான்.

அதைக் கேட்டதும் அவள் முகம் அஷ்ட கோணலுக்குப் போனது... மேலும் கொதிப்பாக உணர்ந்தாள் மதுமதி.

9



மதுமதி அதற்கு மேல் அவன் முன் நிற்காமல் விடுவிடுவென வீடு திரும்பிவிட்டாள்.

கொதிப்பு அடங்காமல் வீட்டினுள் நுழைந்தவளுக்கு மடமடவென இரண்டு மூன்று தம்ளர் குளிர்ந்த நீரைக் குடித்தபின்தான் ஓரளவு ஆசுவாசப்படுத்திக் கொள்ள முடிந்தது.



முன் ஹாலில் தயாராய் அண்ணனும் அண்ணியும் அன்றைய ஷூட்டிங் எப்படி நடந்தது? என்பதையறிய ஆவலாய் கேள்விகள் எழுப்பிய போது, ''ஒரு ஐந்து நிமிடம் பொறுங்கள். என்னை நிதானப்படுத்திக் கொண்டு எல்லாவற்றையும் சொல்கிறேன்...'' என்று அமைதி காத்தாள்.

எங்கே தனக்கிருக்கும் ஆத்திரமான கோபத்தில் கடுமையான வார்த்தைகளை பிரயோகித்து அவர்கள் மனதை நோகடித்து விடக்கூடாதே என்றே கொஞ்ச நேரம் பேசாமல் மௌனம் காத்தவள், அண்ணி கொடுத்த சூடான தேநீரைக் குடித்ததும் இயல்புக்கு வந்தாள்.

''இப்போது சொல்கிறேன்...'' என அவள் ஆரம்பித்ததும் அண்ணன் ரகுராமன் பக்கத்தில் வந்து அவள் தலையை பரிவாய் வருடிக் கொடுத்தவன், ''என்ன மதுக்குட்டி, எதும் பிரச்சினையா...? என்னாயிற்று?'' என்றான், கவலையோடு.

அண்ணனின் பாசத்தை வாஞ்சையோடு பார்த்தவள், நடந்த விஷயங்களை மடமடவென சொல்ல ஆரம்பித்து விட்டாள்.

இரண்டு பேரும் விஷயத்தை கேட்க அப்படியே அதிரத்தான் செய்தனர்!

''என்ன காதல் வசனங்களை பேசுவது போல் படம் எடுத்திருக்கிறார்களா? உன்னை அப்படியே தொட்டுப் பேசுவது போல் எல்லாம் காட்சிகளை அமைத்திருக்கிறார்களா? நீ.. மாட்டேன்... என்று மறுத்து விடுவதுதானே மதுக்குட்டி?''

''ஐயோ.. இந்த விஷயம் எனக்கே தெரியாதண்ணா... நரேந்திரன் சொல்லித்தான் தெரியும்!''

''நரேந்திரன் வேறு என்ன சொன்னார்?''

''படித்துப் பார்க்காமல் பாண்டு பேப்பர்களில் கையெழுத்துப் போட்டிருக்கிறேனாம். அந்த பத்திர ஒப்பந்தப்படி மூன்று மாதம் அவர்களது சீரியல் தொடரில் அவர்கள் சொல்கிறபடி கண்டிப்பாக நடித்தாக வேண்டுமாம். இல்லையென்றால் தொடர் தயாரிப்பாளர்கள் நம்மீது கடும் நடவடிக்கை எடுத்து விடுவார்களாம்...''

''இது.. என்னம்மா.. அநியாயமாய் இருக்கிறது? அதற்காக அவர்கள் சொல்கிறபடியெல்லாம் செய்ய முடியுமா? இது போன்ற காதல் கண்றாவி காட்சிகளில் எல்லாம் நடித்தால் உன் எதிர்காலம் என்னாவது?'' ரகுராமன் நெற்றியைப் பிடித்தபடி கவிழ்ந்து யோசிக்க ஆரம்பித்து விட்டான்.

மதுமதியும் திகைக்கத்தான் செய்தாள்.

அண்ணன் சொல்வது உண்மைதானே? இதுபோல் காதல் வசனங்களை பேசி கண்டவனோடு நடிப்பது தவறுதானே? நாளை கல்யாணம் என்ற ஒன்று நடந்து அவளைத் தாலிகட்டி கொஞ்சப் போகிறவன் இந்த கண்றாவி காட்சிகளைப் பார்த்தால்... அவளைப் பற்றி என்ன நினைப்பான்...?

காசுக்காக இதையெல்லாம் செய்தாயா? என்று கேட்டால்... அவள் துடிதுடித்துப் போய் விடுவாளே?

இல்லை ஒருபடி மேலே போய் அந்த கொழுப்பெடுத்த நரேந்திரன் போல்... ''இப்படியெல்லாம் நடித்திருக்கிறாயே.. உனக்கு கற்பு என்ற ஒன்று உண்டா? இல்லை



வேசி போல் கண்டவனோடு...?'' என்று ஒரு கேள்வி கேட்டு விட்டால் அவள் என்ன செய்வாள்?

- எரிச்சலாய் யோசித்தவளுக்கு.. கேலியும் கிண்டலுமாய் அவள் மனதை நோகடித்த நரேந்திரன் முகம்தான் நினைவுக்கு வந்தது.

எல்லாவற்றுக்கும் காரணம் அவன்தான். தன்னைப் பெரிய மன்மதக்குஞ்சு போல் நினைத்துக் கொண்டிருக்கும் அந்த நரேந்திரன்தான்!

அவனுக்குத்தான் சரியான பாடம் புகட்ட வேண்டும். கோபமாய் நினைத்தவள் நிமிர்ந்து ரகுராமனைப் பார்த்தாள்.

''அண்ணா, இது எல்லாவற்றுக்கும் காரணம், பின்னணி யார் தெரியுமா?''

''யார் மதுக்குட்டி?''

''அந்த பணக்கார நரேந்திரன்தான்! அவன்தான் தொடர்ந்து வம்பிழுத்து சீண்டி வருகிறான். அவனை ரெண்டு தட்டு தட்டினால் எல்லாம் சரியாகிவிடும். உங்களுக்கு யாரேனும் போலீஸ் அதிகாரிகளை தெரியுமா அண்ணா...?''

மதுமதி அப்பாவியாய் கேட்க அவளது அறியாமையை நினைத்து ரகுராமன் சிரிக்கத்தான் செய்தான்.

''என்ன அண்ணா சிரிக்கறீர்கள்...?''

''மதுக்குட்டி, நீ நினைப்பது போல் அந்த நரேந்திரன் சாதாரண பணக்காரன் இல்லை. பெரும் கோடீஸ்வரன். அவனுக்கு அந்த டிவி நிறுவன அதிபருடன் நெருங்கிய தொடர்பு உண்டு. அதனாலே.. அந்த கோல்டன்

டிவியிலும் சரி அவர்கள் ஒளிபரப்பும் தொடரிலும் சரி.. அந்த நரேந்திரன் சொன்னபடியெல்லாம் கேட்கிறார்கள். அதனால்.. இதை வைத்துப் பார்க்கும் போது எனக்கு வேறொரு யோசனையும் தோன்றுகிறதம்மா...''

''என்ன யோசனை அண்ணா?''

''இப்போது.. உனக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தான சூழ்நிலையில் இருந்து உன்னைக் காப்பாற்ற அந்த நரேந்திரன் ஒருவனால்தான் முடியும். அதனால்...''

''பேசாமல் சாட்சிக்காரனை விட சண்டைக்காரன் காலில் விழுந்து விடலாம் என்கிறீர்களா... அண்ணா?''

ரகுராமன் பலமாய் தலையசைத்தான்.

''அதேதான்.. மதுக்குட்டி! யார் யாரையோ பார்த்து கெஞ்சுவதை விட நரேந்திரனைப் பிடித்து கெஞ்சுவோம். உதவுகிறாரா.. என்று பார்ப்போம்...''

மதுமதி பலமாய் மறுப்புடன் தலையசைத்தாள்.

''அது முடியாதண்ணா...''

''ஏன் மதுக்குட்டி?''

''அந்த நரேந்திரனைப் பற்றி உங்களுக்குத் தெரியாது.. சும்மாவே என்னைப் புழுவாய் துடிக்க வைத்து... அதைப் பார்த்து ஆனந்தமாய் ரசிக்கிற ரகம் அந்த நரேந்திரன். அவராவது உதவுவதாவது..? சே...''

ஆனால் ரகுராமன் விடுவதாயில்லை.

''இருக்கட்டும் மதுக்குட்டி. ஆனால் இப்போது உள்ள சூழ்நிலையில் ''அவரைத் தவிர யாராலும் நமக்கு உதவ முடியாது. எதற்கும் முயற்சித்துப் பார்ப்போமே...''



அண்ணன் பலமுறை வற்புறுத்த வேறுவழியில்லாமல் சம்மதித்தாள். கூடவே அந்த யோசனையையும் சொன்னாள்.

''அண்ணா.. அந்த நரேந்திரனை அலுவலகத்தில் சென்று சந்திக்கக் கூடாது.''

''பின்.. வேறு... எங்கு.. மதுக்குட்டி...?''

''அவனது வீட்டிற்குச் செல்வோம். வீட்டில் எப்படியும் பெரியவர்கள், உடன் பிறந்தவர்கள் இருப்பார்கள் இல்லையா...? அவர்கள் முன் நியாயம் கேட்பது போல் இவன் செய்யும் அக்கிரமம் எல்லாவற்றையும் கொட்டுவோம். அவர்களாவது புத்தி சொல்லி இவனைத் திருத்தினால் சரி...''

தங்கை சொல்ல, ''அதுவும் சரிதான்...'' என தலையசைத்தான் ரகுராமன்.

ஆனால்.. நரேந்திரன் முகவரியை கண்டுபிடித்து அவர்கள் சென்றபோது அங்கு ஓர் வினோத அனுபவமே அவர்களுக்கு ஏற்பட்டது.

## 10



நரேந்திரனின் இருப்பிடம் பெரும் பணக்காரர்கள் வசிக்கும் லயன்ஸ் காலனியின், நடுநயமாய், பிரும்மாண்டமான பங்களாவாய் இருந்தது.

விதவிதமான பூச்செடிகள், சீராய் வெட்டப்பட்டிருக்கும் புல்தரைகள், வரிசையாய் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் விதவிதமான கார்கள்... என எல்லாவற்றையும் பிரமிப்புடன் பார்த்தபடி மதுமதியும் ரகுராமனும் நுழைந்தனர்.

பணியாள் ஒருவர் விபரம் கேட்டு.. அவர்களை முன் ரிசப்ஷன் ஹாலில் அமர்ந்திருக்குமாறு சொல்லிவிட்டு செல்ல... இருவரும் அமர்ந்தனர்.

வீடு முழுவதும் சென்ட்ரல் ஏர்கண்டிஷனர் சிஸ்டத்தால் குளிரூட்டப்பட்டிருந்தது. பளபளப்பான மொசைக் சுவர்களை மாடர்ன் ஓவியங்கள் ஆக்கிரமித்திருக்க.. முன் ஹாலைத் தாண்டிய பெரிய ரூமில் கலைநயத்துடனான சிற்பங்கள் மூலைக்கொன்றாய் வைக்கப்பட்டிருந்தன. 'இந்த நரேந்திரன் கலாரசனை உள்ளவன்தான் போலும்..' என அவள் நினைத்துக்கொண்டிருக்கும் போதே கனைப்புச் சப்தத்துடன் நரேந்திரன் தோன்றிவிட்டான்.

அதே கேலிப் புன்னகையும் கண்களில் குறும்புப் பார்வையுமாய் நரேந்திரன் நுழைந்ததும் இருவரும் எழுந்தனர்.

ரகுராமன் பெரிதாய் வணக்கம் போட பதிலுக்கு பெரும் பவ்யம் காட்டி கும்பிடு போட்டான் நரேந்திரன்.

'ஆஹா.. நல்ல நடிப்பு...!' பற்களைக் கடித்தாள் மதுமதி.

நரேந்திரன் இருவரையும் அமரச் சொல்லிவிட்டு எதிர் இருக்கையில் கைகளைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்தான். தொடர்ந்து ஒன்றும் தெரியாதவன் போல் அப்பாவிப் பார்வை பார்க்க மதுமதி அவனையே முறைத்தாள்.



''வீடு தேடி வந்திருக்கிறீர்கள். எதுவும் பெரிய விஷயமாகத்தான் இருக்க வேண்டும்...'' பீடிகை போட்டான் நரேந்திரன்.

''ஆமாம். மதுமதி விஷயம்தான்...'' என்ற ரகுராமனுக்கு விஷயத்தை எப்படி ஆரம்பிப்பது என தயக்கம் காட்ட.. நரேந்திரன் முன் வந்தான்.

''மதுமதி விஷயமா...? என்ன.. என்னாயிற்று மதுமதிக்கு?'' சொல்லியபடி நரேந்திரன் வேண்டுமென்றே குரலில் பதட்டம் காட்ட... மதுமதிக்கு எரிச்சல் அதிகமாகியது.

'என்ன ஒரு நடிப்பு.. இவனை சும்மா விடக்கூடாது. மூக்கை உடைக்க வேண்டும்...' என எண்ணினாள்.

''வீட்டில் யாரும் பெரியவர்கள் இல்லையா?'' என்றாள் ஆத்திரமாய்.

நரேந்திரனின் புருவம் உயர்ந்தது.

''ஓ.. பெரியவர்கள்...?'' என்றபடி திரும்பவும் அந்த வார்த்தைகளை உச்சரித்தவன், ''என்னைப் பார்த்தால் உனக்கு அப்படித் தெரியவில்லையா?'' என்றான் பெரும் வியப்பு காட்டி.

அவளும் விடவில்லை.

''நான் சொல்லும் பெரியவர்கள் வயதில் மட்டுமல்ல அறிவிலும் அனுபவத்திலும் உயர்ந்த நல்லவர்கள்...!'' என்றவள் எப்படியோ அவனை மட்டம் தட்டி விட்ட திருப்தியில் மூச்சிழுத்தாள்.

ரகுராமன்தான் பேச்சு ஒருவிதமாய் போவதைக் கண்டு துணுக்குற்றவன் அவசரமாய் மதுமதியின் கைகளை

அழுத்தி, ''ஷ்.. மதுக்குட்டி.. வந்த விஷயத்தை பேசு வோம்...'' என்றான் அவசரத்தோடு.

''சொல்லுங்கள்...'' என்றான் நரேந்திரன் முகத்தை சீரியஸாக்கி நேரிடையாய் விஷயத்திற்கு வந்தவனாய்.

ரகுராமன் படபடவென ஆரம்பித்துவிட்டான்.

''சார்.. வந்து.. மதுமதி.. இந்த.. டிவி.. காம்ப்பியரிங் சீரியல் தொடர்களில் எல்லாம் இனி ஒரு போதும் நடிக்க விரும்பவில்லை. அதற்கு நீங்கள்தான் உதவ வேண் டும்... அதனால் உங்களை சந்திக்க வந்தோம்...''

''அப்படியா..? டி.வி. ஷோக்களில் நடிக்க விரும்ப வில்லையா...?'' என்றபடி நரேந்திரன் மதுமதியை மேலிருந்து கீழ்வரை ஒரு பார்வை பார்த்தவன்,

''ஆளையும் அலங்காரத்தையும் பார்த்தால் அப்படித் தெரியவில்லையே...?'' என்றான் வியப்புப் பார்வை யுடன்.

மதுமதி அன்று பளபளப்பான ஒரு சேலை கட்டி யிருந்ததையும், காதுகளில் ஊசலாடும் சாவிகள் போன்ற தொங்கட்டான் ஒன்றை அணிந்திருந்ததையும் குத்திக் காட்டியே இப்படிப் பேசுகிறான் என்பதையறிந்தவள், மறுப்பாய் தலையை அசைத்தாள்.

''நடிக்க மாட்டேன்! ஒரு போதும் நடிக்க விரும்ப வில்லை...!'' என்றாள் உறுதியான குரலில்.

''அது... முடியாத காரியம்...'' கைகளை விரித்தபடி நரேந்திரன் பார்வையை சுழற்றினான்.

''எதனால் அப்படி சொல்கிறீர்கள்? பாண்டு பேப்பர் களில் கையெழுத்துப் போட்டிருப்பதனாலா?''



''அதேதான்! அதுவும் படித்துப்பார்க்காமல் கையெழுத் துப் போட்டிருக்கிறீர்கள்...'' என்றவன், தொடர்ந்து, ''அந்த பாண்டு பேப்பர்களில் என்ன எழுதியிருக்கிறதென்று உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியாது..''

இருவரும் பலமாய் தலையை ஆட்ட நரேந்திரனின் முகம் சீரியஸானது.

''அந்த பேப்பர்களில் மூன்றுமாத காலம் நடக்கப் போகும் டி.வி. சீரியல் ஷூட்டிங்கிற்கு எந்தவித இடை யூறும் இல்லாமல் நடித்துக் கொடுப்பதாய் உறுதி கொடுத் திருக்கிறீர்கள். மேலும் அதில் உங்களது உறுதிமொழிபடி நடக்கமுடியாவிட்டால் அதற்குரிய நஷ்ட ஈடுதொகை யாய் ரூபாய் ஒரு கோடியை கொடுத்து விடுவதாகவும் ஒத்துக் கொண்டிருக்கிறீர்கள். இப்போது புரிகிறதா.. நீங்கள் படிக்காமல் கையெழுத்திட்டதால் எவ்வளவு பெரிய ஆபத்தில் மாட்டியிருக்கிறீர்கள் என்பது...?''

''புரிகிறது.. ஸார்..! அந்த பாண்டு பேப்பர் அக்ரீ மெண்ட்டை எப்படியாவது நீங்கள் ரத்துசெய்ய வேண் டும்...'' ரகுராமன் மறுபடியும் கை கூப்ப.. நரேந்திரன் தலையை சிலுப்பினான்.

''அந்த அக்ரீமெண்ட்டை ரத்து செய்வது அவ்வளவு சுலபமல்ல. ஏனென்றால்...''

''சொல்லுங்கள் ஸார்...''

''அந்தத் தொடரை தயாரிக்கும் தயாரிப்பு நிறுவனம்.. கோல்டன் டிவி நிறுவன அதிபருக்கு சொந்தமானது. அந்த அதிபர் சகலவித அதிகார பலமுள்ள பெரும் புள்ளி.

அவரை எதிர்த்தோ... அவர் விருப்பத்திற்கு மாறா யாராவது நடக்க முயற்பட்டால் அப்படியே தொலைத்து விடுவார் தொலைத்து...''

''அவ்வளவு மோசமானவரா அவர்?''

''மோசமானவர் என்பதை விட சர்வ வல்லமை உள்ளவர் என்று சொன்னால் சரியாக இருக்கும். கோடிக்கணக்கான பணம், அரசியல் செல்வாக்கு எல்லாம் அவர் பாக்கெட்டில் இருக்கிறது. அவரை மீறி நம்மால் எதுவும் செய்ய முடியாது...'' உதடுகளைப் பிதுக்கியபடி பேசிய நரேந்திரன் அப்படியே நெற்றி சுருங்க யோசிக்கவும் ஆரம்பித்து விட்டான்.

ரகுராமன் குரலை இன்னமும் குழைவாக்கிக் கொண்டு ஏறக்குறைய கெஞ்சவே ஆரம்பித்து விட்டான்.

''ஸார்.. நீங்கள்.. சொல்வது.. ரொம்பச் சரி! புரிகிறது ஆனால்... எங்கள் நிலைமையை.. கொஞ்சம் யோசித்து பாருங்கள்.. அதுவும் மதுக்குட்டி இந்த சின்ன வயதில் இப்படி ஒரு இக்கட்டில் மாட்டிக் கொண்டு விட்டால், அவளுடைய எதிர்காலம் என்னாவது...?'' ரகுராமன் சொல்லச் சொல்ல..நரேந்திரனும் முகத்தை வேண்டுமென்றே சோகமாக்கி தலையசைத்தவன்,

''ஆமாம்.. ஆமாம்.. மதுக்குட்டி... பாவம்தான்... இல்லையா..... மதுக்குட்டி?'' இளக்காரமாய் கிண்டலாய் அவன் சொல்ல மதுமதிக்கு எரிச்சல் கூடியது.

சட்டென தலையை நிமிர்த்தியவள், ''இதோ பாருங்கள் மிஸ்டர் நரேந்திரன், உங்களுக்கு இந்த இக்கட்டில் இருந்து விடுவிக்க வழி தெரிந்தால் கூறுங்கள்... இல்லை யென்றால்.. தெரியவில்லை என்று கூறிவிடுங்கள்... அதை விட்டு விட்டு...''

கோபமாய் அவள் முடிப்பதற்குள், ''ஒரு வழி இருக்கிறது...'' என்றான் நரேந்திரன் உறுதியான குரலில்.

''என்ன வழி ஸார்...'' பரபரத்தான் ரகுராமன்.

நரேந்திரன் ஒரு கணம் பதில் சொல்லாமல் மதுமதியை உற்றுப் பார்த்தவன், ''அந்த வழி உங்கள் மதுக்குட்டிக்கு பிடிக்குமா என்று தெரியவில்லை...'' என்றான் பிடிவாதத்துடன்.

''சும்மாச் சொல்லுங்கள் ஸார்.. என்ன வாழி?''

''என்னை உங்கள் மதுக்குட்டி மணந்துகொள்ள வேண்டும்!'' என்றான் நரேந்திரன் அமைதியாக.

# 11



மதுமதியால் ஒருகணம் தனது காதுகளை நம்ப முடியவில்லை.

''என்ன.. சொன்னீர்கள்? என்ன சொன்னீர்கள்?'' என்றபடி எழுந்தே விட்டாள்.

''புரியவில்லை...? நீ என் மனைவியாக வேண்டும். அது ஒன்றுதான் வழி...!'' என்றான் நரேந்திரன் சற்றும் பிசிறில்லாத குரலில்.

இம்முறை ரகுராமனும் சற்று அரண்டு விட்டான்.

''ஸார்.. நீங்களா.. இப்படிச் சொல்கிறீர்கள்? உங்களை பெரிய மனிதர் என்று நினைத்தால் நீங்களா இப்படி?'' என்றான் கோபம் பொங்க.

மதுமதி ரகுராமனை சட்டென திரும்பிப் பார்த்தவள், ''அண்ணா.. நான் அப்போதே சொன்னேன் அல்லவா... நான் பார்த்த மனிதர்களில்.. மிகமிக மோசமான மனிதர் இவர்தான்... என்று! இவரிடம் போய் பேசிக்கொண்டு.. வாருங்கள் நாம் போவோம்...!'' இருவரும் கொதிப்பாய் பரபரத்து கிளம்ப அவர்களை சாந்தப்படுத்துவது போல் கைகளை உயர்த்தினான் நரேந்திரன்.

''பொறுங்கள்.. பொறுங்கள்... நான் அப்படி என்ன சொல்லிவிட்டேன்.. ஏன் இப்படி கோபப்படுகிறீர்கள்...?'' என்றான் சாதாரணமாய்.

மதுமதிக்கு மூச்சு வாங்கியது.

''இந்த நடிப்பெல்லாம் என்னிடம் வேண்டாம். பின் நான் பொல்லாதவள் ஆகிவிடுவேன்...'' என்றாள், அதே கோபச் சீற்றலுடன்.

உதடு துடிக்கும் அவளது கோபத்தைக் கண்டு இம்முறை நரேந்திரனால் அடக்க முடியவில்லை. வாய்விட்டு கடகடவென சிரிக்க ஆரம்பித்துவிட்டான்.

அப்போதுதான் இருவருக்கும் நரேந்திரன் வேறு ஏதோ சொல்ல வருகிறான் என்பது புரிந்தது. இருவரும் உற்றுப் பார்க்க நரேந்திரன் புதிரை விடுவித்தான்.

''நான் சொல்வது நிஜமாய் கல்யாணம் செய்து கொள்வது அல்ல.. கல்யாணம் செய்வது போல் ஓர் அறிக்கை விட வேண்டும்...''



''அறிக்கையா...?''

''ஆம். நானும் மதுமதியும் காதலிப்பது போலவும் கல்யாணம் செய்து கொள்வது போலவும் ஓர் அறிக்கை விட்டு எல்லோருக்கும் தெரிவித்து விட வேண்டும்... அது.. போதும்..!''

''சரி... அப்படி அறிக்கை விட்டு தெரிவிப்பதால் என்ன லாபம் இருக்கிறது...?''

ரகுராமன் அப்பாவியாய் கேட்க வேகமாய் தலையசைத்தான் நரேந்திரன்.

''லாபம் இருக்கிறது ரகுராமன். இதே விஷயத்தை கோல்டன் டிவி அதிபரிடம் நானே சொல்லி விடுவேன். நான் திருமணம் செய்து கொள்ள இருப்பதால் இனி மதுமதி டிவி தொடர்களில் நடிக்க மாட்டாள் என்பதை அவரிடம் விளக்குவேன். அவரும் நிலைமையை புரிந்து கொண்டு மதுமதியை பாண்டு அக்ரீமெண்ட்டில் இருந்து விடுவித்து விடுவார். இப்போது புரிகிறதா?''

''புரிகிறது. ஆனால்...''

''சொல்லுங்கள்...''

''மதுமதியை விடுவித்துவிட்டால்.. பின் என்ன நடக்கும்... அதைச் சொல்லுங்கள்...?''

ரகுராமன் கேட்க நரேந்திரன் மதுமதியை கேலியாய் பார்த்தவன், ''வேறென்ன...? இந்த மூஞ்சியை பிடிக்கவில்லை. திருமணம் ரத்தாகிவிட்டது... என நானும் பதிலுக்கு ஒரு அறிக்கை கொடுத்து ஒன்றும் நடக்காமல் பார்த்துக் கொள்கிறேன். எல்லாப் பிரச்சினையும் சரியாகிவிடும். மதுமதியும் தொடர்களில் நடிப்பதில் இருந்து தப்பித்து விடலாம்... என்ன சரிதானே?''

நரேந்திரன் முடிக்கவும் அங்கு பெரும் அமைதியொன்று ஏற்பட்டது.

ரகுராமனும் மதுமதியும் ஒருவரையொருவர் ஆழமாய் பார்த்து யோசிக்க ஆரம்பித்தனர்.

மதுமதிக்கு இந்த ஏற்பாட்டில் கொஞ்சமும் உடன்பாடில்லை என்பதை அவளது முகமே காட்டியது.

அவள் தான் திடும்மென நிமிர்ந்து நரேந்திரனை முறைப்புப் பார்வை பார்த்தாள்.

''ஏன்.. அந்த டிவி அதிபரிடம் இப்படி பொய் சொல்லி நிறுத்துவதற்குப் பதில் அவரிடம் நடிக்க விருப்பமில்லை.. என்ற நிஜத்தை சொல்லியே நிறுத்தலாமே... அவர் உங்கள் நண்பர்தானே...?''

துடிப்பாய் கேட்டவளை மீண்டும் சாதாரணமாய்ப் பார்த்தான் நரேந்திரன்.

''சொல்லலாம் தான். ஆனால் அவர் ஒரு கேள்வி கேட்பாரே. அதற்கு நான் என்ன பதில் சொல்வது...?''

''கேள்வியா... அப்படி என்ன கேள்வி?''

''நீ எதற்குப்பா.. அந்தப் பெண்ணுக்கு இப்படி வக்காலத்து வாங்குகிறாய்? உனக்கு ஏன் இப்படி ஒரு அக்கறை என்பார்... அதற்கு என்ன சொல்லுவது...?''

''கேட்டால்.. சொல்ல வேண்டியதுதானே...? தெரிந்தவள்.. நட்புடன் கூடிய கேர்ள் ப்ரெண்டு.. அது.. இது.. வென...'' மதுமதி இழுக்க வேகமாய் தலையாட்டினான் நரேந்திரன்.

''ம்ம்.. அதைத்தான்.. நீ.. சொல்வதைத்தான் இந்தக் காலத்திற்கேற்ப நம்பும் படியாய் காதலி, கட்டிக்கப்



போகிறவள் என்றெல்லாம் புருடா விடப் போகிறேன்...''

மதுமதி மீண்டும் மௌனமாகி ம்ம் மென்று அவனையே முறைத்தாள்.

நரேந்திரன் அவளையே குறுகுறுப்பாய் பார்த்தவாறு கைகளைத் தேய்த்தவன், ''நான் இப்படிச் சொல்வது, செய்வது எனது அந்தஸ்திற்கும் புகழுக்கும் சற்று இழுக்குத்தான். இருந்தாலும் உனக்காக, நம் மதுக்குட்டிக்காக, இதைச் செய்யத் தயாராய் இருக்கிறேன்...''

பற்களை நறநறவென கடித்தாள் மதுமதி.

அவன் 'மதுக்குட்டி..' என அழுத்தம் கொடுத்து உச்சரித்தது அவளை மேலும் ஆத்திரப்படுத்தியது.

''இந்த நாய்க்குட்டி போல் அழைக்கும் வேலை எல்லாம் என்னிடம் வேண்டாம். மதுமதி என்றே கூப்பிடுங்கள்...'' என்றாள் சினம் பொங்க.

நரேந்திரன் சிரித்தான்.

''ஓ.கே.. ஓ.கே... மதுமதி..! டேக் யூவர் ஒன் டைம். நீங்கள் இருவரும் நன்கு யோசியுங்கள். எனக்குத் தெரிந்த ஒரே வழி இதுதான். மற்றது உங்கள் இஷ்டம்...''

கடகடவென சொல்லிவிட்டு அதற்கு மேல் ஒன்றும் பேசக்கூடாது என்பது போல் கப்சிப்பென வாயை மூடிக் கொண்டான் நரேந்திரன்.

ரகுராமனும் மதுமதியும் எழுந்து விடைபெற்று கிளம்பினர்.

மதுமதி இறுக்கத்துடன் செல்வதையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் நரேந்திரன். அவன்

இதழ்களில் குறுஞ்சிரிப்பொன்று குறும்பாய் படர ஆரம்பித்தது.

# 12



மூன்று நாள் கழித்து நரேந்திரனுக்கு மதுமதியிடம் இருந்து தொலைபேசி அழைப்பு.

''எனக்கு சம்மதம். உங்கள் திட்டப்படி செய்யுங்கள்...'' என்றாள் அவசரக் குரலில்.

''இப்படி மொட்டையாக சொன்னால் எப்படி? விளக்கமாகச் சொல்...'' என்றான் நரேந்திரன் புரியாதவன் போல்.

''விளக்கமாக.. என்றால்...?''

''என்னைத் திருமணம் செய்து கொள்ள உனக்குச் சம்மதம் என்று சொல்...'' என்றான் அழுத்தந்திருத்தமாக.

''இது... நிஜமல்ல. வெறும் அறிக்கைதான்...'' என்றாள் அவளும் அழுத்தமாய் அதே கோபக் குரலில்.

''அறிக்கைதான்! ஆனால் மற்றவர்கள் நம்பும்படி உண்மை போல் சொல்ல வேண்டும். அப்படி அவர்கள் நம்பினால்தான் நமது திட்டமும் நடக்கும். புரிகிறதா?''

''புரிகிறது...''

''ம்ம்.. அப்புறம் இன்னொன்று...''



''என்ன?''

''நீ.. இப்படிச் சொன்னால் மட்டும் போதாது. என்னுடன் வரவும் வேண்டும்...''

''நான் வரவேண்டுமா...? எங்கு? எதற்கு?''

''அந்த கோல்டன் டிவி அதிபரின் அலுவலகத்திற்கு நாம் இருவரும் சேர்ந்து போய் காதலர்களாய் சொன்னால்தான் அவர் நம்புவார்...''

''அந்தக் கண்றாவி வேறவா?'' என்றாள் மதுமதி எரிச்சலாய்.

''கண்றாவிதான்... வேறு வழி? அசிங்கத்தை மிதித்தது நீதானே...? துடைத்துதானே ஆக வேண்டும்...''

''சரி.. வருகிறேன்...''

''ம்ம்.. மாலை நாலுமணிக்கு எனது அலுவலகத்திற்கு வந்து விடு. அங்கிருந்து செல்வோம்...''

''ம்ம்... ம்ம்..'' என்றபடி ரிசீவரை வைத்தாள் மதுமதி.

மாலை நாலுமணிக்கு மதுமதி தனியாகவே சென்று நரேந்திரன் முன் நின்றாள்.

நரேந்திரன் அவளையே உற்று, சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, ''காதலி தனியாக வந்திருப்பது போல் தெரிகிறது...? துணைக்கு அண்ணன் அவர்கள் வரவில்லையா?'' என்றான் கிண்டலாய்.

''இந்தக் கிண்டல் எல்லாம் வேண்டாம். கிளம்புங்கள். எனக்கு வேலை நிறைய இருக்கிறது...'' என்றாள் கறார் குரலில் பேச்சை வளர்க்க விரும்பாதவளாய்.

நரேந்திரனும் பதிலுக்கு தோளைக் குலுக்கினான்.

''ம்ம்.. கிளம்புவோம். எனக்கு மட்டும் வேலை இல்லையா?''

அவனும் பரபரத்து கிளம்பினான்.

பளபளப்பான தனது லான்சர் காரின் டிரைவிங் ஸீட்டில் நரேந்திரன் ஏற பக்கத்தில் இறுக்கமாய் ஏறி உட்கார்ந்து கொண்டாள் மதுமதி.

அவளது மனநிலையை புரிந்து கொண்டவன் போல் ஒன்றும் பேசாமல் காரைக் கிளப்பி விரைவாய் செலுத்திக் கொண்டிருந்தான் நரேந்திரன்.

நெரிசலான சாலைகளில் லாவகமாய் அனாசியத்துடன் அவன் கார் ஓட்டும் விதத்தையும் நீளமான சூட் கோட்டில் கம்பீரமாய் பளீச்சிடும் அவன் முக அழகையும் கண்டு இடையிடையே அவனையே உற்று கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் மதுமதி.

அரைமணி நேர பயணத்திற்குப் பின் கார் பிரம்மாண்டமான கிரானைட் கற்கள் பளபளப்புடன் இருந்த பங்களாவினுள் நுழைந்தது.

அதுதான் கோல்டன் டிவி நெட்வொர்க்கின் அதிபரான தணிகாசலத்தின் பங்களா.

நுழைந்ததும் இருவரையும் புன்னகையுடன் வரவேற்று முன்னறைக்கு அழைத்துச் சென்றார்.

நரேந்திரன் பரஸ்பர பேச்சுகளுக்குப் பின் விஷயத்தைச் சொன்னான். தணிகாசலம் மகிழ்ச்சி அடைந்தவராய், ''கன்கிராட்ஸ் நரேந்திரன் உங்கள் திருமணத்திற்கு வாழ்த்துக்கள்...'' என்றார்.



பின் மதுமதியும் நோக்கித் திரும்பி, ''உனக்கும் வாழ்த்துக்கள் மதுமதி.. நரேந்திரன் மிகத் திறமைசாலி. அவரை கணவராய் அடைய நீ கொடுத்து வைத்திருக்க வேண்டும்...'' என்றார்.

மதுமதி விஷயத்திற்கு வந்தவளாய், ''ஸார்.. இந்த டிவி தொடரில் நடிப்பதற்கு காண்டிராக்ட் ஒப்பந்தம் கையெழுத்திட்டிருக்கிறேன்.. இனி...''

மதுமதி இழுக்க.. புரிந்து கொண்டவராய் தலையசைத்தார் தணிகாசலம். ''டோண்ட் வொரி.. அது பற்றி நீங்கள் கவலைப் பட வேண்டாம். காண்டிராக்ட்டை கேன்சல் செய்துவிட்டு வேறு ஆர்ட்டிஸ்ட்டை தொடரில் புக் செய்ய ஏற்பாடு செய்து விடுகிறேன்..''

அவர் சொன்னதும் பெரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் மதுமதி.

அதன்பின் இருவரும் அவரிடம் விடைபெற்று கிளம்பினர்.

காரில் ஏறி பங்களாவை விட்டு வெளிவந்ததும், ''அப்பாடா.. பெரிய பிரச்சனை தீர்ந்தது...'' என்றாள் மதுமதி.

''இல்லை மதுமதி. பிரச்சினை இனிதான் ஆரம்பமாகப் போகிறது..'' என்றான் நரேந்திரன்.

''என்ன சொல்கிறீர்கள்?''

அவள் திடுக்கிட்டு கேட்க.. பதில் சொல்லாமல் புன்னகைத்தான் நரேந்திரன்.



# 13

நரேந்திரன் புன்னகைத்ததற்கான காரணம் இரண்டு மூன்று நாள் கழித்துதான் மதுமதிக்கு புரிந்தது.

வெளிவந்த நாளிதழ்கள், வாரப் பத்திரிகைகள் என எல்லாவற்றிலும் அவளது புகைப்படத்தை போட்டு, ''டிவி பிரபலம் மதுமதி தொழிலதிபரை மணக்கிறார்...'' என்ற செய்தி வேறு.

அவைகளைப் படித்து கொதித்துப் போனவளாய் உடனே நரேந்திரனுக்கு போன் போட்டாள்.

கோபமாய் அவள் வெடிக்க ஆரம்பிப்பதற்கு முன் நரேந்திரனின் கம்பீரக் குரல் தடுத்தது.

''நீ எதற்கு போன் செய்கிறாய் என்று தெரியும். ஒன்றைப் புரிந்து கொள். நாய் வேஷம் போட்டால் மட்டும் போதாது. குரைக்க வேண்டிய நேரத்தில் குரைத்துதான் ஆக வேண்டும்...''

''அப்படியானால்... இதெல்லாம் உங்கள் ஏற்பாடு தானா?'' என்றாள் கோபம் தணியாதவளாய்.

''நான்.. இல்லை தாயே.. எல்லாம் கோல்டன் டிவி அதிபரின் ஏற்பாடு. அவர்தான் பிரஸ் மீட்டுக்கு ஏற்பாடு செய்து விஷயத்தைச் சொல்லியிருக்கிறார் போதுமா?



போனை வைத்துவிடட்டுமா? எனக்கு நிறைய வேலை இருக்கிறது...!'' என்றபடி ரிசீவரை வைத்து விட்டான் நரேந்திரன்.

மதுமதிக்கு ஒன்றும் ஓடவில்லை.

ஒரே.. போன் கால் அழைப்புகள்! விசாரிப்புகள். வாழ்த்துக்கள். வெளியிலும் தலைகாட்ட முடியவில்லை. மொபட்டை எடுத்துக் கொண்டு ஷாப்பிங் சென்றால்... அங்கும் ஒரே விசாரிப்புகள் தான்! எப்போது எங்கு.. கல்யாணம் என்றெல்லாம் விசாரணை வேறு!

டிவியில் அவ்வப்போது தெரிந்த தனது முகத்தை இவ்வளவு பேர் ஞாபகம் வைத்திருக்கிறார்களா... என மதுமதியே அதிர்ந்து போனாள்.

இப்படியே ஐந்து நாட்கள் சென்றது. அதற்கு மேலும் பொறுக்க முடியாதவளாய் நரேந்திரனிடம் போனாள்.

''நீங்கள் உடனே மறுப்பு அறிக்கை கொடுத்து விடுங்கள். என்னால் தொல்லையை சகிக்க முடியவில்லை...!'' என்றாள்.

பொறுமையாக கேட்டு சிரித்தான். ''பொறு...'' என்றான் தெளிவாய்.

''எதற்கு பொறுக்க வேண்டும்? என்னால் முடியாது...!'' என்றாள் ஆவேசமாய்.

''புரியாமல் பேசாதே; இன்னும் அந்த டிவி தொடருக்கு வேறு ஆர்ட்டிஸ்ட்டை ஒப்பந்தம் செய்யவில்லை. சரியான நபரை தேடிக்கொண்டிருக்கிறார்களாம். நீ இப்போது மறுப்பு அறிக்கை விடச்செய்தால்.. மீண்டும் உன்னையே நடிக்க வைத்து விடுவார்கள்.''

உண்மை அவளுக்கும் புரிந்தது. அவனையே முறைத்துப் பார்த்தபடி நின்றாள்.

''இப்போது நான் என்னதான் செய்வது?''

அவன் மறுபடியும் சிரித்தான்.

''ஒன்றும் செய்ய வேண்டாம். மூன்று வேளை சாப்பிடு. நன்கு தூங்கு. அப்படியும் பொழுது போகவில்லை.... என்றால்...'' அவன் ஒரு நிமிடம் நிறுத்தி விட்டு அவளை உற்றுப் பார்த்தவன், ''என்னிடம் வந்து தாராளமாய் எந்நேரமும் சண்டை போடலாம்...''

அவள் அதற்கு மேல் அங்கு நிற்கவில்லை.

விருட்டென வெளியேறிவிட்டாள்.

அன்றிலிருந்து.. வெளியே எங்கும் செல்லாமல் வீட்டுக்குள்ளே அடைந்து கிடந்தாள்.

ஒரு வாரம் ஒரே எரிச்சலும், கோபமுமாய் சென்றது. பித்துப் பிடித்தவள் போல்தான் சுவரை வெறித்துக் கொண்டு யாரிடமும் பேசாமல் பொழுதை போக்கினாள்.

இன்று பத்தாவது நாள்.

இந்த பத்து நாளும் அவள் நரேந்திரனை பார்க்கவும் இல்லை. அவனிடம் போனில் பேசவும் இல்லை.

அவள் மட்டுமா? அவனும் அவளைப் பார்க்கவில்லையே...? பேசவில்லையே..?

துடிப்பாய் யோசித்தவள் அவசர கதியில் ரிசீவரை எடுத்து நம்பரை அழுத்தப் போனாள். மறுகணமே.. அவனது கிண்டல் கேலிக்குத்தான் நாம் இலக்காவோம் என்பதை உணர்ந்தவளாய் ரிசீவரை கீழே வைத்தாள்.

இந்த பத்து நாட்களில்.. நடந்த விஷயங்களை நினைத்ததை விட தான் நரேந்திரனைப் பற்றி நினைத்துக்



கொண்டிருந்தது அதிகம் என்பதை உணர்ந்தபோது திடுக்கிடவும் செய்தாள்.

என்னதான் நரேந்திரனுடன் கோபமாய் பேசி சண்டை போட்டாலும், அவனைப் பார்க்கும் போதெல்லாம் உள்ளூர ஒரு தவிப்பு ஏற்படுவதை அவள் கண்கூடாய் அறிந்திருக்கிறாள். ஆனால் இன்று...? அவனது பிரிவு.. அவனைப் பார்க்காமல் இருப்பது அப்படி ஒரு தவிப்பை உண்டு பண்ணுவது போல் அல்லவா இருக்கிறது..?

அதே மனநிலையில்... மனதில் பாரம் கொண்டவளாய் மாலை... கடற்கரை ஓர பீச் மணலில் காலாற நடக்கப் போனாள்.

பீச்சில் கூட்டம் அவ்வளவு இல்லை.

ஈரமணலில் காலாற நடந்தாள். மாலைச் சூரியன் மறையும் தருணம் மணலில் அமர்ந்தாள். கடலலைகளையே ரசித்துப் பார்க்க ஆரம்பித்தாள்.

கண்களை வெறித்தவாறு அப்படியே ரொம்ப நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மாலை மயங்கி இருள் மெல்ல மெல்ல பரவியது. அவளையே ரொம்ப நேரம் தூரமாய் நின்று பார்த்துக் கொண்டிருந்த அந்த உருவம்.. மெல்ல நகர்ந்து அவள் பக்கம் வந்தது.

அழுத்தமாய் தனது கரங்களால் அவளது தோள்களை பற்றியது.

உரிமையுடன் தனது தோளில் பட்ட ஸ்பரிசம் கண்டு மதுமதி திகைத்தபடி நிமிர... அங்கு புன்னகையுடன் நரேந்திரன்!

நரேந்திரனை ஒருகணம் அங்கு கண்டதும் அவளுக்கு ஒன்றும் ஓடவில்லை! எழுந்தவள்... என்ன செய்வது..

என்ன வித உணர்ச்சியை காட்டுவது என புரியாமல் ஒரிரு நிமிடம் தவித்தாள். இமைகள் விரிய அவனையே பார்த்தாள்.

அவளை மேலும் தவிக்க விரும்பாதவனாய் அப்படியே இழுத்து அவளை மார்போடு இறுக அணைத்தான் நரேந்திரன்.

அவளைப் பிரிந்த தவிப்பு, மனதினுள் பூட்டி வைத்த இனம் புரியா உணர்வுகளின் விழிப்பு, உணர்ச்சிகளின் வினோதஸ்பரிசம் என எல்லாம் ஒரு சேர அவனை ஆட்கொள்ள, அவளை கட்டியணைத்தவன், மேலும் மேலும் அவளை கரங்களால் இறுக்கினான். தழுவலை வேகமாய்த் தொடர்ந்தான்.

அந்த இதமான அணைப்பில் ஒருகணம் சுகமாய் உணர்ந்தவள்; மறுகணம் அவனது இறுக்கமான இந்த ஆவேச தழுவலுக்கு வேறொரு அர்த்தமிருக்கிறதா? என சந்தேகமாயும் நினைத்தாள்.

அந்த சந்தேகம்.. அடக்க முடியாமல் அவள் வாயி லிருந்து கொதிப்பான கேள்வியாயும் வெளிப்பட்டது.

அதைக் கேட்டு துடித்துப் போனவனாய் ஓங்கி அறைந் தான் அவன்!

# 14



நரேந்திரன் ஓங்கி அறைந்திருந்தான்.



பொலபொலவென கண்ணீர்த்துளிகள் சிதற துடித்து நிமிர்ந்தவள் ஆவலாய் அவன் முகத்தைப் பார்த்தாள்.

கண்கள் சிவப்பாகி எரிமலை போல் ஜொலித்துக் கொண்டிருந்தது அவனது முகம்.

அப்படியொரு கோபத்தை இதுநாள் வரை அவனிடம் அவள் பார்த்ததில்லை.

அவனது கோபமும் அடங்கியபாடில்லை.

தாங்கமுடியாத ஆவேசம் கொண்டவனாய் மீண்டும் அவள் பக்கத்தில் வந்து அவள் தோள்கள் இரண்டையும் இறுகப் பற்றி அப்படியே உலுக்கியவன் மறுபடியும் அவள் முகத்தை நிமிர்த்தி எரிச்சலானான்.

''என்ன.. என்ன.. சொன்னாய்...? திரும்பவும்.. கேள்.. பார்ப்போம்... உன்னை.. உன்னை..'' பெரும் ஆத்திரம் வந்தவனாய் அவன் பற்களைக் கடிக்க இவளுக்கும் கோபம் பீறிட்டது.

நம்மை அடித்துவிட்டு.. வருந்தாமல் இப்படியொரு ஆத்திரமா?

துடித்து சிலிர்த்தவளாய் வெகுண்டு நிமிர்ந்தாள்.

சிவந்து கோபத்தில் கண்களை உருட்டியவனை அவளும் முறைத்தாள்.

அவன் விடவில்லை.

''தைரியமிருந்தால்.. இன்னொருமுறை அந்தக் கேள்வியைக் கேள் பார்ப்போம்...?''

சீறியபடி அவன் கைகளைத் தேய்க்க அவளது எரிச்சல் கூடியது.

''ஓஹோ, மறுபடி அறைய உத்தேசமோ? என் கை ஒன்றும் இனி பூப்பறித்துக் கொண்டிருக்காது. பதிலுக்கு அறை விழும்...!''

- தெளிவாய் தெறிக்கும் வார்த்தைகளுடன் அவள் கைகளை உயர்த்திக் காட்டினாள்.

அவன் அசராமல் அவளைப் பார்த்தான்.

''முட்டாளே... உன்.. உடம்பு.. உடம்புதான் என் குறியா..? என்னை அவ்வளவு மட்டமாக கேவலமாக நினைத்துவிட்டாய்.. அப்படித்தானே...?''

அவன் வேகமாய் கேட்டதற்கு அவளும் வேகமாகவே தலையசைத்தாள்.

''நான் கேட்டது ஒன்றும் தப்பில்லை. ஆரம்பம் முதல் நீங்கள் பேசிய பேச்சு.. அப்படி..''

''அப்படி என்ன ஆரம்பத்தில் பேசினேன்.. சொல்?''

''முதல் முதலாய் காம்ப்பியரிங் பற்றி கேட்க வந்ததிலிருந்து இன்றுவரை நீங்கள் உச்சரிப்பது அதைப்பற்றி தானே? இல்லை என்று சொல்லுங்கள் பார்ப்போம்...?''

அவள் சொடுக்கிடாத குறையாய் கேட்க அவன் தலையை மறுப்பாய் அசைத்தான்.

''நீ முட்டாள். உன்னிடம் பேசி பிரயோஜனமில்லை...'' அவன் உதடுகளைப் பிதுக்கினான்.

அவள் இகழ்ச்சியாய் சிரித்தாள்.

''உண்மை சுடுகிறது. அப்படியாவது புத்தி வந்தால் சரி...''

அவன் சொன்னதற்கு பதில் பேசாமல் நரேந்திரன் கொஞ்ச நிமிடங்கள் அப்படியே முறைத்தான்.



பின் விடுவிடுவென திரும்பி வேகமாய் நடந்தான்.

அவன் போவதையே எவ்வித சலனமுமில்லாமல் பார்த்துவிட்டு அவளும் திரும்பி எதிர்திசையில் நடந்தாள்.

அன்றைய இரவு பொழுது முழுவதும் அவளுக்கு நிம்மதியில்லாமல் கழிந்தது. தூக்கம் வராமல் புரண்டாள்.

நரேந்திரனின் கோபம் கொப்பளித்த முகமும் உருட்டிய சிவந்த விழிகளும் திரும்பத் திரும்ப தோன்றி அவளை இம்சித்தன.

நாம் கேட்ட கேள்வி தப்போ.. என்று கூட சிந்தனை ஓடிற்று.

மறுநிமிடமே, 'சரிதான்.. சரியான கேள்விதான் கேட்டிருக்கிறோம்...' என்றும் எதிர்சிந்தனை கிளம்பியது.

கூடவே நினைத்துப் பார்த்தாள்.

இந்த நரேந்திரன் எம்முறையாவது அவளிடம் பரிவு காட்டியிருக்கிறானா? எந்த விதத்திலாவது மென்மையாய் நடந்திருக்கிறானா?

ஆரம்பம் முதலே அவளைக் கடித்துக் குதறுவதைத் தானே தொழிலாய் கொண்டிருந்தான். அவளைக் கேவலமாய்ப் பேசி எள்ளி நகையாடுவதில்தானே சுகம் கண்டிருந்தான்?

ஒன்றா.. இரண்டா... எத்தனை முறை...? வேண்டுமென்றே மூக்கை நுழைத்து மட்டம் தட்டி அவளை எப்படி அவமானப்படுத்துவது எனத்தானே கங்கணம் கட்டிக் கொண்டு அலைந்தான்?

அவனாவது திருந்துவதாவது...?

அவனது கோணல் புத்தி அப்படித் திடீரென சரியாகிவிட்டால் அது உலக அதிசயமாய்த்தான் இருக்கும்.

அப்படியே நரேந்திரனைப் பற்றிய எரிச்சலான சிந்தனைகளுடன் இரண்டு நாள் கழிந்தது.

அந்த இரண்டு நாளில் அவன் எவ்வித தொடர்பும் கொள்ளாதது அவளுக்கு ஆச்சரியமாகவே இருந்தது.

போன் பண்ணி பேசுவான், எரிந்து விழுவான் என்றெல்லாம் பயந்தவளுக்கு மூன்றாம் நாள் காலை தினசரிகளில் விடை கிடைத்தது.

படித்தவள் அப்படியே அதிர்ந்து போனாள்.

அவள் நினைத்தது சரிதான். புலி பதுங்கியது பாயத்தான்! நரேந்திரன் சரியான சினம் கொண்ட புலி. அவளைக் கடித்துக் குதறுவதுதான் அவனது வேலை. அதை அவன் மாற்றிக்கொள்ளப் போவதே இல்லை...!

காலை தினசரியில் நரேந்திரன் பேட்டி கொடுத்திருந்தான்.

தொழிலதிபரின் காதல் என்ற தலைப்புடன் செய்தி வெளியாகியிருந்தது.

அதில் டிவி தொகுப்பாளினியான மதுமதியை ஒரு வருடம் உயிருக்குயிராய் காதலித்து வருவதாகவும் விரைவில் திருமணம் நடக்க இருப்பதாகவும் நிருபரிடம் ஸ்பெஷல் பேட்டி போல் அளித்திருந்தான்.

செய்திக்குப் பக்கத்திலேயே ஈயென இளித்தபடி அவனது படமும் மதுமதி படமும் பிரசுரமாகி இருந்தது. பார்த்த மதுமதியின் கோபத்திற்கு அளவேயில்லை.

என்ன திமிர் இவனுக்கு! இப்போதுதான் அவளது திருமணப் பேச்சு பற்றி மீடியாக்காரர்கள் மறந்து விட்டு விட்டதாய் நினைக்கும்போது.. வேண்டுமென்றே நிருப



களை அழைத்து பேட்டி கொடுத்திருக்கின்றான்! அனேகமாய் எல்லா தினசரிகளிலும் இந்தச் செய்தி வெளியாகி இருக்க வேண்டும்...!

பொய்யாக பரப்பிய செய்தியை உண்மை போல் மாற்ற இப்படியொரு பேட்டி!

அணைந்து கிடக்கும் நெருப்பு தணலை வேண்டுமென்றே ஊதிப் புகையாக்கியிருக்கிறான்!

நரேந்திரன் வேண்டுமென்றே இப்படிச் செய்திருக்கிறான். எதையோ திட்டம் போட்டு இப்படி வலை விரித்திருக்கிறான்.

என்னவாக இருக்கும்?

அவளை வலைவிரித்து, மறுபடி படுகுழியில் விழ வைத்து, அவளை முட்டாளாக்க - அவன் போட்டிருக்கும் திட்டம். அது என்ன.. எப்படி கண்டுபிடிப்பது? அழகான தலையைச் சாய்த்து ரொம்ப நேரம் சிந்தித்துப் பார்த்தாள் மதுமதி.

அவளுக்கு ஒன்றும் பிடிபடவில்லை.

ஆனால்.. அன்று மாலை நரேந்திரனிடமிருந்து போன் வந்தபோது எல்லாமே பிடிபட்டது.

ரிசீவரை எடுத்து அவள் 'ஹலோ...' என்றதுமே, ''செய்திகளைப் பார்த்தாயா?'' என்றான் நரேந்திரன் எதுவுமே தெரியாத அப்பாவி போல்.

''பார்த்தேன்...''

ஒற்றை வார்த்தையில் சலனமற்ற குரலில் சொல்லிவிட்டு அடுத்து அவன் சொல்லப்போகும் பதிலுக்காக உன்னிப்பாய்க் காத்திருந்தாள்.

''நான் வேண்டுமென்றுதான் நிருபர்களை அழைத்து அப்படி பேட்டி கொடுத்தேன்.''

கர்ஜனைக் குரலில் பெரிதாய் சாதித்து விட்டது போல் அவன் சொல்ல ஒன்றும் பேசாது மௌனம் காத்தாள்.

''எதற்கு..என்று கேட்க மாட்டாயா?''

அவன் பேசாவிட்டால் பதில் சொல்லாமல் இழுத்தடிப்பான் போல் தெரிய வேண்டாவெறுப்பாய், ''எதற்கு?'' என்றாள்.

''நீ சொன்னதை உயிர்ப்பிக்கத்தான்...''

நிதானமாய் அவனிடமிருந்து வந்த பதில் அவளை குழப்பியது.

''நான் சொன்னதா...?''

அதற்கும் விளக்கம் கொடுத்தான்.

''புரியவில்லை? நீ சொன்னாயே உன் உடம்புதான் எனக்கு குறி.. என்று.. அதை மெய்ப்பிக்கப் போகிறேன்... அதுவும் எப்படித் தெரியுமா? மாடுகளுக்கு மூக்கணாங் கயிறு போடுவது போல் உன் கழுத்தில் தாலி ஒன்றை கட்டி...''

அவன் பேச்சை அலட்சிய சிரிப்புடன் முடிக்க.. அவள் ஆக்ரோஷமாய், ''வடிகட்டிய விஷமத்தனம்!'' என்றாள் பற்களைக் கடித்தவாறு.

''விஷமத்தனமல்ல.. உன் திமிருக்கு சரியான தண்டனை...''

''ஒரு போதும் இது நடக்காது. வீண் கற்பனைகள் காணாதீர்கள் மிஸ்டர் நரேந்திரன்.''

அவளது பேச்சுக்கு மறுபடியும் பெரிய சிரிப்பு சிரித்தான்.



''அதையேதான் நானும் சொல்கிறேன். கற்பனை காண்பது நீ. அதை நிஜமாக்கப்போவது நான். மிஸ். மதுமதி ஒன்றைப் புரிந்து கொள்.''

''என்ன?''

''பொய்யை உண்மை போல் சொல்லியது நீதான். அது இப்போது நிஜமாகவே உண்மையாகப் போகிறது. மேலும்...''

''......''

''இம்முறை நீ டிவி அதிபரிடமிருந்து மட்டுமல்ல.. என்னிடமிருந்தும் தப்ப முடியாது.. உன் திமிர்த்தனத்திற்கு சரியான பாடம் இந்த முறை கிடைக்கும் பார்...''

''அதையும் பார்த்துவிடுவோம்.. மிஸ்டர் நரேந்திரன்...''

அலட்சியத்துடன் சிறிதும் பயமில்லாத குரலில் பேசியவள் அதற்கு மேல் பேச்சை வளர்க்க விரும்பாதவளாய் சட்டென ரிசீவரை வைத்தாள்.

துணிச்சலாய் பேசி விட்டாளே தவிர அவளால் அதற்கு மேல் நிம்மதியாய் இருக்க முடியவில்லை.

பயம் பெரும் கவலையாய் வாட்டியது.

பார்க்கிறவர்கள் எல்லாம் தொழிலதிபருடன் காதலா... திருமணமா? என்று கேட்டு.. வெளியே தலை காட்ட முடியாத அளவிற்கு முடங்கிப் போயாயிற்று! இதில் நரேந்திரன் வேறு இப்போது எதிரியாகி திரும்பவும் விஷயத்தைப் பற்ற வைத்தால்...?

கவலை கொண்டவளாய் வாடிய முகத்துடன் அப்படியே ரொம்ப நேரம் தலைசாய்த்து உட்கார்ந்திருந்தவள் யாரோ தன்னை மெல்ல தட்டுவது கண்டுதான் உணர்வுக்கு வந்தாள்.

அண்ணன் ரகுராமன் நின்று கொண்டிருந்தான். அவன் முகத்திலும் கவலையின் கோடுகள்.

''என்ன.. மதும்மா ரொம்பவும் வருந்துகிறாயா?'' என்றான் பரிவாய்.

மதுமதி நீளமாய் இழுத்து மூச்சிட்டவாறு தலையைச் சிலுப்பியவள் அப்படியே நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

''இல்லையண்ணா.. இப்போது பிரச்சினை வேறு மாதிரியாகப் போகிறது...''

''என்ன மது சொல்கிறாய்.. வேறு மாதிரியாக என்றால்...?''

''நரேந்திரன் நமக்கு எதிரி போல் செயல்பட ஆரம்பித்து விட்டார்...''

ரகுராமன் அவள் சொல்வதைக் கேட்டு புரியாமல் விழிக்க ஆரம்பிக்க.. நடந்த விஷயங்கள் அனைத்தையும் அவனுக்கு விளக்கினாள்.

ரகுராமன் கேட்டவன் அதிர்ச்சியான முகத்துடன் எழுந்தே விட்டான்.

''இவ்வளவு நடந்திருக்கிறது.. என்னிடம் சொல்லாமலே இருந்துவிட்டாயே மதும்மா?'' ஆதங்கத்துடன் கேட்டவனை அமைதியாகவே பார்த்தாள் மதுமதி.

''அதற்காக.. ரொம்பவும் பயப்படத் தேவையில்லை, விஷயம் நம் கை மீறி போய் விடாதென்று நினைக்கிறேன்...''

''இல்லை.. மது.. நீ நினைப்பது போல் இல்லை. அந்த நரேந்திரன் உனக்கு நிச்சயமாய் பலவித நெருக்கடிகள் கொடுக்கப் போகிறான். அதில் இருந்து தப்பிக்க நீ ரொம்பவே போராட வேண்டும்..''



பயந்தபடி ரகுராமன் பேச, அவனை முன் தைரியம் கொண்டவள் போல் எழுந்து கைகளைக் கட்டிக் கொண்டாள் மதுமதி.

''அண்ணா ஒரு விஷயத்தை யோசித்துப் பார். இந்த நரேந்திரனால் மிஞ்சி மிஞ்சிப் போனால் என்ன செய்ய முடியும்? கல்யாண ஏற்பாடுகளைச் செய்ய முடியும்? ஊரெல்லாம் தம்பட்டம் அடித்து கூட்டத்தை கூட்ட முடியும்.. ஆனால்...''

''சொல் மதும்மா...''

''மணப்பெண் என்ற முறையில் நான் இளிச்சவாய்த்தனமாய் கழுத்தை நீட்டினால்தானே அவரால் தாலி கட்ட முடியும்...?''

மதுமதி சொல்ல.. ரகுராமன் மறுப்பாய் தலையை ஆட்டினான்.

''இல்லை மதும்மா.. நீ நரேந்திரனை தவறாய்ப் புரிந்திருக்கிறாய். உன்னை கட்டாயப்படுத்தி தாலி கட்டுவது அவர் நோக்கம் அல்ல...''

''பின் வேறு எதுன்னா?''

''உன்னை அவமானப்படுத்தி மறுபடியும் தலை குனிய வைக்க.. நரேந்திரன் போட்டிருக்கும் திட்டம்தான் இது...''

மதுமதிக்கும் புரிந்தது.

கோபமாய் கண்கள் விரியப் பார்த்தாள்.

''நீ சொல்வது புரிகிறது. நரேந்திரன் அப்படிப்பட்ட ஆள்தான். என்னை பழி வாங்குவதே அவனது குறி.. லட்சியம்...!''

மதுமதி சொன்னதற்கு பதில் சொல்லாமல் ரகுராமன் கொஞ்ச நிமிடங்கள் சிந்தனையில் ஆழ்ந்தான்.

பின் பொறி தட்டியவன் போல் நிமிர்ந்தான்.

''மதும்மா, இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண இனி ஒரே ஒரு வழிதான் இருக்கிறது...'' என்றான்.

மதுமதி நிமிர்ந்து அவனையே பார்த்தாள்.

''என்ன வழிண்ணா?''

ரகுராமன் முகத்தில் இறுக்கம் கூடியது.

''பேசாமல் அந்த டிவி அதிபரையே போய்ப் பார்ப் போம். அவரிடமே நிலைமையை விளக்கி வழி கேட் போம். சாட்சிக்காரனை விட சண்டைக்காரன் காலில் விழு வது எவ்வளவோ மேல்...''

''என்ன.. மறுபடியும் டிவி அதிபரிடமா?'' அதிர்ந்து போய் கேட்டாள் மதுமதி.

# 15



மறுபடியும் டிவி அதிபரிடமா? என அதிர்ந்துதான் போனாள் மதுமதி.

ரகுராமன்தான் தோள்களை குலுக்கியபடி அவள் முன் வந்தான்.



''எதற்கு பயப்படுகிறாய் மதும்மா? நாம் ஒன்றும் அவரிடம் சண்டையிட போகவில்லையே... சரணாகதி யாய் காலில் விழத்தானே போகிறோம்...?''

- ரகுராமன் சொல்ல மதுமதியின் மைவிழிக் கண்கள் முழுவதுமாய் விரிந்தது.

''நான் பயப்படுவது அதற்கில்லையண்ணா... நான் கேள்விப்பட்டவரை அந்த டிவி அதிபர் பெண்கள் விஷயத்தில் சபலமானவர், மோசமானவர், இரை தேடும் புலி என்றெல்லாம் சில சக டிவி தொகுப்பாளினிகள் என் காதுபடவே வர்ணித்திருக்கிறார்கள்...''

''அப்படியா...?''

''அதுமட்டுமில்லாமல் நான் அப்படி எண்ணுவதற்கு வேறொரு முக்கிய காரணமும் இருக்கிறதண்ணா...''

''என்ன காரணம் மது?''

''அந்த டிவி அதிபர் நரேந்திரனுக்கு நெருங்கிய நண்பராய் வேறு இருக்கிறார். அதனால்...''

''அதனால்...?''

''நண்பரை வைத்து அவரை எடை போட்டு விட முடியாதா? இப்படி கோணல் புத்தியாய் யோசிக்கும் நரேந்திரனை நண்பராய் கொண்டவர் நல்லவராகவா இருக்கப் போகிறார்...?''

''நீ சொல்வதும் சரிதான் மது...''

ரகுராமன் பலமாய் தலையாட்டியவன் பின் ஏதோ தோன்றியவனாய் நிமிர்ந்தான்.

''ஆனால்.. மதுக்குட்டி.. இப்போது உனக்கு ஏற்பட்டிருக் கும் இந்த இக்கட்டான சூழ்நிலையில் கொஞ்சம்

முயற்சித்துப் பார்த்தால் நல்லதுதான் என தோன்றுகிறது.. ஒரு முறை போய் அவரிடம் எல்லாவற்றையும் விளக்கி பேசித்தான் பார்ப்போமே.. ஒருவேளை.. அவர் நல்ல விதமாய் மனம் மாறிவிட்டால்...''

ரகுராமன் சொன்னதற்கு பதில் சொல்லாமல் மதுமதி கொஞ்ச நேரம் யோசித்தவள் கடைசியில் சம்மதித்தாள்.

''சரிண்ணா.. நீ சொல்வது போல் ஒரு முறை போய் பேசித்தான் பார்ப்போம்...? நம்மை மீறி அப்படி வேறு என்னதான் நடந்து விட முடியும்?'' துணிச்சலாய் ஒரு முடிவுக்கு வந்தனர் இருவரும்.

இருவரும் முடிவெடுத்து விட்டார்களே தவிர டிவி அதிபரை சந்திப்பது குதிரைக் கொம்பாக இருந்தது. எப்போது அப்பாயின்ட்மெண்ட் கேட்டாலும் 'பாஸ் பிஸியாக இருக்கிறார்...' என்ற பதிலே பி.ஏ. மூலம் வந்தது.

ஆனால் ரகுராமன் விடாமல் அலைந்து போன் செய்து அனுமதி வாங்கி விட்டான். மறுநாள் மதியம் ஹோட்டல் ஒன்றில் சந்திக்கும்படி 'அப்பாயின்மெண்ட்' கொடுத்திருந்தார்கள்.

''ஹோட்டலா...? அங்கு எதற்கு...?'' என்றாள் வியப்புடன் மதுமதி.

''அங்கு கம்பெனி டைரக்டர்கள் மீட்டிங் ஒன்று நடக்கிறதாம். அது முடிந்ததும் அவரை சந்திக்கலாமாம்..''

மறுநாள் மதுமதி அரைமனதுடனே டிவி அதிபரை சந்திக்க கிளம்பினாள்.

ரகுராமனும் அவளும் குறிப்பிட்ட, 'ரிவர்வியூ ஹோட்டலை' அடைந்து அதிபரை சந்திக்க ரிசப்ஷனில் காத்திருந்தார்கள்.



அரைமணி நேரத்தில் டிவி அதிபரின் செகரட்டரி ஒருவன் வந்து, ''என்ன விஷயமாய் பேசப்போகிறீர்களோ.. அதை சுருக்கமாய் நேரம் கடத்தாமல் பேசிவிட வேண்டும்...'' என்றெல்லாம் பயங்காட்டும் அறிவுறுத்தல் செய்துவிட்டுப் போனான்.

ஒரு மணி நேர காத்திருத்தலுக்குப் பிறகு மீட்டிங் ஹாலுக்குப் பக்கத்தில் உள்ள அறைக்கு அழைக்கப்பட்டார்கள்.

இருவரும் அந்த அறையில் நுழைந்தபோது தெரிந்த பெரிய மேஜையின் பின்னால் உள்ள குஷன் இருக்கையில் டிவி அதிபர் தயாராய் காத்திருந்தார்.

இளமையும் சுறுசுறுப்பும் கலந்த டிவி அதிபரை இருவரும் வியப்பாய் பார்க்க, உதடுகள் பிரியாத அளவான புன்னகையை வீசினார்.

''ஹலோ.. வெல்கம்.. பீ.. ஸீட்டட்...''

எதிர் இருக்கைகளை காட்டினார்.

இருவரும் உட்கார்ந்தார்கள்.

என்ன.. விஷயம்...? என்பது போல் அவர் புருவம் சுருக்க... ரகுராமன் விஷயத்தை எப்படி ஆரம்பிப்பது என்பது போல் தயங்கினான்.

ஆனால் மதுமதியோ தைரியம் கொண்டவளாய், ''ஸார்....'' என்றபடி ஆரம்பித்து விஷயத்தை மடமடவென சொல்லிவிட்டாள்.

டிவி அதிபரின் முகம் மாறி மாறி நிதானத்திற்கு வந்தது.

மதுமதி எல்லாவற்றையும் ஒரே மூச்சில் சொல்லிவிட்டு பெருமூச்சு விட அவர் மதுமதியையே கூர்ந்து பார்த்தார்.

''ஸார்.. நான் சொல்வது உண்மை. என்னை நீங்கள் நம்பலாம்...''

''பின் ஏனம்மா அன்று நரேந்திரனை காதலிப்பதாய் மணமுடிக்கப் போவதாய் எல்லாம் சொன்னாய்...?''

''அது.. அது.. ஸார்... வேறு வழியில்லாமல்.. தொடரில் நடிக்காமலிருக்க.. நரேந்திரன் சொல்லிக் கொடுத்த பொய்தான்... நீங்கள் மன்னிக்க வேண்டும்...''

''அப்படியா...?'' என்றபடி அவர் கண்ணாடியை கழற்றி யோசிக்க ஆரம்பிக்க மதுமதி அவர் முகத்தையே பார்த்தாள்.

டிவி அதிபர் நிமிர்ந்தார்.

''இப்போது என்ன செய்ய வேண்டும் என நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?''

''வேறு ஒன்றுமில்லை ஸார்.. தொடரில் நடிக்கும் காண்ட்ராக்ட்டில் இருந்து விடுவித்தால் போதும்...''

அதிபரின் நெற்றி சுருங்கியது.

''அதற்குப் பதில் வேறு ஒன்று செய்யட்டுமா?

''பேசாமல் நீங்கள் அந்தத் தொடரில் நடியுங்கள்...''

''ஸார்...''

''இருங்கள்.. நான் இன்னும் வார்த்தைகளை முடிக்கவில்லை...''

''சொல்லுங்கள் ஸார்...''

''அந்தத் தொடரில் எவ்வித காதலோ, நெருக்கமான காட்சிகளோ இல்லாதபடி கதையை மாற்றிவிட சொல்கிறேன். உடன் நடிப்பவரின் விரல் நுனி கூட உங்கள் மேல் படாது. என்ன சொல்கிறீர்கள்?''



மதுமதி இந்தக் கேள்வியை சற்றும் எதிர்பாராததால் என்ன பதில் சொல்வது எனப் புரியாமல் திகைத்தாள்.

ரகுராமன்தான் சுதாரித்தவனாய், ''மதுமதி, ஸார் சொல்வது நல்ல யோசனை. நீ சம்மதம் சொல்...'' என்றான் கிசுகிசுப்புடன்.

''சம்மதம் ஸார்..'' என்றாள் மதுமதி.

அத்தோடு அவர்கள் பேச்சு முற்றுப் பெற்றது.

மதுமதி எழுந்து இருகரம் கூப்பி நன்றி தெரிவித்தாள்.

இருவரும் விடைபெற்று ரூமை விட்டு அகலப் போனார்கள்.

''மதுமதி ஒரு நிமிடம்...''

டிவி அதிபர் கைகளை உயர்த்தினார்.

''என்ன ஸார்?''

''ஒரு பர்ஸனல் கேள்வி கேட்கலாமா?''

''கேளுங்கள் ஸார்...''

''நிஜமாகவே உங்களுக்கு நரேந்திரன் மீது காதல் இல்லையா? நீங்கள் அவரை காதலிக்கவில்லையா?''

டிவி அதிபரின் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்று ஒருகணம் அதிர்ந்தாள். மறுகணமே அவளை அறியாமல் வார்த்தைகள் உதிர்ந்தது.

'நிச்சயமாக இல்லை.. ஸார்...''

டிவி அதிபரின் முகம் இறுகிக் கொண்டது போல் மாறி விட்டது.

''நீங்கள்.. போகலாம்...'' என்பது போல் சைகை செய்தார்.

''தப்பித்தோம்.. பிழைத்தோம்..'' என்பது போல் இருவரும் அந்த பெரிய ஸ்டார் ஹோட்டலை விட்டு வெளி வந்து பெருமூச்சு விட்டனர்.

''அப்பாடா.. ஒரு வழியாய் பிரச்சினை முடிந்தது மதுமதி..''

நிம்மதியாய் ரகுராமன் சொல்ல அவனையே சந்தேகம் தோன்றியவளாய் பார்த்தாள் மதுமதி.

''அண்ணா.. இன்னொரு விஷயம்...''

''என்ன.. மது...?''

''மறுபடியும் தொடரில் நடிக்க வேண்டியிருக்கிறதே.. வேறு பிரச்சினை எதும் வந்துவிடாதே?''

''நிச்சயம் வராது... மதும்மா! அதிபர் அவர் சொன்னபடி கதையை மாற்றச் சொல்லி விடுவார். நெருக்கமான காட்சிகள் எல்லாம் தவிர்க்கப்பட்டுவிடும். உனக்குப் பின் எவ்வித சங்கோஜமும் ஏற்படாது அல்லவா...?''

''அப்படித்தான். ஆனால்...''

''என்ன மதும்மா...?''

''இவ்வளவு கசப்பான விஷயங்கள் நடந்த பின் திரும்பவும் டிவி, காமிரா, தொடர் என்று போய் நிற்க மிகவும் எரிச்சலாய் இருக்கிறதண்ணா.''

ரகுராமன் அவள் நிலைமையை புரிந்து கொண்டவன் போல் பக்கத்தில் வந்து அவள் தோள்களை தட்டினான்.

''எனக்குப் புரிகிறது. ஆனால்... மதும்மா.. இந்த ஒன்று தான்... இத்தோடு டிவிக்கு பெரிய முழுக்கு போட்டுவிடு. இனி கோடி ரூபாய் கொடுத்தாலும் சரி இனி நீ டிவி பக்கம் தலை கூட காட்ட வேண்டாம்.... போதுமா?''



''சரிண்ணா..'' என்றபடி சிந்தனையில் குழப்பம் வந்தவளாய் தலையசைத்தாள் மதுமதி.

அன்று மாலையே தொடரின் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களை போனில் அழைத்து டிவி அதிபரிடம் பேசியதை விளக்கினாள். கதையில் மாற்றம் செய்துவிட்டால் தொடரில் தொடர்ந்து நடிக்கத் தயாராய் இருப்பதைத் தெரிவித்தாள்.

ஆனால் அந்த விஷயமே மறுநாள் பேப்பர்களில் 'மதுமதி நடிக்க வருகிறார்...' என செய்தியாய் வந்தபோது அவள் எரிச்சல் கூடியது.

போதாக்குறைக்கு நரேந்திரன் இரண்டு நாள் கழித்து போன் செய்தான். கொக்கரிப்பாய் கர்ஜித்தான்.

''என்ன.. திரும்பவும் நடிக்கப் போகிறாயா? வந்தனம் மகாராணி..! ஆனால் ஒன்றை மறந்துவிடாதே...''

''என்ன?'' என்றாள் எரிச்சலை அடக்கிக் கொண்டு.

''இம்முறை தொடரில் நெருக்கமான காட்சிகள் இல்லாமல் இருக்கலாம். ஆனால்...''

''.........''

''ஆனால்.. என்ன என்று கேட்கமாட்டாயா....?'' என நரேந்திரன் கேட்கவும் பொறுமையிழந்தவளாய், ''சொல்லித் தொலையுங்கள்..'' என்றாள் வெகுண்டு.

நரேந்திரன் பதில் சொல்லாமல் படபடவென சிரித்தான்.

''இதற்கு இப்போது நான் பதில் சொல்ல மாட்டேன். விரைவில் நீ நடிக்கும்போது உனக்கு விடை தெரியும். ஆனால்.. அது.. உனக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுக்கும்...''

பெரும் பீடிகையுடன் சொல்லி முடித்து அவன் அவள் பதிலை எதிர்பார்க்க... எவ்வித பதிலும் சொல்லாமல் டொக்கென ரிசீவரை வைத்தாள் மதுமதி.

அப்படி வைப்பதன் மூலம் அவன் தலையில் ஓங்கி குட்டுவது போன்ற உணர்வு எழுந்து அவளை நிம்மதி யடைய செய்திருந்தது.

ஆனாலும் நரேந்திரன் சொன்ன, 'உனக்கு பெரும் அதிர்ச்சியாய் இருக்கும்...' என்ற வார்த்தைகள் அன்று முழுதும் அவளைக் குடைந்துகொண்டே இருந்தது.

என்னவாக இருக்கும்? நரேந்திரன் இம்முறை என்ன விபரீதம் பண்ணியிருக்கிறான்?

யோசித்து யோசித்து பார்த்தும் ஒன்றும் பிடிபடவில்லை

குழப்பமே மிஞ்சியது.

'சரி.. நடப்பது நடக்கட்டும்...' என அப்படியே விட்டு விட்டாள்.

மறுவாரம் முதல் நாள் ஷூட்டிங் தொடங்க இருப்பதாக புரொடக்ஷன் நிர்வாகி தெரிவித்து விட்டுப்போக... அதற்கு தயாராக ஆரம்பித்தாள் மதுமதி.

மூன்று நாட்கள் கடந்து ஷூட்டிங் நாளும் வந்தது.

எஸ்.ஆர். கார்டன் என சொல்லப்படும் படப்பிடிப்பு தளத்தில் ஷூட்டிங் தொடங்கியது.

சரியான நேரத்திற்குப் போய் ஒப்பனை அறையில் அளவான மேக்கப் சமாச்சாரங்களை போட்டுக் கொண்டு வெளி வந்தாள்.

தொடரின் டைரக்டர் முன் வந்து கதையின் பைல் குறிப்பீடுகளை.. காட்டினார். கதையை அதிபர் சொன்னது



போல் மாற்றிவிட்டதாகவும், உடன் நடிக்க இருக்கும் ஹீரோவாக வேறு ஒருவரை மாற்றி இருப்பதாகவும் தெரிவிக்க.. மதுமதியின் புருவம் வியப்பாய் விரிந்தது.

''அப்படியா...? புது ஹீரோவா? யார் அவர்?'' மதுமதி ஆவலாய் கேட்க டைரக்டர்,

''அதோ அவர்தான்...!'' என எதிரே கை காட்டினார்.

டைரக்டர் காட்டிய திசையில் மேக்கப் அடித்த ஹீரோவாய் சிரிப்புடன் நின்று கொண்டிருந்தான் நரேந்திரன்!



## 16

நரேந்திரன் சிரிப்புடன் ஹீரோ வேஷத்தில் நின்று கொண்டிருந்தான்.

மதுமதி இதை சற்றும் எதிர்பார்க்கவில்லை.

அப்படியே அதிர்ந்து போய் விட்டாள்!

வார்த்தைகள் வராமல் தடுமாறியவளாய் நிமிர்ந்து டைரக்டரைப் பார்த்தாள்.

''என்ன சொன்னீர்கள்.. இவர்.. இவர்.. உடன் நடிக்கும் ஹீரோவா..? நிஜமாகவா?''

''ஆமாம்மா...''

''ஏன் முன்பு நடித்த நாடக நடிகருக்கு என்னாயிற்று?''

''அவர் வேண்டாம்... வேறு ஆளைப் போடுங்கள் என டிவி அதிபர் சொல்லிவிட்டார். நானும் வலைவீசி தேடிப் பார்த்தேன். கதைக் கேரக்டருக்கு இவர்தான் பொருத்த மாய்த் தெரிந்தார். பெரிய தொழிலதிபர். நான்தான் போய் தொடரில் நடிக்க வருகிறீர்களா? என்று கேட்டேன். உடனே சம்மதம் சொல்லிவிட்டார்...''

டைரக்டர் பெரிய கதை போல் விவரித்துச்சொல்ல மதுமதி அதை நம்பமுடியாதவளாய் இமைகளை விரித் தாள்.

இந்த டைரக்டர் உண்மை சொல்கிறாரா.. இல்லை நரேந்திரன் டிவி அதிபருடன் சேர்ந்து கொண்டு நடத்தும் இன்னொரு சூழ்ச்சியா?

அதிர்ச்சி என்று போனில் சவாலாய்ச் சொன்னது இதைத்தானோ?

''என்னம்மா யோசிக்கிறீர்கள்? நரேந்திரன் ரொம்ப நல்லவர்...''

அவள் முகக்குறிப்பைக் கண்டு அவள் தயங்குவதாய் நினைத்து டைரக்டர் சொல்ல மதுமதியின் இதழ்களில் இகழ்ச்சியான சிரிப்பொன்றே பரவியது.

''ஆமாம்.. நரேந்திரன் நல்லவர்.. ரொம்ப நல்லவர்...'' என்றாள் கேலியான தொனியில்.

அதற்குள் அவர்கள் தன்னைப்பற்றி பேசுவதை தூரத்தில் உணர்ந்த நரேந்திரன் அதே சிரிப்பு மாறாத புன்னகையுடன் அவர்களை நோக்கி வர ஆரம்பித்தான்.

முகம் சிவந்தபடி பல்லைக் கடித்துக் கொண்டு அவ னையே பார்த்தாள் மதுமதி.



நரேந்திரன் விஷமச் சிரிப்புடன் அவள் பக்கம் வந்து நிதானமாய் கைகளைக் கட்டிக் கொண்டு அவளையே பார்த்தான்.

''என்ன யோசிக்கிறீர்கள்? இந்தத் தொடரில் ஹீரோ வாய் உனக்கு ஜோடியாய் நடிக்கப்போவது நான்தான். எப்படி என் வேஷம்?''

தான் போட்டிருக்கும் ஃபுல் சூட் கோட்டை உயர்த்தி காட்டியபடி முன்னும் பின்னும் அவளுக்கு காட்டினான்.

மதுமதி எரிச்சலாய் முகம் திருப்பினாள். வேஷம் போட சொல்லியா கொடுக்க வேண்டும்? சரியான வேஷதாரி தானே!

அவள் கோபத்தை புரிந்து கொண்டவன்போல் நரேந் திரன் கைகளை விரித்தான்.

''மிஸ் மதுமதி, அதற்காக நீங்கள் வேறு எதுவும் கற் பனைகள் செய்து பயப்பட வேண்டாம். அதிபர் சொன்னது போல் தொடரில் நெருக்கமான காட்சிகள் எதும் வராது. எனது விரல் நுனி கூட உங்கள் மேல் படாது. நீங்கள் தைரியமாக என்னுடன் நடிக்கலாம்...''

''எனக்கு நடிக்க விருப்பமில்லை. நான் நடிக்க மாட் டேன்...''

இம்முறை மதுமதி நரேந்திரனைப் பார்த்துச் சொல் லாமல் டைரக்டரை நோக்கி சொன்னாள்.

டைரக்டர் பதறியவராய் அவள் பக்கம் வந்தார்.

''என்னம்மா சொல்கிறீர்கள்? என்ன பிரச்சினை உங் களுக்கு?''

''பிரச்சினையே இவர்தான்...'' என சுட்டு விரலை உயர்த்தி நரேந்திரனை நோக்கி கை காட்டினாள் அவள்.

டைரக்டர் புரியாமல் இருவரையும் மாறி மாறி பார்க்க.. நரேந்திரன் முன் வந்து கைகளைத் தட்டினான்.

''பேஷ்... பேஷ்...! நீ இப்படிச் சொல்வாய் என தெரியும். ஆனால் இம்முறை நீ இன்னொரு விஷயத்தை தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமிருக்கிறது...''

''என்ன...?'' என்று கேட்காமலே அவனை எரிச்சலாய்ப் பார்த்தாள் மதுமதி.

''இந்தத் தொடருக்கு இப்போது 'ஸ்பான்ஸர்' செய்வது நான்தான். அதாவது என் கம்பெனிதான். அதனால் இந்தத் தொடரில் யாரை நடிக்க வைக்க வேண்டும் என்று முடிவு செய்ததும் நான்தான்...!'' அவன் சொல்ல அவள் தொடர்ந்து புரியாமல் விழித்தாள்.

''என்ன புரியவில்லையா? விளக்கமாகவே சொல்கிறேன். முதலில் நீ தொடரில் நடிப்பதாய் சொல்லி விட்டு பின் நிறுத்திவிட்டதால் தொடருக்கு ஸ்பான்ஸர் செய்வதாய்ச் சொன்ன பிரபல சோப் கம்பெனி ஒன்று ஸ்பான்ஸர் செய்வதில் இருந்து விலகிக் கொண்டது. டிவி நிர்வாகம் வேறு ஸ்பான்ஸரை தேட ஆரம்பிக்க.. நான் உனக்காக முன் வந்து ஒத்துக்கொண்டேன். பல லட்ச ரூபாய் பைனான்ஸ் செய்து தொடரை ஒளிபரப்பப் போகிறேன்...''

அவன் பெரிதாய் லெக்சர் அடித்து விட்டு நிறுத்த அவள் சற்றும் தாமதியாமல், ''நான் நடிக்க மறுத்தால்... என்ன செய்வீர்களாம்?'' என்றாள் கண்களை உயர்த்திய வாறு.

அவன் அசால்ட்டாய் தோள்களை குலுக்கினான்.

''நீ தாராளமாய் மறுக்கலாம். அப்படி நீ நடிக்க மறுத்தால்.. தொடரின் அக்ரீமெண்ட் படி நீ நஷ்ட ஈடாக



ஒரு கோடிரூபாய் வரை டிவி நிர்வாகத்திற்கு கொடுக்க வேண்டியிருக்கும். அப்படி நீ கொடுப்பதாய் இருந்தால் நீ விலகிக் கொள்ளலாம். என்ன சொல்கிறாய்?''

அவன் சொடுக்கிட்டுக் கேட்க அவள் பதில் சொல்லாமல் பற்களைக் கடித்தாள்.

நரேந்திரன் இன்னும் சற்று அவளுக்கு நெருங்கி வந்தவன் கைகளைக் கட்டிக் கொண்டு அவளை அலட்சியப் பார்வை பார்த்தான்.

''இதோ.. பார்.. மதுமதி, உன் சிறகுகளை எல்லாம் உடைத்துவிட்டேன். இனி உன்னால் என்னுடன் நடிப்பதைத் தவிர ஒன்றும் செய்ய முடியாது. வீண் பிடிவாதம் பிடிக்காமல் என்னுடன் ஒத்துழைத்து நடிப்பதைப் பார். புரிகிறதா?''

விரட்டும் தொனியில் சொல்லியவன் அதே தோரணையில் டைரக்டரை நோக்கித் திரும்பி, ''இனி அவள் நடிப்பாள். நீங்கள் ஆக வேண்டியதைப் பாருங்கள்...!'' என்றான் எகத்தாளமாய்.

மதுமதி ஒன்றும் பேசாமல் கோபத்தை அடக்கியபடி குனிந்தாள்.

அவள் நிலைமை புரிந்தது.

நரேந்திரன் வேண்டுமென்றே காய்களை நகர்த்தி அவளுக்கு கிடுக்கிப்பிடி போடுகிறான்.

இனி டிவி அதிபரிடமும் இப்பிரச்சனையை தூக்கிக் கொண்டு போக முடியாது.

என்னதான் செய்ய?

கொஞ்ச நிமிடங்களில் 'ஸ்கிரிப்ட்' என்ற பெயரில் அவள் பேச வேண்டிய வசன தொகுப்புகளை உதவியாளன் ஒருவன் நீட்டினான்.

அதை வாங்கி கதையோட்டத்தையும் டயலாக்குகளையும் உற்றுக் கவனித்தாள் மதுமதி.

தலைவனை நினைத்து தலைவலி உருகும் சங்க கால காதல் நிகழ்ச்சிகளை மையமாக வைத்து கதை உருவாக்கப்பட்டிருந்தது.

அதில் காதல் தலைவனாய் நடிக்கப் போவது இந்த நரேந்திரனாம். அவனை நினைத்து ஏங்கி ஏங்கி உருகும் தலைவியாக அவளாம்!

நல்ல கூத்துதான்!

வசனப் பகுதிகளை படித்துப் பார்த்தாள்.

அவற்றில் விரசம் இல்லாவிட்டாலும் காதல் ரசம் சொட்டச் சொட்ட எழுதப்பட்டிருந்தது.

தலைவனின் பிரிவால் வாடும் தலைவியாகத்தான் அவளது கதாபாத்திரமும் சித்தரிக்கப்பட்டிருந்தது.

டைரக்டர் வந்து முதல்முதலாய் எடுக்கப்போகும் காட்சியை விவரித்தார்.

அதன்படி நரேந்திரன் அவள் முன் வந்து நிற்பானாம். அவனை வெகுவருடம் கழித்து அப்படி அவள் நேருக்கு நேர் சந்திப்பது போன்ற உணர்ச்சி மிக்க காட்சியாம்...

அந்த காட்சியில் அவன் மீது மிகுந்த காதல் கொண்டவளாய் அவனைப் பார்த்ததும் காணாததை கண்டது போல் முகம் மலர்ந்து, குபீர் சந்தோஷம் கொண்டு தன் உடம்பின் அத்தனை உணர்ச்சிகளையும் முகத்தில் கொண்டு வந்து



பிரதிபலிக்க வேண்டுமாம்... காமிரா க்ளோசப்பாய் வந்து அந்த முக பிரதிபலிப்புகளை துல்லியமாய் படம்பிடித்துக் கொள்ளுமாம்...

டைரக்டர் காட்சி முழுவதையும் விளக்கிவிட்டு மதுமதியின் முகத்தையே கூர்ந்து கவனிக்க.. மதுமதி எவ்வித உணர்ச்சியுமின்றி சலனமில்லாமல் அவரைப் பார்த்தாள்.

''என்னம்மா.. புரிந்துவிட்டதா...? டேக்கிற்கு போகலாமா?''

டைரக்டர் சந்தேகத்துடன் கேள்விக்கணையைத் தொடுக்க.. வேகமாய் தலையசைத்தாள் மதுமதி.

''ஐ.. ஆம்.. ரெடி.. ஸார்..'' என்றாள் அதே உணர்ச்சியற்ற குரலில்.

ஷாட்.. ரெடி.. ஷாட்.. ரெடி.. என்று எல்லோரும் தயாராக ஆரம்பிக்க.. நரேந்திரன் அவன் முன் நடந்து வந்து கம்பீரமாய் நின்று கொண்டான்.

கண்களை உருட்டி மதுமதியை உற்றுப் பார்த்து முகக்குறிப்பைத் தேடினான்.

அவள் அமைதியான பார்வை பார்க்க வேண்டுமென்றே அவளைச் சீண்டினான்.

''என்ன.. மது.. டைரக்டர் விளக்கிய காட்சி புரிந்ததா? தலைவனான என்னைப் பார்த்து நீ என் மீது கொண்டுள்ள அளவு கடந்த காதல் உணர்ச்சிகளை ஏக்கமாய் பிரதிபலிக்க வேண்டும். புரிகிறதுதானே?''

அவன் கேட்க மதுமதிக்கு ஒரு விஷயம் தெள்ளத் தெளிவாய்ப் புரிந்தது.

இந்த தொடரின் கதை, இப்படி பேச வேண்டிய டய லாக் எல்லாமே.. இவன்.. இவன்.. உருவாக்கி கொடுத்து ஏற்படுத்தியிருக்க வேண்டும். அப்படி அவனை நோக்கி காதல் வசனம் அவள் பேசுவது' அவனுக்கு அற்ப சந்தோஷம் ஒன்றை ஏற்படுத்தப் போகிறது போலும்...!

அவள் பேசாமல் அவனையே வெறித்த பார்வை பார்க்க நரேந்திரன் விடாது சீண்டினான்.

''என்ன கேட்டதற்கு பதிலையே காணும்? காட்சி புரிந்து விட்டதா.. இல்லை இன்னொருமுறை டைரக்டரை விட்டு விளக்கச் சொல்லவா?''

மதுமதி இறுக்கம் வந்தவளாய் தலையை வேகமாய் சிலுப்பினாள்.

''அதற்கு அவசியமில்லை. காட்சி புரிகிறது.''

''அதை இப்படி 'உம்' மூஞ்சியை வைத்துக் கொண்டு சொல்லக்கூடாது. கொஞ்சம் சிரித்தபடி சொல்ல வேண்டும். அப்போதுதான் இது போன்ற காதல் காட்சிகளில் நடிக்கத் தோதுவாக இருக்கும்...''

அவன் சொல்லும் அர்த்தத்தையும் தொனியையும் உணர்ந்த அவளுக்கு எரிச்சலே கூடியது.

''மிஸ்டர்.. இது.. வெறும் நடிப்புதான்! எனக்கு நடிக்கத் தெரியும். நான் நடித்துவிட்டுப் போகிறேன்...!''

அவள் ஆத்திரமாய்ச் சொல்ல அதற்கும் பலமாய் தலையாட்டினான் நரேந்திரன்.

''ஆமாம்.. ஆமாம்.. உனக்கா.. நடிக்கத் தெரியாது? நன்றாக நடிக்கக் கூடியவள்தானே?''

''இந்த குத்தல் பேச்செல்லாம் என்னிடம் வேண்டாம் மிஸ்டர்...''



அவள் சுட்டு விரலைக் காட்டி எச்சரிப்பது போல் சொல்ல.. நரேந்திரன் வேகமாய் டைரக்டர் பக்கம் திரும்பினான்.

''பார்த்தீர்களா.. டைரக்டர் ஸார்? உங்கள் தொடரின் கதாநாயகி விட்டால் வில்லன் போல் நினைத்து என்னை அடித்து விடுவார்கள் போல் தெரிகிறதே.. நீங்களே... சொல்லுங்கள்..''

நரேந்திரன் சொல்ல... மதுமதிக்கு சங்கடமாய்ப் போயிற்று.

டைரக்டரும் தர்மசங்கடம் கொண்டவர் போல் தலையைச் சொரிந்தபடி மெல்ல மதுமதி பக்கம் வந்தார்.

அவரது நிலையைப் புரிந்து கொண்டு தன் நிலையையும் உணர்ந்தாள் மதுமதி.

இந்த வேண்டுமென்றே சீண்டி விளையாடும் நரேந்திரனின் சூழ்ச்சிக்கு பலியாகக் கூடாது. நாம் பாட்டுக்கு கடமை போல் நடித்துக் கொடுத்து விட்டு போய்க் கொண்டே இருக்க வேண்டும்.

மனதில் உறுதி வந்தவளாய் நிமிர்ந்து கொண்டாள் மதுமதி.

''நாம் டேக்கிற்கு போகலாம் ஸார்'' என்றாள் டைக்டரைப் பார்த்து.

அதற்குப்பின் டைரக்டர் வசனங்களையும் நடிக்கும் காட்சியையும் விளக்க.. முடுக்கி வைக்கப்பட்ட இயந்திரம் போல மடமடவென வசனங்களை ஒப்புவித்து டைரக்டர் சொன்னது போல் நடித்தாள்.

நரேந்திரனின் கேலிப் பார்வையை, சீண்டலை கெக்கலிப்பை எல்லாம் கொஞ்சமும் பொருட்படுத்தாமல்

நடந்து கொண்டாள். நடிப்பு என்கிற தனது கடமையை மட்டும் செய்தாள்.

ஒரு வழியாய் அன்றைய ஷூட்டிங் இரண்டு மணி நேர தொடர் படப்பிடிப்பிற்குப் பின் முற்றுப் பெற்றது.

'அப்பாடா... ஷாட் முடிந்து விட்டது!' என நிம்மதியுடன் கிளம்பப் போனாள் மதுமதி.

அப்போதுதான் அந்த விபரீதச் செயலைச் செய்தான் நரேந்திரன்!

நகர்ந்து சென்றவளை சட்டென இழுத்து தாவிப் பிடித்த நரேந்திரன் அப்படியே அவளை கட்டியணைத்தான். எல்லோரும் பார்க்க திமிறியவளின் உதடுகளில் முத்தமிடவும் செய்தான்.

## 17



நரேந்திரன் வெறி பிடித்தவன் போல் அவளை இறுக கட்டியணைத்தான். உதடுகளில் அழுத்தமாய் முத்தமிட்டான். அதுவும் ஷூட்டிங் ஸ்பாட்டில்... எல்லோர் முன்னிலையிலும்...!

மதுமதி திடுக்கிட்டு திமிறத்தான் செய்தாள். தடுக்கத்தான் போனாள். ஆனால் அவனது வலுவான இரும்புப் பிடிக்குள் கோழிக்குஞ்சாய்த்தான் அவளது நிலைமை இருந்தது.



சட்டென இழுத்துப் பிடித்து அணைத்து முத்தமிட்டு எல்லாவற்றையும் செய்து விட்டு அவன் விடுவித்த போதுதான் மின்னல் வெட்டியது போல் அவளுக்கு உணர்வே வந்தது.

நடந்ததை உணர்ந்து அருவெறுப்புடன் வெகுண்டவள் துடிக்கும் கோபத்துடன் கைளை விரைவாய் அவனை நோக்கி வீசினாள். அவனது செவிட்டை பதம் பார்க்க அவளது கை துடித்தது.

ஆனால் அவள் அப்படிச் செய்வாள் என எதிர்பார்த்தானோ... என்னவோ.. நரேந்திரன் பட்டென கைகளை உயர்த்தி அவள் அறைவதை தடுத்து விட்டான். துடித்துப் பார்த்தவளை அலட்சியமாய் பார்த்தான்.

''என்னடி.. பெரிய பத்தினியாட்டம் சிலிர்த்துக் கொள்கிறாய்?''

எகத்தாளமாய் அவன் கேட்க அவள் அந்த வார்த்தைகளால் அப்படியே கூசிப் போனாள். என்ன ஒரு அநாகரீகமான வார்த்தை... அதுவும் அவளைப் பார்த்து...!

அவளது சினத்திற்கு அளவே இல்லை.

டக்கென அவனது சட்டையை கொத்தாய் பிடித்து தன் பலம் கொண்ட மட்டும் ஒரு உலுக்கு உலுக்கினாள். ''ஹே.. மிஸ்டர், வார்த்தைகளை அளந்து பேசு. இல்லா விட்டால் உனக்கு மரியாதை கெட்டு விடும்.. ஜாக்கிரதை..!''

அவள் எச்சரிக்க.. தூசியைத் தட்டுவது போல் அசால்ட்டாய் அவள் கைகளைத் தட்டி விலக்கினான். அதே கெக்கலிப்பு சிரிப்புடன் அவனும் முறைத்தான்.

''என்னடி... நான் சொல்வதில் என்ன தப்பு? காசு கொடுத்தால் காதலன் போல் எண்ணி என்னிடம் காதல் வசனம் பேசுவாய். கொஞ்சும் சிரிப்பு சிரிப்புாய். அதோடு ஏன் நிறுதத வேண்டும்? மேலும் நான் காசு தருகிறேன்.. அதற்காக என்னைக் கட்டிப்பிடி. முத்தமிடு. என்ன செய்கிறாயா? அதற்கு உன்னுடைய ரேட் எவ்வளவு.. சொல்லடி..?'' சாட்டையாய் அவன் வார்த்தைகளை வீச அப்படியே துடிதுடித்துப் போனாள்.

நடிப்புத் தொழிலை ஒரே நிமிடத்தில் எப்படி கேவலப் படுத்திவிட்டான்!

நடிப்பது அவளது தொழில். அதற்கான ஊதியம் வாங்குவதை எவ்வளவு மாசுபடுத்துகிறான்...!

பணத்திற்காக காதல் வசனம் பேசுபவள் கட்டிப் பிடிக்க வேண்டியதுதானே...? என எவ்வளவு திமிராய் சொல்கிறான். பெண் என்றால் அவ்வளவு கேவலமாய் போய் விட்டதா இவனுக்கு...?

மனதில் எரிமலையாய் கொதிக்க முடிந்ததே தவிர அவளால் அவன் முன் எதுவும் செய்ய முடியவில்லை. கூனிக் குறுகிப் போய்த்தான் நின்றாள்!

காலங்காலமாய் பெண்ணின் உணர்வுகளை நசுக்கிப் போடும் ஆண் என்கிற மமதையில் அதிகார கர்ஜனையில் ஆணவமாய் கொக்கரிக்கிறான். அவன் முன் அவளால் வேறு என்ன பேசமுடியும்?

ஓரிரு நிமிடம் எதுவும் செய்யத் தோன்றாதவளாய் அப்படியே ஸ்தம்பித்து நின்றவள் சுதாரித்து, இது போன்ற ஜென்மங்களுடன் பேசுவதே பாவம் என்ற நினைப்பில் விடுவிடுவென அங்கிருந்து அகல ஆரம்பித்தாள்.



''ஹேய்.. நில்லு... நில்லு..'' அவளுக்குப் பின்னால் அவன் கத்திய வார்த்தைகளை பொருட்படுத்தாமல் விருட்டென சென்றாள்.

அன்று நடந்தவைகளை அவளால் மறக்கவும் முடியாது. தாங்கிக் கொள்ளவும் முடியாது. அவளைக் கட்டிப் பிடித்து.. முத்தமிட்டு.. எல்லோர் முன்னிலையிலும் கேவலமாய் பேசி.. என்னவெல்லாம் செய்துவிட்டான் நரேந்திரன்?

கண்களில் நீர் திரையிட்ட போதும் துடைத்துக் கொண்டு துணிச்சலாய் நிமிர்ந்துதான் உட்கார்ந்திருந்தாள். அண்ணன் அண்ணியிடம் கூட விஷயத்தைச் சொல்லவில்லை. நம் பிரச்சினை நாமே சந்திப்போம். எதற்கு அவர்களை சங்கடப்படுத்துவானேன்? என பேசாமல் இருந்துவிட்டாள்.

ஆனால் அவள் சொல்லா விட்டாலும் விஷயம் மாலை தினசரிகள் மூலம் வெட்ட வெளிச்சமாயிற்று.

அன்றைய மாலை தினசரிகள் எல்லாவற்றிலும், ''டிவி படப்பிடிப்பில் கட்டிப்பிடித்து முத்தமழை...'' என்ற தலைப்புடன் அவளைப் பற்றிய செய்தி வெளியாகி இருந்தது.

செய்தியின் உள்ளே நரேந்திரனும் அவளும் காதல் ஜோடிகள் போலவும் காதல் மயக்கத்தில் படப்பிடிப்பு தளத்தில் எல்லோர் முன்னிலையிலும் அப்படி காதல் சரஸமாடியது போலவும் விரிவாய் எழுதியிருந்தார்கள்.

படித்துவிட்டு ஆத்திரமாய் பேப்பரை மடித்து கீழே போட்டாள். சந்தேகமில்லை. இதுவும் நரேந்திரனின் வேலையாய்த்தான் இருக்கும்.

ஒரு வேளை இப்படிச் செய்தி வர வேண்டும் என்று தான் அப்படி நடந்து கொண்டானோ?

நிம்மதியின்றி அவள் யோசிக்க அண்ணனும் அண்ணி யும் விஷயமறிந்தவர்களாய் அவளைத் தேடி வந்து விட்டனர்.

அண்ணன் ரகுராமன் கவலை தோய்ந்த முகமாய் பார்த்தான்.

''என்ன மதும்மா.. இப்படி..? எல்லோர் முன்னிலை யிலுமா நடந்தது...?''

மதுமதி மெல்ல தலையசைப்பு செய்தாள்.

ரகுராமனின் முகம் கோபமாய் விரிந்தது.

''அந்த நரேந்திரன் என்னதான் நினைத்துக் கொண் டிருக்கிறான்? அவனை சும்மாவிடக் கூடாதம்மா... கேட் பதற்கு ஆள் இல்லை.. என்று நினைத்து விட்டானா? நான் போய் நாக்கை பிடுங்குகிற மாதிரி நாலு கேள்விகள் கேட்டுவிட்டு வரட்டுமா மதும்மா?''

ஆவேசமாய் அதே சமயம் அக்கறையும் பரிவும் பொங்க கேட்டவனை சாந்தமாய்ப் பார்த்தாள் மதுமதி.

''வேண்டாமண்ணா. அப்படிச் செய்வதால் எவ்வித பிரயோஜனமும் ஏற்படாது..''

அண்ணி குறுக்கிட்டாள்.

''அதற்காக நாம் சும்மா இருக்கக் கூடாது மதுக்குட்டி. குட்டக் குட்ட குனிந்த கதையாகி விடும்...''

மதுமதி தலையை சிலுப்பிக் கொண்டு நிமிர்ந்தாள்.

''சும்மா இருக்கப் போவதில்லை. இதற்கு சரியான பதிலடி கொடுக்கப் போகிறேன்...''



''எப்படி மதும்மா?''

''அண்ணா, அந்த நரேந்திரன் இப்படிச் செய்வது, காதல் போல் செய்திகளை பரப்புவது எல்லாம் ஒரு திட்ட முடன்தான்... ஒரு நோக்கத்துடன்தான்... என்பது இப்போது எனக்குப் புரிகிறது...''

''அப்படி.. என்ன திட்டம் இருக்கக் கூடும் மது...? எனக்கு இது வேறு மாதிரியாக.. அல்லவா படுகிறது...''

''வேறு மாதிரியாக என்றால்...?''

''மதும்மா.. அந்த நரேந்திரனுக்கு ஆரம்பத்தில் இருந்தே உன்னை மட்டம் தட்டி ரசிக்க வேண்டும் என்கிற பழி வாங்கும் எண்ணம்தான் வெறியாய் இருந்து கொண்டிருக்கிறது. இன்னும் சுருக்கமாக சொன்னால்... ஒரு ஸேடிஸ்ட் போல் உன்னை துன்புறுத்தி அதில் இன்பம் காணும் ஒரு அற்ப மனிதனாகவே நரேந்திரன் எனக்கு அவன் படுகிறான்..''

''நீங்கள் சொல்வது சரி. அப்படி ஸேடிஸ்ட் போல் செயல்படுவதற்கு பின்னணியில் ஒரு வலுவான நோக்கம், காரணம் இருக்கிறது...''

மதுமதி சொல்ல ரகுராமனும் சுமித்ராவும் ஆச்சரியமாக பார்த்தனர். மதுமதி புருவம் உயர கண்களை உயர்த்தியவள் தொடர்ந்தாள்.

''அது.. என்னவென்று சொன்னால் உங்களுக்கு கூட வியப்பாய் இருக்கும்...''

''அப்படி.. என்ன.. அது.. மதும்மா...?''

''திருமணம்...'' என்றாள் மதுமதி.

''திருமணமா...?''

''ஆம்.. அண்ணா... அந்த நரேந்திரனுக்கு ஆரம்பம் முதல் அதுதான் குறி. லட்சியம். என்னை எப்படியாவது அடக்கி தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அடிமை போல் அவன் மனைவியாக்கி.. அதை அவன் ரசிக்க வேண்டும். அந்த வெறியான ஆசையில்தான் இப்படி யெல்லாம் பண்ணிக் கொண்டிருக்கிறான். எனக்கு இப் போது இந்த விஷயம் இந்த சூட்சமும் தெள்ளத் தெளிவாய்ப் புரிந்துவிட்டது...''

மதுமதி சொல்ல.. அப்படியே அதிர்ச்சியாய் ஆனவர்கள் போல் இருவரும் மௌனமாகிவிட்டனர். கொஞ்ச நேரம் அமைதி நிலவ ரகுராமன் நிமிர்ந்தவன் சீரியஸான முகத்துடன் மதுமதியைப் பார்த்தான்.

''மதும்மா, ஒரு முக்கியமான கேள்வி. நீ நன்கு யோசித்து பதில் சொல்ல வேண்டும்... சொல்கிறாயா?''

''கேளுங்கள்...''

''நிஜமாக.. உனக்கு நரேந்திரன் மீது எதாவது ஈர்ப்பு உண்டா...? அவனை நீ விரும்புகிறாயா?''

ரகுராமனின் கேள்விக்கு மதுமதி ஒருகணம் துணுக்குறத்தான் செய்தாள். கேள்வியைக் கேட்டு விட்டு ரகுராமனும் சுமித்ராவும் அவளையே பார்க்க பதில் சொல்ல அவள் நிறையவே யோசிக்க வேண்டியிருந்தது. தலை சாய்த்து ரொம்ப நேரம் சிந்தித்தவள் எந்தவித பதிலும் சொல்லாமல் அப்படியே மௌனமானாள்.

* * *

அன்றிரவு அதற்கு அடுத்து வந்த இரண்டு தினங்கள் என மதுமதியின் சிந்தனை தொடர்ந்தது.

நரேந்திரனை நாம் விரும்புகிறோமா? என்ற கேள்விக்கு பதில் தேடுவதை விட அவன் நிஜமாக தன்னை



விரும்புகிறானா? என்பது பற்றி யோசிப்பதிலே அவளுக்கு நிறைய நேரம் கழிந்தது.

ஆரம்பம் முதல் நினைத்துப் பார்த்தாள்.

நரேந்திரன் அவள் அழகையும், உடம்பையும் இலக் காய் வைத்தே வம்பு பண்ணியிருக்கிறான். சீண்டியிருக் கிறான்.

ஒவ்வொரு முறையும்.. நீ.. பணத்திற்காக.. மானத்தை எல்லாம் இழந்துவிடுவாய் என்ற பரிகாசம் வேறு...!

ஆமாம். இதுநாள்வரை டிவி நிகழ்ச்சிகளில், தொடரில் நடித்திருக்கிறாள். வேறும் எதுவும் பிரச்சனை வந்ததா...?

இல்லை... அவனால்.. அவனால் மட்டும்தானே காயப்பட்டிருக்கிறாள். துன்புறுத்தப்பட்டிருக்கிறாள்...!

அண்ணன் சொன்னது போல் நரேந்திரன் ஒரு ஸேடிஸ்ட் போலத்தானே அவன் நடந்து கொண்டான். அவளை வார்த்தைகளால் குத்திக் கிழித்து அதில்தான் எவ்வளவு ஆனந்தப்பட்டிருக்கிறான்...?

என்றாவது அவள் மனதளவில் எவ்வளவு காயப்படு வாள் என்று நினைத்திருப்பானா? அவள் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்திருப்பானா?

இல்லையே...!

அவள் மனதை நசுக்கி உணர்வுகளைக் கொன்று ஆனந்தப்பட்டிருக்கிறான் தானே?

அவள் மீது பரிவு காட்டியோ அன்பு செலுத்தியோ ஒருநாளாவது நடந்திருப்பானா...?

அவனுக்கு அவள் மீது அன்பில்லை என்றபோது அவள் மட்டும் அவன் மீது அன்பு செலுத்தவா போகி றாள்...?

அவனது நோக்கம்.. ஒரே குறி.. அவளை பணிய வைக்க வேண்டும். அடிமைப்படுத்த வேண்டும். கோழிக்குஞ்சு போல் அவனது இரும்புப் பிடிக்குள் அகப்பட்டு அவள் நசுங்க வேண்டும்...

அது.. ஒரு போதும் நடக்காது. நடக்க விடக்கூடாது... அதை எப்படியாவது முறியடித்தாக வேண்டும்.

அதற்கு என்ன வழி...?

மதுமதி தீவிரமாய் சிந்திக்க ஆரம்பித்தாள்.

அவள் மனதில் அந்த வழி புலப்பட்டது.

அது.......

## 18



அதற்குப்பின் தொடர்ந்து பதினைந்து நாட்கள் டிவி தொடர் ஷூட்டிங் நடைபெற்றது. மதுமதி நரேந்திரனுடன் தான் நடிக்க வேண்டியிருந்தது. அவள் பாட்டுக்கு இயந்திரம் போல் வந்து டைரக்டர் சொல்லிக் கொடுத்ததைச் செய்தாள்.

நரேந்திரனின் சீண்டல்களை, கேலிகளை கொஞ்சமும் சட்டை செய்யாமல் தன் வேலையை மட்டும் பார்த்தாள். ஒரு மாதம் முடிவடையும் போது டிவி தொடரின் முழு ஷூட்டிங்கும் முடிவடைந்து விட்டது.



அவள் ஒப்புக் கொண்ட காண்டிராக்ட் படி தொடரில் நடித்து முடித்தாயிற்று. இனி அவளை நரேந்திரனால் ஒன்றும் செய்ய முடியாது.

நரேந்திரனுக்கு ஒரே ஆச்சரியம். அவள் முன்பு போல் கொதித்து சண்டையிடாமல் அவள் பாட்டுக்கு செல்கிறாளே என்றுதான் வியப்பாய்ப் பார்த்தான்.

ஆனால் மதுமதியின் தொடர்ந்த நடவடிக்கைகள் அவனுக்கு கொஞ்சம் கொஞ்சமாய் விஷயத்தைப் புரிய வைத்தது.

அவன் நினைத்தது போல் மதுமதி டிவி மீடியாவை விட்டு விலகவில்லை. ஓடிப் போகவில்லை.

அவள் முன்பை விட டிவி நிகழ்ச்சிகளிலும் தொடர்களில் நடிப்பதிலும் தீவிரம் காட்டினாள்.

ஆனால்.. முன்பு போல் இளிச்சவாயத்தனமாய் காண்டிராக்ட் பேப்பர்களை படித்துப் பார்க்காமல் அல்ல...

காண்டிராக்ட்டையும் சரி.. தொடரின் முழு திரைக்கதை ஸ்கிரிப்ட்டையும் படித்துப் பார்த்தாள். தான் நடிக்கும் கேரக்டர் எவ்விதத்திலும் தாழ்ந்து போகாமல் கம்பீரமாய் ஒரு புதுமைப்பெண் தோற்றத்தை பிரதிபலிக்கும்படி அமைத்துக் கொண்டாள்... அரைகுறை உடைகள் அணிவதையும் பிற நடிகர்களை தொட்டு நடிப்பதையும் அறவே தவிர்த்தாள். அவள் அப்படி தொடர்ந்து செலக்ட் செய்து நடித்த கேரக்டர்கள் உன்னதமான கருத்துக்கள் பொதிந்த தொடர்கள் மெல்ல மெல்ல பிரபலமாயிற்று. அப்படி கட்டுக்கோப்பாய் நடிப்பதே டிவி உலகில் ஒரு ஃபாஷன் போல் ஆயிற்று.

மதுமதி.. இன்று.. இப்போது பிரபலமான ஒரு டிவி ஸ்டார்! எல்லோர் வீட்டு தொலைக்காட்சி பெட்டியிலும்

தினம் அவளது முகம் தெரியும். அவளைத் தெரியாதவர்களே இல்லை என்று சொல்லுமளவுக்கு ஆயிற்று!

அவள் டிவி நிகழ்ச்சிகள் பண்ணியதிலும் சரி தொடர்களில் நடித்த போதும் சரி... முக்கியமாய் கடைபிடித்தது கொள்கைகள், தனக்கென கௌரவமாய் நடிக்கும் ஒரு பாங்கு. நெருக்கமான காட்சிகள், தொட்டு நடித்தல், கட்டிப்பிடித்தல் போன்ற விரசமான விஷயங்களை எல்லாம் தவிர்த்து விட்டு கௌரவமான வேடங்களில் நடித்த தன்மை!

ஒரு பெண் டிவி மீடியா மட்டுமல்ல எந்த தொழில் துறையிலும் தன்னுடைய சுய கௌரவத்தையும் கட்டுப்பாட்டையும் இழக்கக்கூடாது என்பதில் உறுதியாய் இருந்தால்... நிச்சயம் அந்தத் துறையில் ஜெயிக்க முடியும் என்பதை நிரூபித்தாள்.

நடிப்புத் தொழிலையும் சரி.. நடிப்பவர்களையும் சரி.. கேவலமாய்ப் பார்த்த எல்லோருக்கும் புரிய வைத்தாள்.

முக்கியமாய்.. நரேந்திரனுக்கு...!

நரேந்திரன் அவள் வளர்ச்சியைக் கண்டு பிரமித்து விட்டான். தனது மிரட்டலுக்கும் உருட்டலுக்கும் அடி பணிவாள் என நினைத்ததற்கு அவள் விசுவரூபமெடுத்தது பெரும் அதிர்ச்சி!

இடையில் ஒருநாள் நரேந்திரன் நேரிடையாய் அவளைத் தேடி வந்தான்.

''மதுமதி.. ஒரு முக்கியமான விஷயம்.''

''ம்ம்.. சொல்லுங்கள்..''

''பழசையெல்லாம் மறந்து விடு. நான் உன்னை விரும்புகிறேன். மணந்து கொள்ள ஆசைப்படுகிறேன். உனக்குச் சம்மதமா?''



அவன் ஆவலாய் கேட்டான் வெட்கமின்றி.

மதுமதி ஒரு வினாடி கூட யோசிக்கவில்லை. தயங்கவில்லை.

''ஐ.. ஆம்.. ஸாரி.. மிஸ்டர் நரேந்திரன்! எனக்கு அப்படி ஒரு எண்ணம் இல்லை. ஸாரி...!''

அவள் டக்கென சொல்ல அவன் நம்ப முடியாமல் அவள் பக்கம் வந்தான்.

''என்ன சொன்னாய்? அதுவும் என்னைப் பார்த்தா?''

அவன் நெஞ்சு நிமிர்த்தி கேட்க அவளும் அசராமல் பார்த்தாள்.

''இப்போது என்னைப் பார்த்து இப்படி ஒரு கேள்வி கேட்கிறீர்களே... ஏன் என்று தெரிந்து கொள்ளலாமா?''

அவள் கேள்வியின் அர்த்தத்தை உணர்ந்து கொண்டவனாய் பெரும் மூச்சிழுத்தான். பின் நிதானமாய் அவளைப் பார்த்தான்.

''ஒன்றைப் புரிந்து கொள் மதுமதி. நீ இது போன்ற நிலைக்கு வரவேண்டும் என்றுதான் நினைத்தேன். ஆனால் அபாயத்திலும் ஆபத்திலும் நீ ஒவ்வொரு முறையும் விழும்போது சிக்கிவிடக் கூடாதே என்று பயந்தேன். அதனாலே உன்னை சீண்டி விட்டு கோபப்படுத்தி நல்வழிப்படுத்தினேன். நன்றாக நடந்தவைகளை யோசித்துப் பார். நான் யார் என்பது உனக்குப் புரியும்...''

அவன் சொல்லச் சொல்ல வார்த்தைகள் தேனாய் இனித்துதான் அவள் காதுகளில் பாய்ந்தது.

''நீங்கள் சொல்வது நிஜம்மா? நிஜமாக என் மீது அன்பிருக்கிறதா உங்களுக்கு?''

அதுவரை போட்டிருந்த இறுக்கமான முகமூடியை மெல்ல கழற்றினாள். உண்மை புரிந்தது.

அவள் உள்மனம் விழித்து மனம் மாறினாள். நம்ப முடியாமல் கேட்டாள்.

நம்பமுடியாமல் கேட்டவளின் முகத்தில் கைவைத்து நிமிர்த்தினான்.

"எங்கே.. என் முகத்தை நன்றாகப் பார்... என் முகத்தைப் பார்த்தால்.. உனக்கு எப்படித் தெரிகிறது..? உன்னை மனமார நான் விரும்புகிற விஷயம்.. அதில் என் கண்களில் தெரியவில்லை?!"

அவன் ஆசையாய் கேட்க நிமிர்ந்து அவனையே பார்த்தாள்.

அவள் சந்தேகப்பட்டதுபோல் அவன் அழகை குறி வைக்கும் சராசரி இல்லை. அதற்கு மேலே.. தன்னை விரும்பி மனதில் வைத்து பூஜிக்கும் உன்னதமான மனி தன்! இவ்வளவு நாள் புரியாமல்.. இன்றுதான் புரிகிறது!

அதே பூரிப்பில் முகம் மலர்ந்தவளாய் நிமிர்ந்து அவனது கம்பீரமான ஆண்மை பொங்கும் முக அழகைப் பார்த்தவள் அப்படியே அவன் நெஞ்சோடு இறுக ஒட்டிக் கொண்டாள்.

அவளின் அந்த இதமான ஸ்பரிசத்தில் அவனும் சற்று கோபம் குறைந்தவனாய் மெல்ல அவளை அணைத்துப் பிடித்தவன், சட்டென இறுக்கமாகி மென்னி உலுங்கும் படி அவளை ஆவேசத்துடன் அணைத்தான். பூவான ரோஜா இதழ்களில் மென்மையாய் முத்தமுமிட்டான்.

சட்டென விடுவித்து அவள் முகம் பார்த்தபோது வெட் கத்தில் மருகியவளாய் "என்னை மன்னித்து விடுங்கள்..."



என்றாள் மதுமதி முணங்கலுடன். தான் நரேந்திரனை உள்ளுக்குள் இவ்வளவு நேசித்திருக்கிறோமா? என அவளுக்கே ஆச்சரியமாய்ப் பட்டது. சொக்கிப் போனவள் போல் அவனது நெஞ்சார அணைப்பில் அப்படியே கிடந்தாள். கொஞ்சநேரம் மௌனமாகவே கழிந்தது.

தனது கோபம் தணிந்து அதை ஆமோதிப்பவனாய் மெல்ல தனது உதடுகளை அவளது கன்னங்களை வைத்த நரேந்திரன், வாஞ்சையாய் அவளது நீள கூந்தலழகை வருடி அழகு பார்த்தான். பின், "என் இனிய முட்டாளே..." என்றான்.

அவள் திடுக்கிட்டு நிமிர... சிரித்தபடி பார்த்தவன், "என்ன பார்க்கிறாய்? நான் உன்னைச் சொல்லவில்லை. உனது இந்த அழகான தலைக்குள் சின்னதாய் மூளை என்ற ஒன்று இருக்கிறதே... அதைச் சொல்லுகிறேன்... புரிகிறதா?" என்றான்.

அவள் புரியாமல் விழிக்க.. படபடக்கும் அவளது மைவிழிகளையே ஆசையாய்ப் பார்த்தவாறு, "இந்த விழிகளின் அழகான அபார வீச்சில் நான் வீழ்ந்த கதை கடைசிவரை உனக்குப் புரியவே இல்லையே...!" என்றான் ஆதங்கக் குரலில்.

"என்ன.. என்ன?" என்றாள் ஆவலாய் தன்னைப் போலவே அவனும் விரும்பியிருக்கிறான் என்ற ஆச்சரியத்துடன்!

"இன்னும் புரியவில்லையா உனக்கு...? அவ்வளவு பெரிய டியூப் லைட்டா.. நீ?" - சிரித்தபடி நரேந்திரனின் குரல் கேலி செய்யவும் அவள் பலமாய் மறுத்து தலையசைத்தாள்.

''புரிகிறது.. புரிகிறது...'' என்றாள்.

''என்ன புரிகிறது?''

''நீங்கள் என்னுடைய கண் வீச்சில் காதல் வலையில் விழுந்ததாக சொல்கிறீர்கள். அப்படித்தானே?''

''புளிமூட்டைக்கு இப்பவாவது புரிந்ததே...!''

- சொல்லியபடி அவன் சிரிக்க.. அவளது முறைப்பு கூடியது. கோபமாய்ப் பார்த்தாள்.

''இந்தக் கிண்டல், கேலி போதும். சீரியஸாய் பதில் சொல்லுங்கள். நீங்கள் என்னை காதலித்தீர்களா.. எப்படி இதை நம்புவது?''

- அவன் வாயாலே எல்லாவற்றையும் தெரிய விரும்பியவளாய் கைகளை கட்டிக் கொண்டு காதுமடல்கள் அதிர கேட்டாள்.

அப்படி தலையாட்டிக் கேட்டவளை சாதாரணமாய்ப் பார்த்தான் நரேந்திரன்.

''நம்புவது சுலபம்.. மதுமதி...''

''அதுதான் எப்படி?''

''கொஞ்சம் யோசித்துப் பார்.. நீ போன டிவி அலுவலகம், ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ், ஸ்டூடியோ ப்ளோர்.. இங்கெல்லாம் தவறாது நான் ஆஜராகி இருந்தேனே... எப்படி அது என்று யோசித்தாயா?''

''எப்படி என்றால்...?''

மதுமதி விழிகளை மேலும் அகலமாய் விரிக்க... பற்கள் பளீரிட அழகாய்ச் சிரித்தான் நரேந்திரன்.



''இன்னும் புரியவில்லையா? என் வேலையெல்லாம் விட்டுவிட்டு காதல் கிறுக்குப் பிடித்து உன் பின்னால் அலைந்ததினால்தான் மதுமதி. அதனாலே நீ போகுமிடத்தையெல்லாம் தெரிந்து கொண்டு.. நீ செல்வதற்கு முன் அங்கு சென்று.. தற்செயலாய் உன் எதிரில் வருவது போல் ஒரு ஆக்ட் கொடுத்துச்கொண்டும் இருந்தேன்.

அதை நீ என்றாவது ஒரு நாள் கண்டு பிடிப்பாய் என்றும் நினைத்தேன். ஆனால் நீ கடைசிவரை அதை உணரவில்லை... அதில் எனக்கு ஏமாற்றம் தான்...''

அவன் உணர்ச்சிமயமாய்ச் சொல்ல அவள் வம்பாய் உதடுகளைச் சுழித்து சிரித்தாள்.

''ஆஹா... நல்ல கதைதான்! நம்பும் படியாகத்தான் இருக்கிறது...''

''நான் சொல்வது நிஜம் மதுமதி...''

மதுமதி சீரியஸானவள், ''எப்படி நம்புவது? அப்படி ஒவ்வொரு முறை என்னை சந்திக்கும் போதும் என்ன செய்தீர்கள்? மட்டரகமான வார்த்தைகளால் குத்திக் கிழித்து எனது இதயத்தை துண்டு துண்டாக்கி விட்டீர்களே? அதெல்லாம் மறந்து போயிற்றா?'' - சீறியவளை நோக்கி போலியாய் கை கூப்பினான் நரேந்திரன்.

''ஐயோ.. மதுமதி, அதெல்லாம் உண்மையல்ல... வெறும் சீண்டல்!''

''என்ன.. சீண்டலா...?''

''ஆம்.. ஊடலினால் ஏற்படும் சீண்டல்! அப்படிச் சீண்டினால்தானே நீ மேலும் மேலும் என்னோடு பேசுவாய்? எல்லாம் ஒரு காதல் சைக்காலஜிதான் மேலும் முக்கியமாக..''

''சொல்லுங்கள்..''

'நீ செல்லும் பாதையில் படுகுழிகள் உண்டு. நீ ஏமாந்துவிடக்கூடாது.. என கடுமையாய் எச்சரிக்கவும் அப்படி நடந்து கொண்டேன்...''

நரேந்திரன் சொல்ல.. இம்முறை வேகமாய் தலையசைத்தாள் மதுமதி.

''இந்த விஷயத்தில் நீங்கள் சொல்வது சரிதான். அப்பா.. எத்தனை இன்னல்கள்.. உடை விஷயத்தில் ஆரம்பித்து ஒவ்வொன்றாய்.. கண்ணைத் திறந்து வைத்துக் கொண்டே பெரும் பாதாளத்தில் விழுவது போல்.. என்ன.. தகிடுதத்தங்கள்.. எவ்வளவு ஏமாற்றுத்தனங்கள்? இப்படியெல்லாம் கூட மோசமான மனிதர்கள் இருக்கிறார்களே...!''

அவள் ஆச்சரியமாய் வியக்க.. அவளது பிஞ்சு விரல்களைப் பிடித்து தனது கரங்களோடு கோர்த்தவன், ''இதில் ஆச்சரியமொன்றும் இல்லை.. மதுமதி இப்படிப்பட்ட மனிதர்கள் எல்லா இடத்திலும், எல்லா துறையிலும் இருக்கிறார்கள். நாம்தான் எச்சரிக்கை உணர்வோடு நடந்து கொள்ள வேண்டும்...'' என்றபடி அவள் முகம் நிமிர்த்தி குறுகுறுப்பாய் பார்த்தவாறு, ''சரி.. அது போகட்டும்...உன் விஷயத்திற்கு வா.. நீ.. எப்படி இந்த மன்மதனின் வீச்சில் வீழ்ந்தாய். அதைச் சொல்லு...?'' என்றான்.

அவன் கேட்பதின் அர்த்தத்தை உணர்ந்து வெட்கமாய் சிணுங்கியவள், ''என்ன சொன்னீர்கள்.. மன்மதனா? இந்த அழகான சிடுசிடுத்த மூஞ்சுக்கு ஏற்ற பெயர்தான்...!'' கேலியாய் சொல்லியபடி அவள் சிரிக்க ஆரம்பிக்க, ''என்ன நான் சிடுசிடு மூஞ்சியா?'' என்றான் அவன் கோபமாய்.



''பின் என்னை பார்க்கும் போதெல்லாம் எரிந்து விழுந்த அழகு மூஞ்சியை என்ன சொல்வது...?'' - துடுக்காய் கேட்டவள் ஞாபகம் வந்தவளாய் முகம் நிமிர்த்தி நீளமான புருவங்களை உயர்த்தியவாறு, ''ஆம்.. தெரியாமல் தான் கேட்கிறேன். நான் உங்களை காதலிப்பதாய், காதல் கடலில் விழுந்ததாய் யார் சொன்னது? நான் ஒரு போதும் அப்படிச் சொல்லவில்லையே...?'' என்றாள் அப்பாவியாய் முகத்தை வைத்துக் கொண்டு.

''நீ சொல்லாவிட்டால்.. என்ன? இதோ இப்படி இந்த மன்மதனின் இதமான அணைப்பில் சொக்கிக் கிடக்கும் உனது அழகுத் திருமேனியும், அடிக்கடி என்னைப் பார்க்கும் போதெல்லாம் கிறக்கமாய் சொருகும் உனது கருவிழிகளும்தான் எல்லாவற்றையும் பறைசாற்றி விட்டதே...!''

''நல்ல ஆராய்ச்சிதான்...!''

கைகளை வேகமாய் தட்டியவாறு அவள் சிரிக்க ஆரம்பிக்க.. அவன் நரேந்திரன், ''என்ன நான் சொல்வது உண்மையில்லையா?'' என்றான் சீரியஸான முகத்துடன்.

''அட.. பயத்தைப் பாரேன்...'' என மறுபடியும் அவள் விடாது சிரித்தவள், ''சொல்கிறேன். ஆரம்பத்திலே உங்களைப் பார்த்ததுமே எனக்கு உடன் காதல் வந்து விடவில்லை. ஒருவித ஈர்ப்புதான். விடாது நீங்கள் என்னை வம்பு பேசி நோகடித்தாலும் உள்ளுக்குள் உங்களை ரசிக்கத்தான் செய்தேன். ஆனால்...''

''அட.. இலுவையெல்லாம் வேண்டாம். பயப்படாமல் சொல்லு. நான் ஒன்றும் செய்ய மாட்டேன்...''

''பயமா..? எனக்கா...?'' என்றபடி தலையை சிலுப்பிக் கொண்டவள், ''நான் சொல்ல வந்தது அதுவல்ல.. வேறு...'' என்றாள்.

''வேறு என்னவாம்?''

''ஒவ்வொரு முறையும் நீங்கள் சீண்டி சவால் விடும் போது.. போட்டி போட்டு உங்கள் மூக்கை உடைக்க எண்ணினேன். ஆனால் உடைந்தது என்னவோ..என் மூக்குதான்...!''

''அப்படியா...? எங்கே காட்டு பார்ப்போம்...'' என்றபடி அவன் பக்கத்தில் வந்து அவள் கன்னங்களில் இதழ்களை பதிக்க முயல, சட்டென அவனை விலக்கி நிறுத்தியவள், ''இருங்கள். முழுவதையும் சொல்லிவிடுகிறேன்...'' எனவும், ''சொல்லுங்கள் மகாராணி...'' என்றான் அவன் போலி பவ்யத்துடன்.

''அதிலும் அந்த டிவி தொடரில் தொட்டு நடித்த தாடி ஆசாமி நீங்கள்தான் என்பதையறிந்த போது எவ்வளவு மகிழ்ச்சி உள்ளுக்குள் அடைந்தேன் என்பது எனக்குத் தான் தெரியும். மேலும் ஒவ்வொரு முறையும் அறியாமையால் சிக்கலில் மாட்டிக் கொண்டு தவறுகளின் விளிம்பு வரை போய் உங்களால் காப்பாற்றப்பட்டு.. யப்பா, அதை இப்போது நினைத்தாலும் பயமாய் இருக்கிறதே...''

- என்றபடி அவன் நெஞ்சோடு இறுக அவள் ஒட்டிக் கொள்ள... அவளை அப்படியே மென்மையாய் அணைத்தான் நரேந்திரன்.

''இந்த இதமான அணைப்பும், கதகதப்பும் எப்போதும் எனக்கு வேண்டும்...'' என்றாள் முணங்கலாய்.

''கண்டிப்பாக...'' என்றான் அவனும் சிணுங்கல் குரலில்.



''ஓ.... மறந்து விட்டேனே...!'' என்றபடி குபீரென ஞாபகம் வந்தவளாய் நிமிர்ந்தாள்.

முகம் நிமிர்த்தி படபடக்கும் அவள் மை விழிகளை புரியாமல் பார்த்தான்.

''நான் உங்களிடம் அப்படி திமிராக நடந்து கொண்டதற்கு மன்னிப்பு கேட்க வேண்டுமே? கேட்டு விடட்டும்மா..?'' - மெல்லிய கெஞ்சல் குரலில் அவள் வார்த்தைகளை இழுக்க.. அவன் கம்பீரமாய் தலையை நிமிர்த்திக் கொண்டான். ''மன்னிப்பெல்லாம் கிடையாது. உன் திமிருக்கு சரியான தண்டனைதான் உண்டு...'' என்றான் கறார் குரலில்.

''தண்டனையா? எனக்கா...?'' அவள் தலையை வேகமாய் சிலுப்ப, ''ஆனால் உனக்கல்ல.. உன் உதடுகளுக்கு...!'' என்றபடி அவன் நரேந்திரன் வேகமாய் குனிந்து அவளது பூவிதழ்களை தனது உதடுகளால் நெருங்கினான்.

அந்த தண்டனையை சந்தோஷமாய் ஏற்றுக்கொள்பவளாய்.. வெட்கம் படர கண்களை மூடிக் கொண்டாள் மதுமதி.